DR. ILLANGO & ASSOCIATES
BRACE FOR A GREAT SMILE
SCARBOROUGH OFFICE
3852 Finch Ave. East, Unit 303
டாக்டர் இளங்கோ
டாக்டர் ஜானகி
(416) 292-7004
MISSISSAUGA OFFICE
3025 Hurontario St., # 102
டாக்டர் இரவீந்திரன்
டாக்டர் பத்மா
(905) 270-7844

With a small down payment, you could own your dream home.
Kiruba Kirushan
Service with a Broad Smile
வாங்கவோ? விற்கவோ? BUYING? OR SELLING?
சிறிய தொகையுடன் நீங்களும் ஒரு வீட்டிற்குச் சொந்தக்காரர் ஆகலாம். RENT A HOME, ALL KIND OF INSURANCE
416-414-5562 ALL KINDS OF LOANS & MORTGAGES

SAMY & SONS
1884B Kennedy Rd. (at Ellesmere) Scarborough
- புத்தம் புதிய ஆடை வகைகள்
- சுடிதார் சாறி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலங்காரப் பொருட்கள்
- 22 கரட் தங்க நகைகள்
- துரித பணமாற்றுச் சேவை
- வீடியோ, ஓடியோ, பிரதிமாற்றம்
இன்னும் எழுத்திலடங்காதன
மொன்றியல் சுமித் தொடர்புகளிற்கு
குகன் 514-736-6228
TEL: 416-298-1598 FAX: 416-298-2849

டாக்டர் சண்முகம் சிவநேசன்
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-291-1085
டாக்டர் பகீரதன் (பகி)
குடும்ப பல்வைத்தியர்
Tel: 416-728-0345
3852 Finch Ave. East, #207, Scarborough, Ont. (Between Birchmount & Kennedy

Neelam Silk
தற்பொழுது இரு இடங்களில்
1453 Gerrard St. East, Toronto
Tel: 416-778-7455
2378 Eglinton Ave. East., Scarborough
Tel: 416-759-2002
(Kennedy Rd. & Eglinton Ave.) சந்திப்பில்
www.neelamsilk.com

UNIVERSITY OF JAFFNA LIBRARY 05 NOV 2002 PERIODICAL

UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
416-752-1524 www.uthayan.ca 416-752-6703

INCOME TAX
வீடு, வாங்க, விற்க Mortgage, Income Tax
சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும்
Selva Vettyvel
Tel: (416) 568-4301
Visit to
Jaffna Tailors
272 Markham Road, Scarborough, Ont.
Markham & Eglinton

ALL INSURANCE & FINANCIAL SERVICES
- Auto
- Home
- RRSP
- Group
- Travel
- Business
LIBERTY MUTUAL
London Life
Balan Kanapathi
Office: 416-321-1515
Home: 905-294-2429
Pager: 416-336-4027
Mobile: 416-452-6975
4433 Sheppard Ave. East, Suite 200
Scarborough, ON M1S 1V3

உதயம்: 320 | Chief Editor: R. N. Logendralingam | 07.06.2002 FRIDAY



# மறைந்த தலைவர் சிவாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த விடுதலைப்புலிகளின் பிரமுகர்களும் வவுனியாவில் காத்திருப்பு

முத்த அரசியல் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான அமரர் எம். சிவசிதம்பரத்தின் புகழுடல் கொழும்பில் இருந்து இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது. கிளிநொச்சியில் அன்னாரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் செய்துள்ளனர். இன்று அதிகாலை 2 மணிக்கு கொழும்பில் இருந்து வாகனத் தொடர் அணியாக எடுத்துச்செல்லப்படும் புகழுடலை ஈறப்பெரியகுளத்தில் வைத்து தமிழ்க் கூட்டமைப்பின் வவுனியா கிளைப் பிரமுகர்கள் பொறுப்பேற்பர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் முற்பகல் 11மணிவரை புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். அங்கு தமிழ்க் கூட்டமைப்பு பிரமுகர்களும், விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலவனும் அஞ்சலியுரை நிகழ்த்துவர். அதன் பின்னர் வாகன அணியாக யாழ். நோக்கி எடுத்துச் செல்லும் புகழுடலை விளக்கு வைத்த குளத்தில் விடுதலைப் புலிகள் பொறுப்பேற்பர்.

கிளிநொச்சியில் இருமணி நேரம் வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்துவர். அதன் பின்னர் முகமாலை ஊடாக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்படும் புகழுடல் ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

-கடைசிப் பக்கம் பார்க்க

## உதயன் 2002 விழாவில் WinNet ஹரித் கௌரவிக்கப்பட்டார்



**Internet** துறையில் அதியுயர் தகமை பெற்ற முதல் இலங்கையரான **WinNet** அதிபர் திரு ஹரித் கடந்த உதயன் 2002 விழாவில் கௌரவிக்கப்பெற்றார். படத்தில் டாக்டர் மணிவண்ணன் அவர்கள் ஹரித் அவர்களுக்கு விருதினை வழங்குகின்றார்.

## நடைபவனி – Walk A Thon

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடாத்தும் நான்காவது வருடாந்த நடைபவனி நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை **Kids Town Water Park (Birchmount & McNicoll)**ல் நடைபெறவுள்ளது. அனைவரையும் வருக வருக என அழைக்கின்றோம்.

Tel: 416-264-3345 / 416-431-9624 / 416-722-1034

GOREWAY DENTAL CENTRE
பிறம்ரன், மால்ரன், எற்றபிக்கோ, றெக்ஸ்டேல், டவுண்ஸ்வியு, மிசிசாகா நகரங்களுக்கு
வசதியான பல்வைத்திய நிலையம்
(905) 673-7874
DR. NIRMALA SIVA & DR. C YOGESWARAN
பற்களை ஒழுங்குபடுத்துதலும் இதர பற்சிகிச்சைகளும்
7125 Goreway Drive, Suite 206, Mississauga (Malton)
இலவச ஆலோசனைகளுடன் வாரத்தில் 7 நாட்களும் சேவை

Madras Mahal
Authentic South Indian Family Cuisine L.L.B.O.
வாரத்தில் செவ்வாய் தவிர்ந்த 6 நாட்களும்
புதிய அறிமுகம்
Vegetarian Combos
Non-Vegetarian Combos
Special Price Veg. Thali or Biryani 12 Noon to 5 P.M. only $4.95
விபரங்களுக்கு அழையுங்கள்: 416-269-3666

IATA
AJB TRAVELS
ATAC MEMBER
AWARD WINNER 1993/2000
Tel: 416-412-0244
E-mail: sales@ajbtravels.com Web: www.ajbtravels.com
1900 Kennedy Road, at Ellesmere, Scarborough, Ont. M1P 2L8

ஓம் சாயிராம்
ஜெயசாயி நகை மாளிகை
WHOLESALERS AND RETAILERS
சகலவிதமான தரமான கைவண்ணங்கள் கூடிய நகைத்தேவைகளுக்கு என்றும் நாடுங்கள்
Finest Quality 22k Gold and Singapore Jewellery
Expert Custom Jewellery and Repairs
3601 Lawrence Ave. E. #14, Scarborough, Ontario
Tel: (416) 431-1536 Fax: (416) 431-7712
Newin Centre, 2580 Sheppard Ave., Unit #45
Mississauga, ON (HWY 10 - Dundas)
Tel: (905) 270-1558 Fax: (905) 270-1553

OVER 8,000 FREE CIRCULATION EVERY WEEK IN CANADA


## எல்ஸ்மெயர்
மீன் இறைச்சி மார்க்கட்

இலங்கையிலிருந்து வரும்
ஒட்டி, ஓரா, நெத்தலி, கீளி, பாரை
விளை மீன் யாவும் எம்மிடம்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்

**ELLESMERE FISH & MEAT MART**
1243 Ellesmere Road, Scarborough, ON, M1P 2X8
**TEL/FAX: 416-285-8558**


TEL: 416-752-1524 FAX: 416-752-6703

# சிறு விளம்பரங்கள் உதயன்
# CLASSIFIED ADs


## வீட்டு இடியப்ப மெசின்

இந்த மெசினைப் பாவித்து முறுக்கு,
அச்சுப்பலகாரம், போன்றவற்றை
மிகக்குறுகிய நேரத்தில் செய்யலாம்.
ஒரு தரம் நிரப்பினால் 5
நிமிடத்துக்குள்
25 இடியப்பங்கள் செய்யலாம்.
**Price $ 249**
தொடர்புகளுக்கு
மோகன்:
416-243-6000 Pgr 416-715-4371

## திருமணசேவை
எம்மிடம் ஏராளமான ஆண், பெண் ஜாதகங்கள் உண்டு
இலங்கை, லண்டன், கனடா, சுவிஸ் மற்றும் சகல
நாடுகளிலிருந்தும் ஆண், பெண் ஆகியோருக்கு திருமண
ஒழுங்குகள் சகல வயதினருக்கும் செய்து
கொடுக்கப்படும்
ஜாதகத்தையும், படத்தையும் பின்வரும் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும் நாங்கள் உங்களுடன விரைவில்
தொடர்பு கொள்வோம்
1235 Ellesmere Road, Box 7, Scarborough, ON, M1P 2X8

## HOPPER HUT
ஸ்காபரோ நகரில் சுவைமிக்க
உணவு வகைகளை அருந்தி
மகிழ எம்மிடம் வாருங்கள்
இடியப்பம் அதிவிஷேட விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
880 Ellesmere Road
at Kennedy Unit 215
**(416) 299-4311**


## APARTMENT FOR RENT
Kennedy / Ellesmere
2 Glamorgan Avenue, Scarborough
2 Bedroom Condo with Spacious Living room, Dining room, Eat-in Kitchen & Large Master Bedroom with walking closets.
Close to all amenities.
**Available Immediately July 1st**
**Contact:**
For Details Call: Vakeesan 416-209-9963
Prapa 416-569-3841

## ROOM FOR RENT
Warden / Finch
3 அறைகள் கொண்ட
Apartment ல் 1 Room
வாடகைக்கு உண்டு.
24 hrs TTC மற்றும் Mall,
School என்பன அருகில்
Call: Karan 416-498-9977
Cell: 647-222-5533


## JAY'S
PROFESSIONAL TRUCK TRAINING CENTRE
கனரக வாகனங்களின் அனுமதிப்பத்திரங்களை இலகுவாகவும்
விரைவாகவும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
Classes A, B, C, D & Z Instructors available in Tamil and English
தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிற்சி பெறலாம்
**Jay**
senior Instructor

**Business: (416) 299-9638 Cell: (416) 771-8041 Fax: (416) 609-9814**


## BASEMENT FOR RENT
Pharmacy / Eglinton
2 அறைகள் கொண்ட
Basement
வாடகைக்கு உண்டு.
Close to TTC, School, Mall
AVAILABLE JULY 1, 2002
**416-752-6143**

## Restaurant & Bar For Sale
St. Clair / Victoria Park
சந்திப்பில் நல்ல நிலையில்
இயங்கிக்கொண்டிருக்கும் உணவகம்
L.L.B.O வசதியுடன் விற்பனைக்கு
உண்டு
50 பேர் தொடக்கம் 75 பேர் வரை
அமரக்கூடிய வசதியுண்டு.
விலை **$38, 000 FINAL OFFER**
ஆனால் பேசித்தீர்க்கலாம்
416-564-5963 After 6pm

## A. R. AUTO CENTRE
95 Toyota Corrella 178km Green
93 Toyota Corrella 196km Silver
92 Toyota Correla 187 km White
91 Honda Accord 222 km Silver
90 Toyota Correla 184 km White
**4379 Kingston Road, # 7**
**Tel: 416-286-8642**
**416-266-2982**
**Cell: 416-829-9929**


## சிற்றுண்டி வகைகள்

| | | | |
|---|---|---|---|
| வடை, கடலை, உழுந்து | 20¢ மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள | இட்டலி, லட்டு | 25¢ |
| முறுக்கு, பற்றீஸ், சமோசா, பயற்றம் பணியாரம், வாய்ப்பன், கொழுக்கட்டை | மரக்கறிச் சாப்பாடு $3.50 (Min. 10 Parcels) | றோல்ஸ், போளி, கறி றொட்டி | 70¢ |
| | மாமிசச் சாப்பாடு $4.50 (Min. 10 parcels) | குழல்பிட்டு, கொத்து றொட்டி | $2.00 / $3.00 |
| மோதகம் | 40¢ | சிங்கப்பூர் நூடில்ஸ் | $3.50 |
| வீச்சு றொட்டி, தோசை, கட்லட், பால் றொட்டி | 35¢ | கொண்டாட்டங்கள் பாட்டிகள் போன்ற வற்றில் வழங்கப்படும் Mini Bag Fackage (5 items inside) Only $ 1.00 | |

416- 265 -651 6


## குழந்தை பராமரிப்பாளர் தேவை
ஒட்டாவா நகரில்
3 வயதுக்குழந்தையைப்
பராமரிக்க ஆள்தேவை.
இருப்பிட வசதி, போக்குவரத்து
மற்றும் அனைத்து சலுகைகளும்
தொடர்புகளுக்கு:
416-335-7865

## BASEMENT FOR RENT
**Finch / McCowan**
சந்திப்பிற்கு அருகில் உள்ள
வீடு ஒன்றில் அறை ஒன்று
வாடகைக்கு
Washer, Dryer, Parking,
**Close to TTC, Mall and School**
குமார்: 416-292-9798

## HOUSE FOR SALE
Finch / Neilson
Detached House with 4 + 2 Bedroom Basement. 2 kitchens.
Separate Entrace 5 min. walk to 24hrs Finch bus & Schools.
ALL APPLIANCES
**ASKING PRICE $2,32,000**
ONLY SERIOUS & QUALIFIED BUYERS PLEAE CALL
**416-412-1491**


## THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

**R.E.S.P**

For More Information
Please Call:
MOHAN
நாளை உங்கள் குழந்தையின் கல்விக்கு
இன்றே சேமியுங்கள்
(416) 571-9509 / 698-6123


## BASEMENT FOR RENT
McCowan / 14th Avenue
புதிதாக அமைக்கப்பட்டதும்
சகல வசதிகளும்
கொண்டதுமான
இரண்டு அறைகள் உள்ள
Basement வாடகைக்கு
உண்டு.
Separate Entrace
தொடர்புகளுக்கு:
905-201-0944

## ROOM FOR RENT
Warden / Lawrence
3 Bedroom Basement வாடகைக்கு
உண்டு
Separate Entrance, Kitchen, Wash-room, Parking etc.
Close to TTC, School, Shopping Centre.
AVAILABLE IMMIDEATELY
416-755-2442

## ROOM FOR RENT
Middlefield / Steeles
சகல வசதிகளுடன்கூடிய 4
அறைகள். கொண்ட தனி வீடு
ஒன்றில் 2 அறைகள் வாடகைக்கு
உண்டு. குளியலறை தனியாவும்
சமையலறை பகிர்ந்து கொள்ளவும்
வேண்டும்.
சிறுகுடும்பம் அல்லது பெண்கள்
விரும்பத்தக்கது
**905-201-7687**

## HOUSE FOR SALE
வீடு விற்பனைக்கு
PRIVATE SALE
Kingston / Guildwood
(Scarborough)
Nicely updated 3 bedroom
Townhouse Finished basement
Good location Close to TTC, Go Transit etc.
**OPEH HOUSE - JUNE 8, 2002**
**SAT-2AM - 4PM**
ASKING PRICE $169, 900
**(416) 283-0831**

## ROOM FOR RENT
Markham / Eglinton
Apartment ல்
அறை ஒன்று வாடகைக்கு
உண்டு.
இரண்டு பேரும் சேர்ந்து
இருக்கலாம்
சாப்பாட்டு வசதியுமுண்டு.
தொடர்புகளுக்கு:
416-269-7595

## HOUSE FOR SALE
PRIVATE SALE
Finch / McCowan
3 Bedroom Detached house with Finished Basement Near Woodside Sq.
ASKING $239, 900
NO AGENT
**416-209-5992**

## BASEMENT APT. FOR RENT
Bellamy / Eglinton
**2 Bedroom Apt. with Separate entrance in a Bangalow House**
4 Min. to Eglinton Avenue Go Station and TTC
Parking. Cable and Utilities
Rent $800
**416-264-1176**

## TYPESETTER WANTED
பகுதி நேரமாக தமிழ், ஆங்கிலம்
Typesetting செய்யத்தெரிந்தவர்கள்
தேவைப்படுகிறார்கள்
தொடர்புகளுக்கு:
அபிராமி அச்சகம் 416-431-6604

## CASHIER WANTED
பலசரக்கு மாளிகை
ஒன்றிற்கு காசாளராக கடமை
புரிய ஒருவர் தேவை
உடன் தொடர்பு கொள்ளவும்
**416-265-1010**

## BAKERY FOR SALE
ஸ்காபரோவில்
நல்ல நிலையில்
இயங்கிக்
கொண்டிருக்கும்
பேக்கறி ஒன்று
விற்பனைக்கு
சகல
தளபாடங்களும்
சேர்த்து
416-890-5900

## EXPERIENCED CABINET MAKER WANTED
A FACTORY IN FINCH & DUFFERIN AREA LOOKING FOR EXPERIENCED CABINET MAKERS
416-665-1175

## WALKOUT BASEMENT FOR RENT
Morningside / Sheppard
இருவர் வசிக்கக்கூடிய
Bachelor Apt. வடிவில் அமைக்கப்பட்ட
சகல வசதிகளுடன் (Kitchen, Bathroom)
கூடிய விசாலமான அறை ஒன்று
வாடகைக்கு உண்டு.
Close to School, TTC, Mall, Plaza, U of T Scarborough campus.
பெண்கள் அல்லது couple
விரும்பத்தக்கது.
Phone:
**(416) 724-7477**

## BASEMENT FOR RENT
McCowan / Denison
ONE BEDROOM
LIVING ROOM,
SEPARATE ENTRANE
FULL WASHROOM
WASHER & FRIDGE
2 MIN. SCHOOL AND TTC, RT
ALSO 1 BED ROOM IN UPSTAIRS AVAILABLE
AVAILABLE IMMEDIATELY
905-471-9907

## DELIVERY PERSON NEEDED FOR NEWSPAPER
416-433-5465
416-884-0005

## ROOM FOR RENT
Ellesemere / Scarborough Golf Club
1 Bedroom with Separate Entrance
416-289-9450
416-567-6266

Study in Canada from Sri Lanka

WWW.CCBC.CA

An Opportunity to PROSPER



உங்கள் உறவினர், நண்பர்கள் கல்வி பெறுவதற்காக கனடா வருவதற்கு அரிய வாய்ப்பு. கனடாவில் வேலைப்பயிற்சியுடன் கூடிய computer உயர் கல்வியை வெளிநாட்டு மாணவர்களும் (study permit) CCBC ல் கற்கலாம்.

CALL TODAY 416-413-1234

CCBC



சிறந்த சேவை
மகிழ்ச்சிகரமான விளைவில்

Century 21 #1 Office in Canada

Percy Fulton Ltd.
10 Years Champion
24 Hours / 7 Days
Bus : 416-298-8200
Fax : 416-298-6602



Mohan Subramaniyam
Sales Representative
Residential & Commercial
Real Estate Marketing
At its Best!



பிரதம ஆசிரியர்: ஆர். என். லோகேந்திரலிங்கம்

"உதயன்" வெளியீட்டாளர்கள்

**Head Office: 'UTHAYAN PUBLISHERS**
1235 Ellesmere Road
Scarborough, Ont. M1P 2X8 Canada
Tel: 416.752-1524
Fax: 416.752-6703

**'UTHAYAN PUBLISHERS**
**Regional Office in Germany**
P. O. Box: 750162,
60531- Frankfurt
Germany
Tel: (+49)69-693774
Fax: (+49)69-694442

*Chief Editor:* R. N. Logendralingam
*Graphic* : Suthaharn, Rani & Pathma
*Advertising & Circulation Manager :* S. J. Sothy
*Printers* : Weller Publishers Canada
*Europe Edition; Managing Editor:* Sripathy Sivanadiyan
E-mail: uthayan66@hotmail.com


## UTHAYAN உதயன் கதிரோட்டம்

# அவசியமற்ற அமெரிக்க உடன்படிக்கை

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும் என இலங்கையில் காலடி எடுத்து வைத்து உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்ட இந்திய அரசினதும், அதன் அமைதிப்படையினதும் கொடிய அடக்குமுறைகளினால் துன்பப்பட்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் விடுவிக்கப்பட்ட எம்மக்கள் இன்னும் அந்த துன்பியல் அனுபவங்களை மறந்துவிடவில்லை.

இவ்வாண்டு ரணில் தலைமையிலான புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இலங்கையில் அமைதிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இதய சுத்தியுடன் செயற்படுவதை உலகமே பார்த்து பூரிப்படைந்தது. ஆனால் இடையில் கரடி போல் வந்து புகுந்து கொண்டது அமெரிக்க அரசு. தனது சுயரூபத்தை அங்கு அமெரிக்கா காட்டத தொடங்கியுள்ளது. வான் மற்றும் கடல் பரப்புகளில் பயணிப்பதற்கு அமெரிக்க விமானங்கள், மற்றும் கப்பல்களுக்கு அனுமதி வழங்கும் வகையில் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் இந்த ஊடுருவல் அவசியமற்றது என்றே 'உதயன்' கருதுகின்றான்.

காரணங்கள் பல உள்ளன. இந்தியா மீது அமெரிக்காவிற்கு நீண்ட நாட்களாக கண் உள்ளது. அத்துடன் பாகிஸ்தான், இந்தியா போர் மூண்டால் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை வழங்க இலங்கையை ஒரு தளமாக அமெரிக்கா பாவிக்க முயலும்.

அத்துடன் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அடக்கவும் அமெரிக்கா சிலவேளை முயலலாம். இது ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் சம்மதத்துடனோ அன்றி சம்மதமின்றியோ நடைபெறலாம். இதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் உலக சமாதானத்தின் முதல் எதிரியே அமெரிக்காதான்.

# தாய்லாந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக பத்துநாட்களுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படும் பிரதமர் ரணில் அறிவிப்பு

விடுதலைப்புலிகள் - அரசு இரண்டு பகுதியினரும் தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு பத்து தினங்கள் முன்பதாக விடுதலைப் புலிகள் மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடை நிச்சயமாக நீக்கப்படும் என்றும் அந்தளவிற்கு தென்னிலங்கை மக்களின் மனநிலையில் மாற்றம ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை பகல் தமது பாராளுமன்ற அலுவலகத்தில் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவிடம் உறுதிபடத் தெரிவித்தார்.இத்தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.பிரதமரின் அழைப்பை ஏற்று அவரை கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழு பாராளுமன்றத்தில் உள்ள அவரின் அலுவலகத்தில் சந்தித்தது.காலை 11.30 மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பு சுமார் ஒருமணி நேரம் வரை நிகழ்ந்தது. கூட்டமைப்பு பாராளுமன்றத் தூதுக்குழுவில் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், வீ.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கே.தங்கவடிவேல், ரா.கிருஷ்ணபிள்ளை, சந்திரநேரு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். யுத்த நிறுத்த உடன்பாடு முழுமையாக அமுல்நடத்தப்படவில்லை என்பது குறித்து கூட்டமைப்புத் தூதுக்குழு பிரதமரிடம் விரிவாக எடுத்துக்கூறியது. யுத்த நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட கால எல்லையினுள் பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள், பொதுக் கட்டிடங்களில் இருந்து படையினர் வெளியேறவில்லை. சோதனைச் சாவடிகள் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் இன்னும் காணப்படுகின்றன. அரச படையில் உள்ள அதிகாரிகள் சிலருக்கு யுத்த நிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுல் நடத்துவதற்கு சம்மதமில்லைப் போன்று காணப்படுகின்றது. இந்த நிலைமாற்றப்படவேண்டும் என்று கூட்டமைப்புத் தூதுக்குழு பிரதமரிடம் தெரிவித்தது.யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் மக்கள் சுதந்திரமாகவும், பயம், பீதியின்றியும் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பயம், பீதியின்றி, சுதந்திரமாக வாழும் நிலை ஏற்படவில்லை. வடக்கு, கிழக்கில் அவ்வாறான இயல்பு நிலை தோன்றுவதற்கு புரிந்துணர்வு உடன்பாடு முழுமையாக அமுல்நடத்தப்பட வேண்டும் என்று பிரதமரிடம் வற்புறுத்தியதாக சம்பந்தன் தெரிவித்தார்.வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தி, புனர்வாழ்வளிக்கும் பணிக்கு நிதி உதவி செய்வதற்காக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வரை காத்திருப்பதாக தமது ஐரோப்பிய பயணத்தின்போது, உதவும் நிதி நிறுவனங்கள்மற்றும் நாடுகள் தெரிவித்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.கூட்டமைப்புத் தூதுக்குழுவினருடனான சந்திப்பின்போது, பிரதமர் தமது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சி நடவடிக்கைகள் பற்றி ஆரம்பத்தில் விவரித்தார்.வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவையான நிதி உதவிவழங்கவேண்டும் என்று கோரியபோது, இவ்வாறுதான் முன்னரும் சமாதான முயற்சி ஆரம்பமானதைப் பார்த்து நிதிஉதவி வழங்கினோம். இடையில் சமாதான முயற்சி குழம்பிவிட்டது. இம்முறை அந்தநிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் வரை காத்திருக்கின்றோம் என்று வெளிநாட்டு அமைப்புகள் தம்மிடம் தெரிவித்தன என்று பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவிடம் தெரிவித்தார்.எனினும் மீளக்குடியமரும் மக்களுக்கு அவசரமாக வழங்கவேண்டிய புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்குத் தேவையான உதவி வழங்குவதற்கு வெளிநாட்டு அமைப்புகள் பலத்த வற்புறுத்தலின் மீது இணங்கியதாகவும் பிரதமர் கூட்டமைப்புக் குழுவினரிடம் தெரிவித்தார


GENERAL TOURS & TRAVELS



Lowest Air Fares to Colombo, Singapore, India & Other Destinations

இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கான ஒழுங்குகள் மிகக்குறைந்த விலையிலும், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பிரயாணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

FARES ARE SUBJECT TO CHANGE BASED ON SEATS AVAILABILITY
ALSO CALL US FOR ANY DESTINATION ONE WAY FARE ON REQUEST
1468 VICTORIA PARK AVE., SUITE 117 TORONTO ON M4A 2M2
TEL: (416) 755-8500 FAX: (416) 755-5552

யாழ் செல்வதற்கான அனுமதி பெற்று டிக்கட்டும் ஒழுங்கு செய்து தரப்படும்.

# கனடா வாழ் மக்களை மகிழ்வித்த
# உதயன்-2002 பல்சுவைக் கலைவிழா

கடந்த் 25ம 26ம் திகதிகளில் மிசிசாகா, மற்றும் ஸ்காபரோ ஆகிய நகரங்களில் இடம்பெற்ற உதயன்-2002 பல்சுவைக் கலைவிழாவில் தமிழகத்தின் பிரபல நடிகர் வினுச்சக்கரவர்த்தி, இலங்கையின் வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. தேவராஜ் மற்றும் ஜேர்மனியிலிருந்து வாணி நாட்டியாலய மாணவிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கடந்த வாரம் மேற்படி விழா தொடர்பான விமர்சனங்கள் பிரசுரமாகியிருந்தன. இரண்டு மண்டபங்களிலும் சுமார் இரண்டாயிரம் மக்கள் உதயன்-2002 விழாவின் இனிய கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்தனர். நிகழ்ச்சிகளை இரண்டு நாட்களும் திரு. தயாபரன் ஆறுமுகம் தொகுத்து வழங்கினார். இங்கே காணப்படும் படங்களில் கலாநிதி கந்தவனம், திருவாளர்கள் டாக்டர் யோகேஸ்வரன், நல்லூர் கந்தன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ திருக்குணானந்த குருக்கள் பாலசுப்பிரமணியகுருக்கள், கிருபா கிஷான், திருமதி அன்ரனி செல்வராஜா, நியூ சீமாட்டி நந்தகுமார், திரு. குமார், சிறுவர் கல்வி திட்ட அதிபர் சந்திரா ஆனந்தராஜா, திருமதி வானதி தேசிங்கு ராஜாவிற்கு தங்கப்பதக்கம் அணிவிப்பதையும், நம்நாடு ராஜலிங்கம் ஜேர்மனி கலைஞர்களுக்கு கேடயங்கள் வழங்குவதையும் நடிகர் வினுச்சக்கர வர்த்திக்கு உதயன் திரு. சோதி மலர்மாலை அணிவிப்பதையும் ஏ.ரி.என். கலைஞர் திரு. நேருவிற்கு திரு. குலா செல்வத்துரை விருது வழங்குவதையும் தவில் வித்துவான் திரு. சுந்தரத்திற்கு திரு. கனகசபாபதி தங்கப்பதக்கம் அணிவிப்பதையும் உதயன் படைப்பாளிகள் கௌரவிக்கப்படுவதையும் உதயன் விழாவிற்கு ஆதரவு வழங்கிய பிரமுகர்கள்


மிசிசாகா வசந்த மாளிகை வசந்தன் பத்தர் வினுச்சக்கரவர்த்திக்கு தங்கப்பதக்கம் வழங்குகிறார்







திரு. குமார், திரு. கணேசன் சுகுமார், திரு. புருஷோத்தமன், திரு. செல்வா, திரு. ரஜிவ்கரன், ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் திரு.எஸ். திருச்செல்வம், நடன ஆசிரியர் திரு. வாசு சின்னராசாவிற்கு விருது வழங்குவதையும், திருமதி கௌரவிக்கப்படுவதையும் வாசு சின்னராசாவின் மாணவிகளின் நடனக் காட்சி ஒன்றையும், ஜேர்மனி வானதி வாணி நாட்டியாலய அதிபரை கனடிய நடன ஆசிரியை கௌரவிப்பதையும் கணபதி ரவீந்திரனின் வேலி நாடகத்தில் ஒரு காட்சியையும் காணலாம். (தொடர்ச்சி..7..ம் பக்கம் பார்க்க)


**MORIN FINANCIAL SERVICES**

**MORTGAGE** Second, Third Mortgage, Conventional Mortgage, CMHC/CE Guaranteed Mortgage, Commercial Mortgage

**PERSONAL** Line of Credit, Car Loan, Establishing, Re establishing Credit, RRSP Loans

**BUSINESS** Business Lines of Credit, Business Loans, Letter of Credit



புதுமனை, இல்லம் வாங்கத் தேவையான நிதியை வங்கிகளில் அடமானமாகப் பெற்றிடவும்...

வியாபார முதலீடு (Business Loan) தனிநபர் கடனாக வங்கிகளில் எளிதாகப் பெற்றிடவும்...

சொந்தத் தேவைகளுக்கான பணநிதியை (Personal Loan) கடனாக வங்கிகளில் பெற்றிடவும் அழையுங்கள்

Fax: 416-499-9546 **Cell: 416-566-0621** Vijay J. Mariampillai, Mortgage Consultatnt **Office: 416-499-4700**




## ஆயுதங்களை ஏந்தி நிற்கா விடினும் மக்கள் பலமுள்ளவர்களாகவே அரசியலுக்கு வந்துள்ளோம்.

– புலிகளின் பிரமுகர் சுதா கூறுகின்றார்.

ஆயுதப் போராட்டத்தை நாம் கைவிட்டு அரசியல் வழிக்குத் திரும்பியுள்ளோம். எனவே போராட்டத்தின் வடிவம் மாறியுள்ளது. எமது தலைவர் கூறியது போல் பலமிழந்தவர்களாக அன்றி பலத்துடன் தான் அரசியல் பாதைக்கு வந்துள்ளோம். எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் தமது ஆதரவை எமக்கு வழங்க வேண்டும். இவ்வாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மாவடி முன்மாரி கோட்ட அரசியல் பொறுப்பாளர் சுதா தெரிவித்துள்ளார்.

மருங்கையடிப் பூவல் நாவலடி நாகதம்பிரான் ஆலய முன்றலில் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. எஸ்.பேரின்பம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு சுதா தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஈழத் தமிழர் பிரச்சனையை தீர்த்து வைக்குமாறு உலக நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் தியாகமும் பல்லாயிரக் கணக்கான மக்களின் மரணங்களுமே இதற்கு காரணமாகும். எனவே அவர்களின் கனவை நாம் நனவாக்க வேண்டும். கடந்த கால யுத்த சூழலால் நமது பிரதேசம் பல வழிகளிலும் பாதிப்படைந்துள்ளது. இவற்றைப் புனரமைப்புச் செய்து நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு வேண்டும் எனவும் கூறினார்.

இவ்வைபவத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விசு, துணைப் பொறுப்பாளர் துரை, மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் காயா, அபிவிருத்திக் குழு பொறுப்பாளர் ஜெயா, சிரேஷ்ட உறுப்பினர் றெஜினோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விடுதலைப் புலிகள் நூறு வீதம் அரசியலில் ஈடுபட வேண்டும்

- அமைச்சர் கூறுகின்றார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு நூறு சதவீதம் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். இந்த அமைப்பு மீதான தடையை நீக்குவது இப்போதைக்குப் பிரச்சனையாக இல்லை. ஆனாலும் பிரச்சனை இருப்பது காலஅட்டவணை தொடர்பான விடயத்திலாகும். எமது முக்கிய குறிக்கோள் அந்த அமைப்பை முழுமையாக அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்கச் செய்வதாகும் என வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார். பி.பி.சி. உலக சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கம் பற்றி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது இந்நாட்டு மக்கள் மீண்டும் ஒரு முறை தாம் சமாதானத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என்பதை அண்மைய உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.இதன்மூலம் சமாதான முயற்சிகளை உடைத்தெறியக் குறிபார்த்த தீவிர போக்குடையவர்களுக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளனர். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் அந்த இயக்கம் மீதான தடை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தடை நீக்குவது முக்கிய பிரச்சனையல்ல. பிரச்சனை இருப்பது காலம் தொடர்பான விடயத்திலாகும். அதனால் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருப்பது அந்த அமைப்பை அரசியல் நீரோட்டத்தில் முழுமையாக இணையச் செய்வதாகும்.

இந்த இலக்கு நிறைவேறிய பின்னர் தடை நீக்கம் முக்கிய பிரச்சனையாக இருக்காது. அத்தோடு வடக்கில் யத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்புச் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

## வடக்கு கிழக்குப் பகுதியை வியட்னாமாக்க அமெரிக்காமுனைகிறது

**- தி. மு. க. பிரமுகர் கூறுகின்றார்.**

அமெரிக்கா, இலங்கை கடல், வான் ஒப்பந்தம், அச்சம் காரணமாக இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்திய - பாகிஸ்தானிய முறுகல் நிலையைப் பயன்படுத்தி கிழக்காசியாவில் இந்திய வல்லரசின் ஆதிக்கத் தன்மையை முறியடித்து வட-கிழக்குப் பகுதியை வியட்னாமாக்கும் அமெரிக்க மேலாண்மைத் திட்டத்தின் வெளிப்பாடாகும் இவ்வாறு இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் இரா.தென்னரசு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் கடல் எல்லை 12 கடல் மைல்கள் மற்றும் இந்திய கடல் எல்லை 16 மைல்களாகும். அத்துடன் இலங்கை இந்திய கச்சதீவு ஒப்பந்தம், தீவுப் பகுதியில் எண்ணெய் அகழ்வுப் பணி, இலங்கை இந்திய பாலம் அமைக்கும் திட்டம், மின்சாரம் கடலடியின் மூலம் வழங்குதல் போன்றவை கொள்கையளவில் இலங்கை - இந்திய அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்படுள்ளன. இவ் ஒப்பந்தம் இலங்கை இந்திய நட்புறவை அவமதிக்கும் வகையில் இருக்கின்ற போதிலும் இந்தியா ஆட்சேபனை தெரிவிக்குமா? அல்லது சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடுமா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இவ்வொப்பந்தம் தமிழ் மக்களும், இடதுசாரிகளும் இன, மத, பேத மற்ற முறையில் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டிய ஒப்பந்தமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவை அகதிகள் தொடர்பாக கடும் நிபந்தனைகள்

குடிவரவு தொடர்பாக கடுமையான நிபந்தனைகளை பிரான்ஸ் ஜேமன் ஆகிய நாடுகள் மேற்கொள்ள தீர்மானம் எடுத்துள்ளன. ஐரோப்பிய கண்டத்தினரின் வாக்குரிமையை பாதுகாத்தல் பொருட்டே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரான்ஸ் சான்ஸிலர் கெர்ஹோர்ட் ஸ்ரெயிடர்பிரான்ஸ் ஜனாதிபதி ஜெகுஸ்ஹிராக் ஆகிய இருவரும் அடைக்கலம் வழங்குதல் தொடர்பாக ஏற்படுத்த உள்ள பதிய சட்டம் சம்பந்தமாக ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டில் மேலும் கலந்துரையாடவுள்ளனர். மனித கொள்கைகள் கள்ளக்கடத்தல் சட்ட விரோத குடியேற்றங்கள் முதலானவற்றை தடுப்பதற்கான சட்டம் தொடர்பாகவும், வறிய நாடுகளுக்கு உதவி வழங்கும்பொரட்டு தொழில்வாய்ப்புக்களை ஐரோப்பாவில் வழங்குவது தொடர்பாகவும், ஜூன் மாதம் 21ம் 22ம் திகதிகளில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் தீர்மானம் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பிரான்ஸிலள்ள சங்கட்டா அகதிமுகாம் இப் புதிய சட்டத்தீர்மானங்களுக்கான ஒரு காரணமாக கருதப்பட்டுள்ளத. சங்கட்டா வெளிநாட்டினர் பாதுகாப்புத் தேடி வந்து தஞ்சம் புகும் அகதி முகாமாகும். இதில் ஏறத்தாழ 1.300 அகதிகள் வசிக்கின்றனர். குடிவரவுகளுக்கெதிராக ஏற்படுத்துகின்ற இக்கட்டுகளானது, பிரான்ஸில் நடைபெறஇருக்கின்ற தேர்தல் நடவடிக்கைகளுக்கு முற்பாதுகாப்பு கருதியே மேற்கொள்ளப்படுவது குறிப்பிட்டதாகும். அத்துடன் இந்தப் புதிய சட்டத்தினால் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களும் பாதிக்கப்படவுள்ளனர்.

## சமாதான சூழலை இழப்பதற்கு நமது இயக்கம் தயாரில்லை

விடுதலைப் புலிகளின் பிரமுகர் விசு கூறுகின்றார்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை இழக்க நாம் விரும்பவில்லை ஆயுதப் போராட்டத்தை உற்று நோக்கிய உலக வல்லரசுகள் இனி அமைதி வழியில் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் எனக் கூறிய ஆலோசனை யின் பேரிலேயே இன்று [illegible] மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மக்களுடன் இணைந்து ஜனநாயக வழிகளில் போராடுவதற்கு முன் வந்தோம்.விடுதலைப் போராட்டங்கள் மக்கள் போராட்டமாக மாறும் போது தான் அது வீரியம் பெறுகின்றது. அதனாலேயே ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்து மக்களுடன் இணைந்து போராட நாம் விரும்புகின்றோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. விசு தெரிவித்துள்ளார். கடந்த வாரம் வந்தாறு மூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.வித்தியாலய அதிபர் அ.சுகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்தும் உரையாற்றுகையில் எமக்கும் அரசிற்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து மீண்டும் பயங்கர யுத்தமொன்று நடக்கலாம் என்ற அச்சமும் அவ நம்பிக்கையும் இப்பிரதேச மக்களிடம் நிலவி வருகின்றது. இந்த சமாதானச் சூழலை நாம் ஒருபோதும் இழக்க விரும்பவில்லை அதே வேளை அரசின் சூழ்ச்சி வலையில் எமது தலைவர் விழப்போவதில்லை.ஏமாற்றாதே ஏமாறாதே என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர் எமது தலைவர் அதனால் ஏமாற்றங்களை அவ ரால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அரசியலிலும் சரி போராட்டத்திலும் சரி எதிர்பாராத வியத்தகு முடிவுகளை துரிதமாக எடுப்பதில் எங்கள் தலைவர் வல்லவர். அது அவருடைய விஷேடமாகும் எனவும் தெரிவிக்தார்.

வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?

YOGI & PARTNERS உங்களது காப்புறுதி நிறுவனம் உங்களில் ஆதாயம் தேடவிடாதீர்கள். YOGI & PARTNERS

உங்கள் உரிமைகள், ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் குறித்து ஆலோசனைகள் பெற எம்மை நாடுங்கள்.

தவறு உங்களுடையதாயினும்..

உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்



EAST OFFICE
1920 Ellesmere Rd., Suite: 110
Scarborough, Ont. M1H 2V6
Tel : (416) 289-4141

அனுபவம்மிக்க பல காப்புறுதி ஆலோசகர்கள் எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.

யோகி தம்பிப்பிள்ளை

WEST OFFICE
4 John Street, Suite 10,
Toronto, Ont. M9N 1J3
Tel : (416) 241-9292

24hrs
Earo ELECTRIC
அனைத்து மின் இணைப்பு திருத்த வேலைகளுக்கும்
☐INDUSTRIAL
☐RESIDENTIAL
☐COMMERCIAL
Licensed Electrician
Maniam : 416-289-9393

ஊர் செய்திகள்

# உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் 2002ம் ஆண்டிற்கான வசந்தகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும் இவ்வாண்டு ஜுன் மாதம் Neilson & Finch சந்திப்பில் அமைந்துள்ள neilson park இல் நடைபெறும். இதில் சிறுவர்களுக்கான மற்றும் பெரியோர்களுக்கான பல்வகை விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதால் உரும்பிராய் மக்கள் மற்றும் உரும்பிராய் பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள். மேலதிக தொடர்புகளுக்கு: 416 490 0608 / 416 321 6533 / 416 439 4339 / 416 755 1640

# ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்


உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் ஜுன் மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுன் மாதம் 26ம் திகதி புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெறும். 24ம் திகதி தேர்த்திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தத் திருவிழாவும்நடைபெறவுள்ளது.

# திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் "தேனிசை மழை"

ஜுன் மாதம் 8ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30ற்கு திருச் செந்தூர் முருகன் ஆலய மண்டபத்தில்பிரபல பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜனின் மறு குரலொலி மலேசிய ராஜராஜசோழனின் தேனிசை கான மழை நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு, மாலன் 416 709 9584

# Spelling Bee Of Canada 2002

Armadal Ps. Markham பாடசாலையில 6ம் வகுப்பில் கற்கும். செல்வன் சஞ்ஜீவ் ராஜேந்திரன் Intermeditate Level இல் அரை இறுதிப்போட்டியில் மார்க்கம் பிரதேசத்தில் முதலாமிடத்தையும், ஒன்ராறியோ மட்டத்தில இறுதிப்போட்டியில் முதலிடத்தையும் பெற்று சம்பியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் 2001 ம் ஆண்டு Inermediate Level சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கனடியத் தமிழ்க் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிப்பு

www.Ccinebug.com ஆதரவில் Maple Combines and Dynamic Production இணைந்து வழங்கும் Star Night இல்கலைஞர்கள்,எழுத்தாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த கௌரவிப்பில் கலை. இலக்கிய ஆர்வலர்களின் பெயர், தொலைபேசி இலக்கம், ஆகியவற்றை ஜுன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் 416 615 4646 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்.


# நூல் வெளியீட்டு விழா

யோகாச்சார்யா வி.என் பரராஜசிங்கம் அவர்களால் வாழ்க்கையின் உயர்வை நோக்கி என்னும் தலைப்பில் உதயன் பத்திரிகையில் வாரந்தோறும் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு ஜுன் மாதம் 16ம் திகதி மார்க்கம் அன்ட் எல்ஸ்மெர் சந்திப்பில் அமைந்துள்ள இல 42 சங்கமம் மண்டபத்தில் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை இடம்பெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள் கனடா யோக வேதாந்த நிறுவனத்தினர்.
மேலதிக தொடர்புகளுக்கு: 905 803 9688 416 298 8643

# Free examination Oriented Seminar

கெனடி வளாகத்தில அமைந்துள்ள வீவீ ரியூரறிங் சென்ரர் தரம் 9 முதல் OAC வரையிலான மாணவர்களின் நலன் கருதி எதிர்வரும் ஜுன் மாதம் 15ம். மற்றும் 22ம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை Math, Algebra, Geometry, Calculas, Finite Math ஆகிய பாடங்களில் எதிர்வரும் பரீட்சைகளின் அடிப்படையில் ஒரு பயிற்சிப்பட்டறையை இலவசமாக நடாத்தவுள்ளது. ஒவ்வொரு பாடத்திற்கும் இரு மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இப் பயிற்சிப் பட்டறையை Vasu Uth Bsc(Eng) நடாத்தவுள்ளார். தொடர்புகளுக்கு 416 701 1763 / 905 471 3784

புகைப்படங்கள் எடுக்க வேண்டுமா?
Baheer Studio
Professional Photography
Outdoor Photography & Albums
இலங்கையில் Thillai Vision, Chhaya studio ஆகியவற்றில் அனுபவம் பெற்ற படப்பிடிப்பாளர் இப்போது கனடாவில் தனது சேவையை ஆரம்பித்துள்ளார். உங்களின் எந்த வைபவமாயினும் இவரை அழையுங்கள்!
Tel: (905) 874-4736, (416) 241-1697
Direct Call - 1-800 855-0511 to through to (905) 874-4736 My number T.T.Y.



S. Selvarajah

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை
• ACCIDENT INJURIES
• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்
- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு
பாதிக்கப்படும்
416 490-9199
S.K.THEESAN
எஸ்.கே.தீசன்
www.kalakalappu.net
416-490-9199
கலகலப்பு தீசன்

Rajaguru Martial Arts ராஜகுரு மார்ஷல் ஆர்ட்ஸ் அக்கடமி வழங்கும்
KARATE CLASSES கராட்டி வகுப்புகள்
ஷோடோகான் கராட்டி வகுப்புகள்
தமக்கும் பிறருக்கும் ஆபத்து ஏற்படும் போது பாதுகாத்துக் கொள்ளவும் கீழேயுள்ள பயிற்சி நிலையங்களை அணுகவும்
ஷோ ஷிஹான் "ராஜகுரு" T. ரவீந்திரன் | ஷிஹான் R ஸ்ரீராம்
பெண் (வைசாளி ஸ்ரீராம்) பயிற்சியாளராலும் பயிற்றுவிக்கப்படுகிறது
DAILY NEEDS 2543 Pharmacy Ave (Finch / Pharmacy)
BEEMAH RESTAURANT 1450 Gerrard Street (Gerrard Indian Bazar)
ACADEMY OF TAMIL ARTS & TECH. 3150 Eglinton Avenue (Markham / Eglinton)
DAISY MART 5739 Finch Avenue East (Finch / Neilson)
416-473-8472



(..4..ம் பக்கத் தொடர்ச்சி)

# கனடா வாழ் மக்களை மகிழ்வித்த உதயன்-2002 பல்சுவைக் கலைவிழா



## தமிழர் நிர்வாகத்தில் மற்றுமொரு AVIS நிறுவனம்




தமிழர் நிர்வாகத்தில் மற்றுமொரு AVIS நிறுவனம் கடந்த வாரம் யங் & எல்கின் மில்ஸ் சந்திப்பில் 10711 யங் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. நிறுவனத்தின் முகாமையாளர் திரு. குகன் திறப்பு விழாவின் போது வருகை தந்த வர்த்தக பிரமுகர்கள் திரு. கரு. கந்தையா, திரு. பிரான்சிஸ் றஞ்சன், திரு. அகிலன், தனபாலசிங்கம் ஆகியோரோடு நிற்பதையும் படத்தில் காணலாம். AVIS நிறுவன முகாமையாளர் குகனை வாழ்த்த விரும்புவோர் 905-884-6212 உடன் தொடர்பு கொள்ளலாம்.

## பெரிய அரசுகளின் காவல் துறையைப்போல தமிழீழ காவல் துறை இயங்குகின்றது

உலகில் உள்ள காவல்துறையினரைப்போலன்றி மக்களுக்கு உரிய சட்ட ஒழுங்குகளை நிலைநாட்டி அளப்பரிய சேவையாற்றுகிறார்கள் எமது காவல்துறையினர். இதனால் எமது மக்கள் சட்டம், ஒழுங்குவிதிகளின்படி எதுவித பிரச்சினைகளும் இன்றி வாழுகின்றனர ஒரு பெரிய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும காவல் துறையினரைப்போல எமது பிரிவு இயங்கிவருவது இங்கு கவனிக்கத்தக்கது

.தமிழீழ காவல்துறையின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா புதுக்குடியிருப்பு மாலதி விளையாட் டரங்கில் நடைபெற்றபோது உரையாற்றிய அதன் தலைவர் பி.நடேசன் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து பேசிய அவர் கடந்த 10 வருடங்களில் எமது மக்கள் போர்ச் சூழலில் பல்வேறு கர்டங்களை அனுபவித்து வந்தபோது அவர்கள் மத்தியில், சிறப்பாக எமது காவல்துறையினர் சேவையாற்றியுள்ளனர்.ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை என்பன உள்ள காவல்துறை என்றால் எமது காவல்துறையினரே என்றார்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி எஸ்.சூசை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் இளம்தென்றல் கழகமும், வலைப்பந்தாட்டப் போட்டியில் செவ்வேள் கழகமும், மென்பந்து போட்டியில் மல்லாவி மத்திய விளையாட்டுக்கழகமும், உதைபந்தாட்டப்போட்டியில் துனுக்காய் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.

"உதயனில்" விளம்பரங்கள், அறிவித்தல்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
தொலைபேசி இலக்கம்: (416) 752-1524
தொலைநகல் இலக்கம்: (416) 752-6703

## உயிர் காக்க உதவிய கரங்கள்



தமிழகத்தில் உயிருக்காக மருத்துவ மனை ஒன்றில் போராடிக் கொண்டிருந்த உமாவிற்கு கனடிய தமிழ் வர்த்தகர்கள் ஐவர் உதவி வழங்கினர். சிறுநீரகம் மாற்றப்பட வேண்டிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உமாவின் உடல்நிலை பற்றியும் அதற்கான நிதித் தேவை பற்றியும் குமுதம் இதழில் பிரசுரிக்கப்பட்டது. இதன் நிமித்தம் உமாவின் மருத்துவ தேவைக்கு 1000 கனடிய டொலர்களை அனுப்பி வைத்தனர். மேலே உள்ள படத்தில் அபி கரு கந்தையா அவர்கள் உமாவிற்கு நிதியை தமிழகத்தில் அன்பளிப்பு செய்வதைக் காணலாம்.

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 |  | 05 |
| உ | | உ |
| 07 | | 06 |
| உ | | உ |
| 1923 | | 2002 |

### *அமரர் உயர்திரு. முருகேசு சிவசிதம்பரம்*

(முன்னாள் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் கௌரவ உப- சபாநாயகரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், அண்மைக்காலத்தில் நியமனம் பெற்ற விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினருமாவார்)

தங்களது அலுவலகச் செயலாளராக நான் பணியாற்றிய காலத்தில் நான் பெற்ற அனுபவங்கள் தங்கள் திறமை, துணிவு, தாராள எண்ணம் போன்றவற்றைக் கண்டு பிரமித்து நின்ற நாட்கள் என்றென்றும் என் மனதை விட்டகலாதவை .

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

ஸ்காபரோ
416 439 5215

என். நித்தியானந்தன்
(நித்தி)

# ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு

எஸ். ஆர். ராஜபாலன் (B.Sc.(H0ns) Cey., Diploma in Accountint

அடிப்படை உரிமைகளை இழந்த ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டங்கள் கடந்த 25 வருடங்களாக புதிய பரிமாணம் பெற்று வந்துள்ளன. எனினும் 16ம் நூற்றாண்டில் இலங்கைத் தீவு போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட காலம் தொடக்கம் தமிழினத்திற்கு எதிரானஇனவாத நடவடிக்கைகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

1505ம் ஆண்டு முதல் இலங்கைத் தீவில் இடம்பெற்ற பிரதான நிகழ்வுகளின் தொகுப்பான இந்த வரலாற்றுத் தொடரின் மூன்றாவது பாகமாக, இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம் (1948- 1976). இடம் பெற்ற பிரதான நிகழ்வுகளின் தொகுப்பு தற்போது பிரசுரிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து இறுதிப் பாகமாக ஈழப்போர் 1,2,3) தற்போதைய சமாதான நடவடிக்கைகள் பற்றிய தகவல் தொகுப்பு பிரசுரமாகவுள்ளது.

ஈழத்தமிழர் அனைவருக்கும் உபயோகமாகவுள்ள இந்த வரலாற்று தொடரை உங்கள் முன்பாக சமர்ப்பிப்பதில் உதயன் மகிழ்ச்சியடைகின்றது - பிரதம ஆசிரியர்

## பாகம்-3

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல், ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம் வரை (1948-1976)

சென்ற வாரத் தொடர்ச்சி

1949- இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து. 1948-49 தேர்தல் சீர்திருத்த சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் விளைவாக பாராளுமன்றத்தில் சிங்கள இனப்'பிரதிநிதிகள் கூடிய அளவில் தெரிவு செய்யப்படக் கூடியதாக வழி வகுக்கப்பட்டது.

இலங்கையின் அரசியல் அமைப்பும் சிங்கள அரசின் இனவாதக் கொள்கையும் தமிழ் இனத்தின் அழிவை ஏற்படுத்தும் என எஸ்.ஜே.வி. செல்வநாயகம் திடமாக நம்பினார். அதன் காரணமாக இலங்கைக்கு பிராந்திய சுயாட்சிமுறை (Regional Autonomy) தேவை எனவும் அதில் தமிழ் மக்களை அவர்களே ஆளக் கூடியதாக தமிழ் மக்களை உள்ளடக்கிய ஓர் சுயாட்சி அமைப்பு வேண்டும் என அறிவித்தது. 1949ம் ஆண்டு மார்கழி 10ம் திகதி தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார்.

1950- டி.எஸ். சேனநாயக்கா தலைமையிலான சிங்கள இனவாத அரசு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்களை துரிதப்படுத்தி சிங்களவர்களை மாத்திரம் குடியேற்றியது. இதன் காரணமாக தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பிரதேசங்களுக்கிடையில் உள்ள நில அடிப்படையிலான தொடர்பை துண்டாடக்கூடிய வகையில் இந்த சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக அநேக சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய வகையில் புதிய தொகுதிகள் அமைக்கப்பட்டன.

1951- டி. எஸ். சேனநாயக்காவின் பின்னர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா கட்சியின் தலைவராகக் கூடும் என ஜே.ஆர்.எண்ணத் தொடங்கினார். அதன் விளைவாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்றோரின் உதவியுடன் அவர் பண்டார நாயக்காவை கட்சியில் இருந்து வெளியேற்றினார்.

ஆகஸ்ட் 13-15 தமிழரசுக் கட்சி திருகோணமலையில் தனது முதலாவது மகாநாட்டை நடத்தியது.

1952- பாராளுமன்றத்திற்கு முன்பு அமைந்துள்ள காலிமுகத் திடலில் குதிரைச் சவாரி செய்த




வேயையில் தவறி விழுந்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா மரணம் அடைந்தார்.

எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறுவதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு உதவிய ஜீ.ஜீ. பொன்னம்பலம், பிரதமர் ஜெயவர்த்தனாவுக்கு எதிராக செயற்பட்டு டி.எஸ். சேனநாயக்காவின் புதல்வர் டட்லி சேனநாயக்கா இடைக்காலப் பிரதமராக பதவி ஏற்க துணை நின்றார்.



பொதுத்தேர்தல் நடைபெற்று டட்லி சேன நாயக்கா பிரதமராகினார். புதிதாக உருவாககப்பட்ட இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி இத்தேர்தலில் இரண்டு ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.


1953- ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரிசியின் விலையை உயர்த்தியதை எதிர்த்து இடதுசாரிக் கட்சியினரும், தமிழரசுக் கட்சியினரும் இணைந்து நடத்திய ஹர்த்தால் காரணமாக பிரதமர் டட்லி சேனநாயக்கா தனது பதவியை ராஜினாமா செய்தார்.




**DR. ILLANGO & ASSOCIATES**
*Dental Office*

DR. ILLANGO & ASSOCIATES

BRACE FOR A GREAT SMILE



பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை

**Dr. M. ILLANGO**
B.D.S. Dip. Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
பற்களை ஒழுங்குபடுத்தும் பல் வைத்தியர்

**Dr. SABAPATHY RAVEENDRAN**
B.D.S, M.S, F.D.S.R.C.S(Eng.), General Practitioner

**Dr. ALI ADIBFAR**
D.D.S, M.D, F.R.C.D(C), Plastic Surgeon

**Dr. MEHRAN MOJGANI**
D.D.S, Dip. Perio, Gum Specialist பல்முரசு வைத்திய நிபுணர்

**Dr. JANAKI ILLANGO**
B.D.S. குடும்ப பல் வைத்தியர்

**Dr. FELOMINA NOLASCO**
D.D.S. குடும்ப பல் வைத்தியர்

**Dr. PADMAJA KONGARA**
B.D.S. குடும்ப பல் வைத்தியர்



**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
(416) 292-7004



**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
(905) 270-7844

# கனடா இந்து

மதம், மொழி, கலை, வாழ்வியல், அறிவியல், ஆன்மீகம் பேணி நிற்கும் தனித்துவக் கலாச்சார இதழ்

### கும்பாபிஷேக நவக்கிரக ஹோமம் நிகழும் அதே நேரத்தில்

# குருப்பெயர்வு ஹோமம்

# தோஷ நிவர்த்தி

**29-6-2002 சனிக்கிழமை ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் நிகழ்கிறது.**

## பக்த கோடிகளுக்கு கிடைத்தற்கரிய சந்தர்ப்பம்

குருபகவான் ராசி மாற்றம் பெறுகிறார். தனது உச்சவீடான கர்க்கடக ராசிக்கு அவர் செல்கிறார். யூன்மாதம் 29ம் திகதி குரு மாறுகின்ற அதே நாளில் ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் நாயன்மார்களின் கும்பாபிஷேகக் கிரியைகளில் நவக்கிரக ஹோமம் நிகழவிருக்கிறது. நவக்கிரக ஹோமத்துடன் குருப் பெயர்வு ஹோமமும் இடம் பெறுவது மிகச் சிறப்பானதாக அமையவிருக்கிறது. அதே தினம் ஆலயத்தில் துர்க்கைக்கான கோடி அர்ச்சனையும் நிகழ்ந்து கொண்டிருக்க, ஹோமங்களும் நிகழ்வது காணுதற்கரிய தோஷநிவாரணமாகும். குருபகவான் மிதுன ராசியில் இருந்து கர்க்கடக ராசிக்கு இடம் பெயர்கிறார். இந்தப் பெயர்வினால் ஏற்படும் பலன்கள் வருமாறு



அந்தணர்களுக்கு தானம் வழங்கிப் பெரும் பேறு பெறும் அம்பாள் அடியார்கள்

<u>நற்பலன் பெறும் இராசிக்காரர்</u>

மிதுன ராசி, கன்னி ராசி, விருச்சிக ராசி, மகர ராசி, மீன ராசி,

<u>கஷ்ட பலன் பெறும் ராசிக்கரர்</u>

மேட ராசி, இடப ராசி, கர்க்கடக ராசி, சிங்க ராசி, துலாம் ராசி, தனு ராசி, கும்ப ராசி

நற்பலன் உள்ளவர்கள் குரு பகவானின் அனுசரணையை மேலும் பெற்றுக் கொள்ளவும், கஷ்ட பலன் உள்ளவர்கள் அவற்றினைக் குறைத்துக் கொள்ளவும் குரு வழிபாட்டினைச் செய்வது உகந்தது.

### விவாகத் தடைகளுக்கு

குருபலம் உள்ள காலத்தில்தான் திருமணமாகாதவர்களுக்கு விவாகம் ஈடேறும் என கூறப்படுகின்றது. பிரிந்தவர்கள் கூடுகின்ற காலம், குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை உண்டாகும் காலம். விவாகம் செய்கிற காலத்தில் கட்டாயமாகக் குருபலம் இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிடில் குடும்பங்களில் அடிக்கடி பிரச்சனைகள் ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. விவாகங்களில் ஏற்படும் பல தடைகளை நீக்கும் சிறப்புப் பெற்றவர் குருபகவான்.

### தொழில் முன்னேற்றம்

குருபலம் உள்ள காலத்தில் தொழில் வளம் ஏற்படும். இதைத்தான் குருபார்வை என்று கூறுவர். குருபார்வை இருந்தால் போதும் சகலதும் சித்தித்துவிடும். குருபகவான் எனப்படுபவர். தேவர்கள் எல்லோருக்கும் குருவாக விளங்கிய பிரகஸ்பதி. தேவர்களின் தேவபோக வாழ்க்கைக்கு உரிய வழிவகைகளைச் செய்து அவர்களை எவ்வித குறைகளும் இன்றி வாழ வழிவகுப்பவர் இவர்தான். குருவினுடைய அனுசரணை இருந்தால், வெற்றிக்கான மூலதனமாகிய செயல்திறனும் அதற்கான சிந்தனையும் உருவாகும் என்பர்.

குழந்தைப் பருவத்தில் சிறார்களுக்கு கல்வி மேன்மையைக் கொடுப்பவர் குருபகவான். எத்தனையோ பிள்ளைகள் கல்வியில் குன்றி, பிழையான எண்ணங்களுடன் வாழ்கின்றனர். அவர்களின் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவர் குருபகவான். அவருக்கு நிகழ்கின்ற ஹோமங்களில் பங்குபற்றி, வணங்கி வழிபட்டு கல்வி கேள்விகளில் உயர்ந்த நிலையை எய்திடலாம்.

பல்வேறு கிரக தோஷங்களால் குழந்தைப் பேறில்லாது இருப்பவர்கள், குரு பகவான் நல்ல நிலையில் இருக்கிற காலங்களில் அவரை ஆராதித்து வருவதால் பெரும் தோஷங்களில் இருந்து விடுபட்டு குழந்தைப் பலனைப் பெறலாம் என்று நூல்கள் கூறுகின்றன.

குரு மாற்றத்தினால் நற்பலன் பெறுபவர்கள், அசுப பலன் பெறுபவர்கள் மட்டுமன்றி, ஜாதகத்தில் குருதோஷம் உடையவர்கள், திருமணத் தடை- வாழ்க்கையில் முன்னேற்றத் தடை ஏற்படுபவர்கள், காரியசித்தி பெற எண்ணுபவர்கள் யாவரும் பல அந்தணர்கள் இணைந்து நிகழ்த்தும் இந்த ஹோமத்தில் பங்கு பெறலாம். யூன் மாதம் 29ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் நவக்கிர ஹோமத்தினைத் தொடர்ந்து குருப்பெயர்வு ஹோமம் நிகழவிருக்கிறது. சகல கிரகங்களையும் லோகங்களையும் கட்டிக் காக்கும் அம்பாளின் சந்நிதியில் நிகழும் இந்தச் சிறப்பில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் முன்கூட்டிப் பதிவு செய்து கொள்க. ஏராளமான அடியார்கள் இதில் பங்குபற்ற விரும்பம் தெரிவித்திருக்கிறார்கள். இடவசதி, நேர வசதி காரணமாக பதிவு செய்தவர்களுக்கு முதலில் இடமளித்த பின்னரே ஏனைய பக்தர்களுக்கு இடமளிக்க முடியும். தனித்தனியே ஒவ்வொருவருக்கும் பல சடங்குகள் செய்ய வேண்டி இருப்பதால், அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள, தயவு செய்து முன்கூட்டிப் பதிவு செய்யுமாறு ஆலயம் பக்தர்களை வேண்டிக் கொள்கிறது. 416 -759 9648

# தனலட்சுமி பூஜையில் அம்பிகை அருளுடன் 1008 நாணயங்கள்

**ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீசக்கர மகாமேரு யந்திர பிரதிஷ்டையில் அடியார்களுக்கு கிடைக்கும் பெரும் பேறு. தனலட்சுமி வீடுகளில் வாசம் செய்ய 1008 நாணயங்கள். பதிவு செய்வதற்கான விபரங்களை ஆலயத்தில் அழைத்துப் பெறுக.**

அஷ்ட ஐஸ்வரியங்களையும் தரும் லட்சுமி வீற்றிருக்கும் ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானத்தில் கும்பாபிஷேகத்தில் நிகழும் தனபூஜையில் வைத்து வழிபாடு செய்யப்படும் 1008 நாணயங்களை பக்தர்கள் பெறவிருக்கின்றனர். கடந்த கும்பாபிஷேகத்தின்போது, தனபூஜையில் வைத்து வழிபடப்பட்ட நாணயங்களைப் பல பக்தர்கள் பெற முடியாமல் போய்விட்டதால், இம்முறை முன்கூட்டியே பதிவு செய்யும்படி ஆலய நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

ஸ்ரீதுர்க்கா, மகாலட்சுமி, சரஸ்வதி என்ற முத்தேவியரும் ஒருங்கே மூலத்தில் வீற்றிருக்கும் ஆலயம் இதுவாக விளங்குவதால், பராசக்தியின் உறைவிடமான இந்த ஆலயத்தினை அஷ்ட லட்சுமி ஆலயமாக இந்துக்கள் கருதுகின்றனர்.

தனபூஜையில் வழிபாடு செய்யப் பெற்ற நாணயங்களை தமது வீடுகளில் உள்ள பூஜை அறையில் வைத்து வணங்குவர். வியாபாரிகள் தமது வியாபார நிலையங்களில் உள்ள வடைட டிழஒக்குள் பத்திரமாக வைத்து தினமும் வணங்குவர். சிலர் தமது இல்லங்களிலும், வியாபார இடங்களிலும் வாசலில நிலையில் பதித்து வைப்பர்.

**ரொறன்ரோ ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் ஆலயத்தில்**

## ஸ்ரீசக்கர மகாமேரு யந்திர கும்பாபிஷேகம்

## யூலை 7, 2002 ஞாயிறு




# ரொப் குவாலிட்டி பூக்கடை

ஏன் எல்லோரும் இங்கு வருகிறார்கள்? இவர்கள் இயற்கையை இயற்கையாக தருபவர்கள்.
அழகா? ஆன்மீகமா? அத்தனையும் ரொப் குவாலிட்டி பூக்கடையில் நிறைந்திருக்கிறது.
பூக்கள், பூமாலைகள், மணவறை, பூச்செண்டு, பூக்கூடை, பூசோடனைகள்
மலர் வளையம் பூச்சோடனைகள் casket அலங்காரம் casket spary
**மணவறைகளில் பல ரகங்கள் விதம்விதமாய் .... இன்னும் பல**

தொடர்பு கொள்க : பிள்ளை

**2871 Lawrence Avenue East**
**Scarborough**
**Tel : (416) 269 5522    Fax : (416) 269 9784**



# இலங்கையின் சமாதான

(16ம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக அமுல்நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணையில் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் மத்தியில் ஏற்படவில்லையென்பதும் அப்பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக அமுல்நடத்தும் நடவடிக்கைகளையும் விரைவுபடுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது. இப்பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழு மீண்டும் ஒரு தரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை நடைபெறவிருக்கும் இப்பேச்சுவார்த்தை தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் கையாளப் போகும் அணுகுமுறைகளை கோடி காட்டலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் தென்பகுதி மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் மாநாடு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு அதிகாரப் பகிர்வு குறித்து ஒரு கோரிக்கையை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண த்திற்கு வழங்கப்படும் அதிகாரங்கள் தென்பகுதி மாகாண சபைகளுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதுதான். சுருங்கச் சொன்னால் சமச்சீரான அதிகாரப் பகிர்வு தான் மேற்கொள்ளப்படவேண்டும். சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு வழங்கப்படக்கூடாதுஎன்பதே தென்பகுதி மாகாண சபைகள் முதலமைச்சர்களின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்று தென்பகுதி மாகாண சபைகள் கூறுகின்றன.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு கானும் ஒரு நடவடிக்கையாக இலங்கையில் மாகாண சபை முறை 1987 இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால், இன்று வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை நிர்வாகமில்லை. வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகம் மத்திய அரசின் ஓர் அங்கமாகவே காணப்படுகிறது.எனவே,

## உதயன்

தாய்லாந்து பேச்சு வார்த்தையில் காணப் படப்போகும் அரசியல் தீர்வு மூலம் கிடைக்கும் அதிகாரங்களை தாங்களும் அனு பவிக்கவேண்டும் என்ற எண்ணம் தென்பகுதி மாகாண சபைகளுக்கு ஏற்பட்டுவிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு விசேட அந்தஸ்துடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதைத் தடுப்பதற்கான முயற் சிகள் மறைமுகமாக இடம்பெற்று வருவதை இது காட்டுகிறது என்பது தமிழ் வட்டாரங்களின் கருத்து.



இது இவ்வாறிருக்க இலங்கையில் தற்போது சமாதானத் துக்கான சூழல் ஏற்பட்டிருப்பது சகல பிரிவு மக்களுக்கும் ஏற்புடைய, விருப்பத்துக்குரிய விஷயம். யுத்தம் நிறுத்தப் பட்டிருப்பது நிம்மதியைத் தருகிறது. எல்லோரும் வரவேற்கிறார்கள். சமாதானப் பேச்சு நடத்த வேண்டியதன் அவசியம் கடந்த ஆட்சிக் காலத் திலேயே உணரப்பட்டது. அடிப்படையில் இப்பிரச் சினை, இலங்கையைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்திலுள்ள அந்தஸ்து யாது என்பது பற்றிய பிரச்சினையாகும்.

சிங்கள மக்களுக்கு மொழி, மதம் முதலியவற்றில் கிடைத் திருக்கும் அரசியல் சட்ட அந்தஸ்து எதுவும் தமிழ் மக்களுக்கில்லை. இந்தியாவின் தலையீட்டின் பின்னர் தமிழ் உத்தியோக மொழியாக, தேசிய மொழியாக 1987 இல் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் நடைமுறைப் படுத்துவதில் பல குறைபாடுகள் உள்ளன.

சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதை ஒப்புக் கொண்டுள்ளார். சிறுபான்மையினரை நடத்திய விதத்தால் இலங்கையை ஒரு தேசமாகக் கட்டி வளர்க்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து யாது? தமிழ் மக்கள் எந்த முறையில் நடத்தப்பட வேண்டுமென்பது சம்பந்தமாக மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடை பெறக்கூடிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

(தொடர்ச்சி14ம் பக்கம் பார்க்க)

A2Z Maple Inc.

"Linking you to the best quality services"

**வாகனக் காப்புறுதி:**
வாகனக் காப்புறுதிக்கு அதிக பணம் செலுத்துகிறீர்களா? விபத்துக்கள், tickets? நாங்கள் உதவி செய்கிறோம்.

**Mortgage:**
Trouble finding a mortgage?
Bad credit drags you down?
Call us for free consultation!
We won't let you down!

**Video-Photo-DJ**
திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்த நாள், அரங்கேற்றம் மற்றும் அனைத்து மேடை நிகழ்ச்சிகளையும் படமாக்கவும் அதிநவீன உபகரணங்கள் கொண்டு Edit செய்ய.

**வீடு வாங்க விற்க:**
Buy and sell your home with us
Quick mortgage arrangements for our customers. Agents are from recognized Brokers.

**துப்பரவு செய்தல்:**
Home carpet, Car intterior,duct, unwanted material removal, Lawn cutting,drive way ceiling.
Other needs? Call us!

**திருத்தவேலைகள்:**
சமையல்அறை,குளியல் அறை basement, அலுவலகம் மற்றும் அனைத்து திருத்தல் வேலைகள்.

**சுற்றுலா பிரயாணம்:**
7 பேர் முதல் 46 பேர் வரை அமரக்கூடிய குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் உங்கள கோடை விடுமுறையைக் கழிக்க

**Carpet,Tiles & Blinds:**
Multi selection of carpet and tiles.
Custome made blinds to suit your home.Proffesional Installations.
Call us for free estimate.

We also do RESUME preparations and Legal letters (of any kind)

**2900 Eglinton Ave E**
**Unit 202 and 203**
**Scarborough**
**Ontario,M1J 2E4**

Duct cleaning special
in Scarborough $125
up to 2 hooks and 15 vents
or ($20 per hook & $6 per Vents.)

**Phone: 416.430.0111**
**Fax: 416.430.0222**
**www.a2zcanada.com**

**உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில்**
**பூர்த்திசெய்துகொள்ள முதலில் எங்களை அழையுங்கள்**

**Video(VHS) casstte to DVD transfer $49.99*** **(regular price$99.99)**
Keep your memories digitally secured, bring your weddings, birthdays, first communions..etc, cassettes, we will store it on DVD. (2 hrs price)
*Special sale for one month only




கனடிய நண்பன்
CANADIA NANPAN

# 'வாழும் தமிழ்' புத்தகங்களின் கண்காட்சியும் கருத்தரங்கும்

**- அ. சிவானந்தன்**

1991ம் ஆண்டு கனடாவில் காலம் என்னும் சஞ்சிகையை சில்லாலையைச் சேர்ந்த செல்வம் அருளானந்தம் அவர்கள் வெளியிட்டு அதன் ஆசிரியராகவும், விளங்கினார். இதன் ஒரு பகுதியாக விளங்குவது வாழும் தமிழ். இது தமிழ்ப் புத்தகங்களின் கண் காட்சியைக் குறிப்பதாகும்.

கல்வியைக் குருவழியில் கசடறக் கற்றவர்கள் ரேறிஞர்களாக விளங்கியுள்ளார்கள். இவர்கள் இம்மண்ணுலகில் என்றும் வாழும் தன்மைக்குரியவர்கள். மேன்மை யான கல்வி அறிவைப் பெறவதற்கு எண்ணற்ற நூல்களை முறையாக கற்க வேண்டும். கல்வி அறிவோடு முதன்மையாக இறைவனை வழிபாடு செய்தால் அக்கல்வியறிவு உலகோருக்கு எல்லாம் மிக்க பயனைத் தரும் என்பது நிச்சயம். திருவள்ளுவர் கற்றதனாலாய பயன் என்கொல்வாலறிவன் நற்றார் தொழாள் எனின் என்று குறளில் குறிப்பிட்டுள்ளார்.எனவே நறறாள் தொழும் கல்வியை ஊக்குவிக்கும் தன்மையாக வாழம் தமிழ் விளங்குகின்றது. இதற்கு அமைய தமிழ்ப் புத்தகங்களின் கண்காட்சி ஜூன் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சென்கிளையர் வீதியில் இலக்கம் 2723 சென்கொலம்பியா தேவாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றள்ளது. இக் கண்காட்சியில் பலதரப்பட்ட நூல்கள் காணப்பட்டன. சிறப்பாக சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், வரலாறுகள், பேரறிஞர்களின் சுயசரிதைகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், போன்ற நூல்களும் இடம்பெற்றன. நாடகத் தமிழ்நூல்களும், சினிமாத்துறை நூல்களும், காணப் பெற்றன. இத்தகைய நூல்களை வரகை தந்த தமிழ்பேசம் மக்கள் ஆர்வத்தோடும், விருப்போடும் வாங்கி யமையைக் காணக் கூடியதாக இருந்தது. இன்னும் ஒரு பகுதியில் தரமான எண்ணற்ற நூல்களும் வைக்கப்பட்டன. கனடாவில் வெளிவந்த நூல்களும் விற்பனையில் இடம்பெற்று விளங்கியது. குறிப்பாக யாழ்பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்களால் வெளியிட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வு ஆய்வு நூலும், ஆசிரியர் பத்மனாதன் எழுதிய சிந்தனைப்பூக்கள், கவிஞர் கந்தவனம் எழுதி வெளியிட்ட நூல்களும், இடம்பெற்று விளங்கின. இன்னும் எண்ணற்ற தமிழ் நூல்களும், அடுத்த ஆண்டில் இடம்பெறலாம் என எண்ணகின்றோம். கனடாவில் வாழும் தமிழ் மக்கள் நூல்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவது நன்று. இதனால் எழுத்தாளர்களின் பல்வேறு விதமான படைப்புக்கள் வெளிவருவதற்கு மிக உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



எழுத்தாளர் மு. பொன்னம்பலத்துடன் சுமதிரூபன்

தமிழ் புத்தகங்களின் கண்காட்சியை தொடர்ந்து மாலை 5.00 மணியளவில் சிறப்பான கருத்தரங்கம் ஒன்றும் இடம்பெற்றது. யோக் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சேரன், பிரபல எழுத்தாளர் மு. பொன்னம்பலம் முதுஅறியாளர் வெங்கட்ரமணன் அவர்களும் நவீன விமர்சனப் பார்வையாளர் வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். இவர்களை வருகை தந்த தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் பலநூல்களை வெளியிட்டஆசிரிய அன்பர் என். கே. மகாலிங்கம் அவர்கள். சேரன் அவர்கள் அளவெட்டி என்னும் ஊரைச் சேர்ந்த மகாகவி உருத்திர மூர்த்தி அவர்களின் புதல்வர். இவர் சிறந்த கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாளர், விமர்சகர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பல கவிதைநூல்களை எழுதி வெளியிட்டவர். சிறப்பாக யமன், எலும்புக் கூடுகளின் ஊர்வலம், இப்போது இறக்கும் ஆறு போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஆங்கில விமர்சனப்பத்திரிகையைச் சிறப்பாக வெளியிட்ட பெருமைக்குரியவர். கொழும்பில் வெளிவந்த சரிநிகர் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து 10 ஆண்டுகளாக நடத்தியவரும் இவரேயாகும். இதனால் இவர் பத்திரிகைத்துறையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர் என்பதில் ஐயமில்லை. TVI தொலைக் காட்சியில் பல்வேறு துறைகளில் திறமை மிக்கவர்களைப் பேட்டி காணும் பொழுது மிகப் பொறுமையாகவும், அவதானமாகவும், அடக்கமாகவும், அன்பாகவும், உரையாடுவதில் இவர் தனிச் சிறப்பு மிக்கவர். இந்த ஊர் தான் கனகசபைப் புலவர், வைத்தியநாத முனிவர் ஆகியோர் வாழ்ந்த பூமி என்பது குறிப்பிடத்தக்கது.



கருத்தரங்கில் கலந்து கொண்ட பார்வையாளர்கள்

அன்பர் சேரன் கருத்தரங்கில் காமம் செப்பாது கண்டது மொழியோ என்ற அடியைத் தெளிவாக ஆறுதலாக இயம்பியபோது வருகை தந்த தமிழ் மக்கள் உள்ளத்தில் அதன் முதலடியாகிய கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி என்ற நினைவு தோன்றியதோடு மதுரைப் பெருமான் இயற்றிய திருப்பாசுரம் என்ற பக்தி இன்பமும் நிலைபெறலாயிற்று. இதனால் முதலில் இறைவன் திருவடி வணக்கத்தை தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலை பெறச் செய்துள்ளது. அடத்த சிறப்புப் பேச்சாளராக வருகை தந்த புங்குடுதீவைச் சேர்ந்த எழுத்தாளர் மு. பொன்னம்பலம் அவர்கள் ஆத்மார்த்தமும் கவிதையும் என்னும் பொருளில் ஆழமான தெளிவான கவிதையை நமக்குத் தந்து இன்புற்றார். இவர் கவிதை கட்டுரை, சிறுகதை முதலிய துறையில் மிகுந்த ஈடுபாடும் ஆளுமையம் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் திசை என்னும் பத்திரிகையை நடாத்தியவர். மேலும் புராண சர்வோதய அமைப்பின் கீழ் பல நற்பணிகளைச் செய்து ள்ளார்.இவர் கடலும் கரையும் என்னும் சிறுகதைத் தொகுதி நூல் காலில்லை கவிதை தொகுதி நூல், சிறுவர்களுக்கான ஊஞ்சல் ஆடுவோம் என்ற கவிதைநூல் திறனாய்வு சார்ந்த பார்வை என்னும் கட்டுரை நூல் நோயில் இருத்தல் என்ற நாவல் ஆகிய வற்றை வெளியிட்டவர். இந்நூல் சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது. இதற்குரிய வெளியீட்டு விழா இம்மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக் கிழமை 3330 பாமஸி அவனியூவில் உள்ள மெஹா பாட்டி ஹோலில் நடை பெறவுள்ளது.



"காலம்" ஆசிரியர் செல்வம் தனது துணைவியாருடன்

முது அறிவியலாளர் வெங்கட் வெங்கட் ரமணன் அவர்கள் அறிவியல் மெய்ப்பாடு என்னும் விடயத்தை பற்றி அரிய கருத்துக்களை நமக்கு தந்துள்ளார். கும்ப கோணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கும்பகோண அரசினர் கல்லூரியில் கற்று 1985ல் விஞ்ஞான பட்டதாரியாக விளங்கினார். இதன் பின்னர் விஞ்ஞானத்தில் முது மாணிப்பட்டத்தை 1987ல் பெற்றார். பின்னர் பெங்களூர் இந்திய அறிவியல் கழகத்தில் லேசர் என்ற ஆய்வில் ஈடுபட்டு கலாநிதி என்னும் பட்டத்தை பெற்றவர். இவர் அணுசக்தி ஆராய்விலும் ஈடுபட்டு வெற்றி கண்டவர். 1999- 2001 வரை யப்பானில் உள்ள டோக்கியோ பல்கலைக்கழத்தில் அறிவியற்றுறை நுட்பம் என்னும் பட்டத்தை பெற்றவர். இவர் 2001 ம் ஆண்டு கனடா வந்து ஒன்ராறியோ ஒளியியல் ஆராய்வில் ஈடுபட்ட முது அறிவியலாளர் என்ற பட்டத்தையும் பெற்றார். கணணித்தறையில் மிகுந்த ஆர்வமுள்ள இவர் தமிழ்க் கணணி மென்கலத்தை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. தொடர்ந்து. இன்மையில் பிரதிகள் என்னும் விடயம் தொடர்பாக வரன் சிறப்பாக உரையாற்றி வருகை தந்த மக்கள் மனதில் பதியச் செய்தார். நாட்டார் இயல் என்னும் பட்டத்தை பெற்ற இவர் சிறந்த கட்டுரையாளர். இலக்கிய விமர்சனம் செய்வதிலும் திறமை மிக்கவர். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் கொண்டவர். அடுத்து கவிஞர் செல்வம் அருளானந்தம் 1985ல் கட்டிடக் காட்டுக்கள் என்னும் கவிதைதொகுதியை வெளியட்டவர். இவருடைய காலப் பதிப்பகம் பல நூல்களை வெளியிட்டது. இவர் சிறந்த நாடகாசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிரபராதியின் காலம் என்னம் நாடகத்தை கனடிய மண்ணில் நிறைவு செய்த பெருமையும் இவருக்கே உரியது. இதுவே கனடாவில் நடைபெற்ற முதல் நாடகமாகும். இறுதியாக வாழும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியும் கருத்தரங்கும் சிறப்பாக நடைபெற்றமையை வருகை தந்த தமிழ் மக்கள் உணர்ந்து இன்புற்றார்கள் என்பதில் ஐயமில்லை.

# 'சந்திராஸ்' உணவகத்தினரால்



ஸ்காபரோ நகரில் மக்கள் மனதில் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள சந்திராஸ் உணவக ஸ்தாபனத்தினரால் நடத்தப்பட்ட பரிசளிப்பு வைபவமும், ஒன்றுகூடல் நிகழ்ச்சியும் அண்மையில் ஸ்காபரோ எக்லிங்டன் வீதியில் அமைந்துள்ள றோயல் குயின் உணவக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியை சந்திராஸ் உணவக உரிமையாளர் திருமதி சந்திரா ஆனந்தராஜா உட்பட அவரது குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்தார்.

சந்திராஸ் உணவகம் தனது வாடிக்கையாளர்களுக்காக நடத்திய அதிஷ்டக் குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், சந்திராஸ் பணியாளர்களுக்கு கௌரவம் செய்யும் நிகழ்ச்சியும் அன்றைய தினம் முக்கியமான அம்சங்களாக இடம்பெற்றன.

மேற்படி வைபவத்தில் உதயன் விழாவிற்காக கனடாவிற்கு வருகை தந்திருந்த நடிகர் வினுச்சக்கரவர்த்தி, வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. தேவராஜ் அவர்களும் மற்றும் கனடா தமிழ் வர்த்தக சம்மேளன தலைவர் திரு. குலா செல்வத்துரையும் வர்த்தகப் பிரமுகர்களான திரு. கணேசன் சுகுமார் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன், கிளையார்போர்ட் அதிபர் திரு. ஜே. ராஜரட்ணம், கீதவாணி நடா ராஜ்குமார் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிகளை கீதவாணி அறிவிப்பாளர் திரு. குயின்ரஸ் துரைசிங்கம் தொகுத்து வழங்கினார். லிபரல் கட்சிப்பிரமுகரும், வர்த்தகப் பிரமுகருமான திரு. கணேசன் சுகுமார், திரு. குலா செல்வத்துரை ஆகியோர் உரையாற்றுகையில் சந்திராஸ் உணவகத்தின் குறுகிய கால வளர்ச்சியினை பாராட்டிப் பேசினார்கள்.

சந்திராஸ் நிறுவன அதிபர் தனது உரையில் தனது நிறுவனத்தின் வளர்ச்சிக்காக உதவிய தனது குடும்பத்தினர், பணியாளாகள், மற்றும் உதயன் பத்திரிகை வானொலிகள் போன்ற தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றுக்கு நன்றி கூறினார்.

நடிகர் வினுசக்கரவர்த்திக்கு திரு. ஆனந்தராஜா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அதிஷ்டக் குலுக்கலில் முதற்பரிசு பெற்றவருக்கு நடிகர் வினுச்சக்கரவர்த்தி தங்கப்பதக்கம் அணிவித்தார். இரண்டாவது பரிசு பெற்ற திருமதி அரியமலருக்கு திரு. நடா ராஜ்குமார் பரிசு வழங்கி கௌரவித்தார்.



இங்கே காணப்படும் படங்களில் பிரமுகர்கள் உரையாற்றுவதையும், சந்திராஸ் பணியாளர்கள் கௌரவிக்கப்படுவதையும், அதிஷ்டக் குலுக்கலில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதையும் மேடையில் நடிகர் வினுச்சக்கரவர்த்தி, திரு. குலாசெல்வத்துரை, திரு. தேவராஜ், திரு. கணேசன் சுகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் திரு. ஆனந்தராஜா நடிகர் வினுச்சக்கரவர்த்திக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் காணலாம்.




மொத்தத்தில் அன்றைய விழா மிகவும் சிறப்பான விழாவென கலந்து கொண்டவர்கள் பாராட்டிச் சென்றார்கள்.

சிறப்பாக பணியாற்றிய தனது ஊழியர் ஒருவருக்கு திருமதி சந்திரா ஆனந்தராஜா துவிச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.



# நடத்தப்பட்ட இனியதோர் ஒன்றுகூடல்





# யாழ்ப்பாணத்தில் காடையர் கோஷ்டிகளின் அட்டகாசம்

யாழ்ப்பாண பகுதியில் தமிழகத்தை போல காடையர் கோஸ்டிகள் உருவாகியுள்ளனவா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது தீனா குழு, பாட்சா குழு என்று தமக்கு பெயர்களை சூட்டிக்கொண்டு அங்கு அடவாடித்தனங்களில் அந்த குழுக்கள் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது

இதற்கு உதாரணமாக அண்மையில் அங்கு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. யாழ்.நகரப் பகுதியில் குளிர்பான நிலையம் ஒன்றின் முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் மதுபோதையில் சென்றதாகக் கூறப்படும் இளைஞர் கும்பல் ஒன்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குடும்பப் பெண் ஒருவருடன் அங்க சேஷ்டை புரிந்ததை அடுத்து ஏற்பட்ட கைகலப்பில் அந்தப் பெண்ணின் கணவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நீண்ட காலத்தின் பின்னர் நீர்கொழும்பில் இருந்து தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக இங்கு வந்த குடும்பப்பெண் ஒருவருடனேயே சுமார் 22 வயது மதிக்கதக்க இளைஞர் ஒருவர் அங்கசேஷ்டை புரிந்தார் என்று கூறப்படுகிறது.பிரஸ்தாப பெண்ணின் கணவர் அந்த இளைஞனை எச்சரிக்கை செய்த சமயம் இந்த இளைஞனும் அவரது சகாக்களும் சேர்ந்து கணவனை அந்த இடத்தில் வைத்தே தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பெண்ணின் கணவர் விடுதலைப் புலிகளின் யாழ்.அலுவலகத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துவிட்டு திரும்பி வந்த போது அந்த இளைஞர் குழு மீண்டும் அவரைத் தாக்க முற்பட்டபோது கைகலப்பு ஏற்பட்டது.

நியாயம் கேட்க முற்பட்ட இளைஞர் ஒருவர் உடைந்த போத்தலால் குத்திக் காயப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண்ணின் கணவரான எஸ்.அசோக் (வயது 32, நீர்கொழும்பு) என்பவரும் எஸ்.பென்சன் (வயது 27, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்) என்ற இளைஞனும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பெண்ணோடு சேஷ்டை புரிந்தவர்கள் என்று கூறப்படும் இளைஞர் குழு தம்மைத்தாமே தீனா குறூப்; என்று கூறிக்கொண்டு முன்னரும் பல தடவை யாழ். நகரப் பகுதியில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டிருப்பதாக நகரவாசிகள் தெரிவித்தனர்.



ஊழியர் ஒருவருக்குத் துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

## பழைய எதிரியான ஜேவிபி யுடன் இணையவுள்ள சுதந்திரக் கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவது எனவும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் போது கூட்டணி அமைத்து ஒன்றாக போட்டியிடுவது எனவும் முடிவுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது 1971 ஆம் ஆண்டு சிறிமா அம்மையார் பிரதமராக இருந்தபோது ஆயிரக்கணக்கான ஜேவிபி உறுப்பினர்களை கொன்று குவித்தவர் என்பது இங்க கவனிக்கத்தக்கது அண்மையில் லண்டனுக்கு சென்றிருந்த சுதந்திரக்கட்சி அமைப்பாளர் மங்கள சமரவீரவும், நிமால் சிறிபால டி சில்வாவும் கடந்தமாதம் 28 ஆம் திகதி ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்திருந்தனர்.இச்சந்திப்பின் போதே அரசாங்கமும், புலிகளும் செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது எனவும் இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.ஜே.வி.பி. தலைவருடன் பேச்சு நடத்தியதை உறுதி செய்துள்ள மங்களசமரவீர, பேசப்பட்ட விடயம் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.இதேவேளை, சுதந்திரக்கட்சியின் இன்னுமொரு முக்கிய உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்காவும் லண்டனுக்குச் சென்று சோமவன்சவை சந்திக்கவுள்ளார்.

## திருநெல்வேலியில் மின்சாரம் தாக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் பலி

திருநெல்வேலிப் பகுதியில் மின்சாரத்தினால் தாக்குண்ட குடும்பத்தின் அவலம் தொடர்கின்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார் பிள்ளைகள் மூவரையும் ஏற்கனவே இறந்துள்ளனர் இவர்களைத் தொடர்ந்து நான்காவது நபரான தாயாரும் நேற்று முன்தினம் புதன் கிழமை உயிரிழந்துவிட்டார். திருநெல்வேலி, வளாக வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிவயோகநாயகி (வயது55) என்ற தாயாரே உயிரிழந்தவராவார். மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் புதிதாக அன்ரனா பொருத்திய சமயம் உயர் அழுத்த மின்சார விநியோகக் கம்பி மீது ;அன்ரனா; பைப் சாய்ந்ததில் தாயும் மூன்று பிள்ளைகளும் மின்சாரத்தினால் தாக்குண்டு படுகாயமடைந்தனர்.ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்தவேளை பிள்ளைகள் மூவரும் அடுத்தடுத்து உயிரி ழந்தனர். நேற்று நான்காவது நபரான தாயாரும் உயிரிழந்து விட்டார் மேற்படி சம்பவம் வடபகுதியில் மக்கள் மத்தியில் மிகுந்த சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

**உதயன் தொடர்புகளுக்கு**
**416-752-1524**

## இலங்கையின் சமாதான....

10 (ம் பக்கத் தொடர்ச்சி) தமிழர் தரப்புக்காகப் பேசுபவர்களாக விடுதலைப்புலிகள் மாத்திரமே இருத்தல் வேண்டுமென்பதை இலங்கையின் கடந்த அரசும், இந்த அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன.இது அரசுக்கும், புலிகளுக்குமிடையில் உள்ள பிரச்சினை பற்றிய பேச்சல்ல. இலங்கையின் தமிழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் என்ன இடம் அளிக்கவேண்டு மென்பது பற்றிய பேச்சாகும்.புலிகளுடன்தான் பேச்சு நடத்தவேண்டுமென்ற தேவை உருவானதற்கான காரணம், கடந்த 27 ஆண்டுகளாக நடந்த பல பேச்சுவார்த்தைகளில் ஒத்துக்கொண்டவற்றை இலங்கை அரசு அமுலாக்கவில்லை என்பதுதான்.

தமிழர் விடுதலைக்கூட்டணியுடனும், இந்திய அரசுடனும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை. இதனால்தான் போர் தொடர்ந்து நடக்கிறது. போரைத் தொடர்ந்து புலிகள் நடத்துவதால் புலிகளோடு பேசவேண்டும் என்று தேர்தல் மூலம் வந்த தமிழர் பிரதிநிதிகளில் 2 பேர் தவிர, 14 பேர் சொல்கிறார்கள். அந்த 2 பேரும் கூட புலிகளோடு பேசக்கூடாது என்று சொல்லவில்லை.இப்பேச்சுவார்த்தைக்கான சூழல் ஏற்பட முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த அடிப்படையில் போர் நிறுத்தப்பட்டது. சில நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் பல செயல்படுத்த வேண்டியுள்ளன. புலிகளுக்கு அதிக இடம்கொடுத்து விட்டதாகச் சில சிங்கள சக்திகள் கூறத் தொடங்கியுள்ளன.

சிங்களச் செய்தி ஊடகங்கள் இதுகாலம் வரை தமிழர் கோரிக்கைகள், போராட்டங்கள் பற்றிச் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறிய முறைமை காரணமாகச் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் கோரிக்கை என்பது பிரிவினைக்கு இடம்கொடுப்பது என்ற எண்ணம் இருந்து வருகிறது.இதனால், சிங்கள மக்கள் இன்றும் பயப்படுகிறார்கள். சில சிங்கள ஊடகங்கள் இன்னும் தங்கள் தொனியை மாற்றிக்கொள்ளவில்லை. இவற்றின் ஊடே மிகச் சிறிய குழுவினர் தமிழர்களுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படவேண்டுமென்று வேண்டுகிறார்கள்.பாரம்பரியத் தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளியினர் என மூன்று பிரிவினர் இலங்கையில் தமிழைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் முஸ்லிம்கள் தங்களைத் தமிழர்களாகப் பெரிதும் அடையாளம் காண்பதில்லை.

இது இலங்கையின் வரலாற்றின் ஊடாக வரும் நிலைப்பாடு.வட-கிழக்கை பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்டவர்கள் பாரம்பரியத் தமிழர்கள். முஸ்லிம்கள் வடகிழக்குப் பகுதியில் 33 சதவீத பேராகவும், அதற்கு வெளியிலும் உள்ளனர். நடுப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் உள்ளவர்கள் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள்.வடகிழக்கு மாநிலமாகப் பிரித்து அங்கு ஓர் உள்ளூர் மாநில ஆட்சி 87 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது.துரதிர்ட்டவசமாக அது சரியாக நடைபெறவில்லை.

அதிக அதிகாரம் வழங்காததால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினரே அதிலிருந்து விலக வேண்டி நேரிட்டது. இன்று அங்கு ஆளுநர் ஆட்சியின் கீழ் மாகாண சபை உள்ளது.இடைக்காலத் தீர்வாக வடகிழக்கு மாநில ஆட்சியைப் புலிகள் ஏற்பதும், அதன் பின்னர் ஏற்படக்கூடிய தேச நிலைப்பட்ட வளர்ச்சிகளின் பின்புலத்தில் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்தியாவின் அனுசரணையும், ஈடுபாடும் இல்லாத எந்த ஒரு தீர்வும் நிரந்தரமாக இருக்கமுடியாது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகளை எதிர்ப்பவர்களில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியைச் சேர்ந்தவர்களை விடவும், இந்திய விஸ்தரிப்புவாதம் என்று கூறி இந்தியாவை எதிர்ப்பதையே தங்கள் கொள்கையாகக் கொண்டுள்ள ஜே.வி.பி.எனும் மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியினரே பிரதானமாக அவர்களின் பின்னே சிங்கள இனவாத சக்திகள் ஒன்று திரண்டுள்ளன.இந்தச் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்ட பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள இலங்கை சுதந்திரக் கட்சி முனைகிறது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவரை விடவும், சந்திரிகாவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்கவே அதிகம் இனவாதம் பேசுகிறார். எனவேதான், இந்தியாவின் அனுசரணையும், ஈடுபாடும் இந்தத் தீர்வில் இருத்தல் வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியோ உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே! என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன். உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்த 3 நாட்களுக்கு இச்செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்பவரின் தேவை நிறைவேறும். இச்செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!


எமக்கென்று ஓர் இல்லம் அமைத்திட...
எம்மை அழைத்திடவும்.



உங்கள் ஊழியன்

- ஊதியத்திற்கேற்ப வீடு வாங்க
- நிதிவசதி ஒழுங்கு செய்ய
- வியாபாரங்களை வாங்க
- வாடகையை சொத்தாக மாற்ற



Web: http://www.royallepage.ca/neel
E-mail: neel@royallepage.ca

Bus. (416) 560-4728
(905) 793-5000
Res. (905) 678-7343
Fax. (905) 793-5020

Neel Surendran
Sales Representative
ROYAL LEPAGE
Royal LePage Real Estate Services Ltd., Broker





கிறிஸ்தவ விசுவாச
குடும்ப ஆராதனை ஸ்தலம்

"நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார்"
(யோவன் 10:11)

வியாதிகள், பிரச்சனைகள், கஸ்டங்கள், வேதனைகளோடு இருப்போர் எல்லோரையும் எல்லோரையும் இயேசு அன்போடு அழைக்கிறார் வந்து ஆசீர்வாதம் பெறுங்கள் யூன் 9ம் திகதியிலிருந்து பிரதி ஞாயிறு தோறும் 11:00 மணிக்கு ஆராதனை நடைபெறும்:

இடம்:
CEDAR BROOK COMMUNITY CENTRE
91 EAST PARK BLVD, SCARBOROUGH

Lawrence Ave. E
East Park
Markham Rd
Eglinton Ave. E

போதகர்: சாம் ரெபேக்கா சுந்தரலிங்கம்



தீராத நோய்களைத் தீர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**Dr. (Mrs.) K. வசந்தகுமார்**
(அக்யுபஞ்சர் வைத்தியர்)
D.AC., M.AC.F., M.AC.A.N.A., M.CACA.,

★காசநோய்(Asthma) ★மூட்டுவலி(Rheumatism & Rheumatoid)
★நீரழிவுநோய்(Diabetes) ★சர்மவியாதிகள்(Skin diseases)
★மனத்தளர்ச்சி(Depression) ★வயிற்றுவலி(Gastritis)
★வயிற்றுப்புண்(Ulcer) ★தலைவலி(Headache, Sinusitis)
★பீனிசம்(Rhinitis) ★உடல்பருமன் குறைத்தல் (Loss of Weight)
முதலான தீராத நோய்களுக்கு அழையுங்கள்

Mon. - Fri
9.30-12.00, 4.00-8.00
Sat. 9.00-1.00, 3.00-8.00

416-754-4024, 416-321-5557
4565 Sheppard Ave. East, #205 Mccown & Sheppard



வீடு வாங்க விற்க
அல்லது இலவச ஆலோசனைகளுக்கு
your #1 Choice

Century 21
Affiliate Realty Inc.
80 Corporate Drive #208
Toronto, ON M1H 3G5

வீடு விற்பவர்களுக்கு
special package
available!

Arun Chellappah
Bus: 416-290-1200 Res: 905-472-5089
Cell: 416-994-9411



# பயணம்

ஆசிரியர்: ஸ்ரீபதி சிவனடியான்

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இலண்டன், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கான உதயனின் விஷேட இணைப்பு


# தலைவர் சிவாவின் தனித்துவம் நிறைந்த அரசியல் பாதை

வல்வை . ந. நகுலசிகாமணி

தலைவர் சிவாவின் மறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.



உடுப்பிட்டிச் சிங்கம் எனத் தமிழ் மக்களால் அன்பாக அழைக்கப்பட்ட மதிப்பிற்குரிய திரு. மு.சிவசிதம்பரம் வடமராட்சியிலுள்ள கரவெட்டியில் திரு. திருமதி முருகேசு தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்தார். இவருடைய குடும்பமும் யாழ்ப்பாணத்தில் முன்னணிக் குடும்பமாகக் கருதப்பட்டு 1918ம் ஆண்டு கல்லடி க. வேலுப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவகௌமுதி என்ற யாழ் சரித்திரத்தில் 201 பக்கத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது இவரின் பூட்டனார் கரவெட்டி தெற்கில் விளங்கும் ஆங்கில திராவிட(சைவ) வித்தியாசாலையையும் அதனருகில் இருக்கும் பெண்கள் பாடசாலையையும், அல்வாய் துன்னாலையையும் கரணவாய் துன்னாலையையும் இணைக்கும் பாதையையும் ஸ்தாபித்தவர்.

1956ம் ஆண்டு உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்றத் தேர்தலில் திரு. ராமலிங்கம், திரு.கே.சி. நடராஜா(தலைவர் சிவசிதம்பரம் அவர்களின் மாமனார்), முதலியவர்களுடன் திரு. கந்தையா(கம்யூனிஸ்ட்) ஆகியோர் போட்டியிட்டபோது சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த சிவசிதம்பரம் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்ட கம்யூனிஸ்ட கட்சியின் வேட்பாளர் கந்தையாவிற்கு ஆதரவாக நின்று பல கூட்டங்களில் பிரச்சாரம் செய்தார். அத்தேர்தலில் திரு. கந்தையா அவர்கள் முதலும் கடைசியுமான கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1960ல் பாராளுமன்றத் தேர்தலில் ஜி.ஜியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.18 ஆண்டுகள்பாராளுமன்ற உறுப்பினராகவும், துணை சபாநாயகராகவும், பணியாற்றினார்.

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி தந்தை செல்வா தலைமையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாகியது. அப்போது காங்கிரஸ் கட்சியில் இருந்த சிவா தனது தலைவர் பொன்னம்பலத்தின் சொல்லையும் மீறி செல்வா தலைமையில் போராட்ட களத்தில் இறங்கினார். ஒவ்வோர் இரவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் சத்தியாக்கிரகம் நடைபெற்றத. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி சிவா தலைமையில் அமைதியான சத்தியாக்கிரகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நள்ளிரவு 12 மணிக்கு அவசரகாலச் சட்டம் பிரகடனஞ்செய்யப்பட்டு அதிலிருந்து 48 மணி நேரத்துள் ஊரடங்குச் சட்டமும் பிரகடனஞ் செய்யப்பட்டது. அன்றிரவே தலைவர் செல்வா உட்பட அனைத்துத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் இராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தொண்டர்கள் குறிப்பாக பெண்கள் தாக்கப்பட்டனர். அப்போது சிவசிதம்பரம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் கைது செய்யப்படவில்லை. அந்த நேரத்தில் இவர் ஆற்றிய அளப்பரிய சேவை வரலாற்றில் இடம்பெற்றது.

1968ம் ஆண்டு ஏப்ரல் 8ம் திகதி பொலிஸ் இராணுவ அட்டூழியம் பற்றி எதிர்த்து வல்வையில் கூட்டப்பெற்ற கூட்டத்தை திடீரென இராணுவ பொலிஸ் படையினர் சுற்றி வளைத்து பருத்தித்தறை பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் உட்பட 150 பேர்களை மண்டபத்தினுள் விட்டுப் பூட்டிப் பொதுமக்களைத் தாக்கி, கடைகளை எரித்தனர். அப்போது ஈழப் போராட்டம் ஏன் ஆயுதப் போராட்டமே ஆரம்பிக்காத காலம் இளைஞர்கள் பெண்கள் உட்பட யாவரும் திருப்பித் தாக்கினர். இளைஞர் ஒருவர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். இளைஞர்கள் மேற்கொண்ட துப்பாக்கியால் பொலிஸாரும் காயமடைந்தனர்.அப்போது நிலமை மோசமாகியதை அறிந்து உடுப்பிட்டி சிவசிதம்பரம் அவர்கள் உடன் வந்து இராணுவத்தினரைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யாது தமது சிம்மக் குரலில் " Put All Your Guns Down" என ஆங்கிலத்தில் சிங்கம் போல் கர்ஜித்து பொலிஸாரை நடு நடுங்கச் செய்ததோடு மண்டபத்தில் இருந்த அனைவரையும் விடுதலை செய்வித்தார். இதனை வல்வை மக்கள் அனைவரும் இன்றும் நினைவு கூர்வார்கள்.

1972 ம் ஆண்டு ஸ்ரீமா அரசு ஆக்கிய புதிய அரசியலமைப்புத் திட்டத்திற்கு தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்தி ஓர் அணியில் திரள வல்வையில் கூட்டப்பெற்ற மாநாடு தமிழ் காங்கிரஸ் சார்பில் வந்து பங்கு பற்றி தொடர்ந்து தந்தை செல்வா தலைவர் அமிருடன் இறுதி வரை பணியாற்றிய பெருந் தலைவன். அமிர்தருக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியை வழிநடத்திச் சென்றவர்.

1983ம் ஆண்டு ஜூலையில் ஜே.ஆர். தலைமையில் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழினத்தின் மீது ஏவிவிடப்பட்ட போது., அவரின் கொழும்பில் இருந்த வீடு, சொத்து அனைத்தும் தீயினால் எரியூட்டப் பெற்றது. இறுதி வாழ்க்கையில் சோகமாக இருந்தவர். பல வருடங்களின் பின் 1997ல் இவரின் பெயரில் 5 லட்சம் காசோலையும் புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரபின் கடிதமும் இருந்தது. நொறிஸ் கனல் வீதியில் இருந்த உங்கள் வீடு 1983 இனக்கலவரத்தின் போது முற்றாகச் சேதமாக்கப்பட்டதால் மந்திரி சபை உங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது. தயவு செய்து இக் காசோலையை ஏற்றுக் கொள்ளுங்கள் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தலைவர் தனது வீட்டையும் அதுபோன்று அழிக்கப்பட்ட ஏனைய தமிழர்களின் வீடுகளையும், சொத்துக்களையும், உயிர்நீத்த உடல்களையும் தன் மனக் கண்முன் நிறுத்தினார். அமைச்சருக்கு பதில் கடிதம் வரைந்தார். என் விடயத்தில் கவனமெடுத்ததற்கு நன்றி. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்ட ஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அவர்களில் ஒருவராக நானும் இருந்து நஷ்ட ஈடு பெறுவேன் தற்போதைய நிலையில் எனக்கு மட்டும் அந்த இழப்பீடு வழங்கப்படுவதை என் மனம் ஒப்பவில்லை தயவு செய்து குறை நோக்காது இக் காசோலையை பெற்றுக் கொள்ளுங்கள் எனத் திருப்பி அனுப்பி வைத்தார். திரு. சிவாஅவர்கள் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் இந்தியா சென்றிருந்த வேளையில் உண்ணாவிரதப் போராட்டம், திம்புப் பேச்சுவார்த்தை, இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றில் பங்கேற்று சர்வதேச ரீதியிலும் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர். தனத வாழ்வில் இந்து கிறிஸ்தவ,முஸ்லீம் என்ற வேறுபாடு இல்லாது உழைத்தவர். சொந்தத் தாயகமான யாழில் இருந்து முஸ்லீம் சகோதரர்கள் வெளியேற்றபட்ட போது, மிகவும் மனம் நொந்து அவர்கள் மீளக் குடியேற்றப்பட்டதன் பின் தான் யாழ் செல்வேன் எனச் சபதம் மேற் கொண்ட ஒரு பெருந் தலைவன். இவர் ஒரு சிறந்த சிவ பக்தர். யாழ்ப்பாணத்தில் இருக்கும் காலத்தில் வரலாற்றில் இடம்பெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கும் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கும், அவர் சென்று பல மணிநேரம் வழிபடுவதைக் காணக் கூடியதாக இருக்கும்.எனது முதல் வெளியீடான வல்வெட்டித்துறை வரலாற்று சுவடு நூலிற்கு வரலாற்று ரீதியான அணிந்துரையை அன்பன் எழுதி வல்வை வரலாற்றில் இடம்பெற்ற நாயகன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.


Your best choice for all destinations!

AIR LINK Travel Ltd.

Air Canada | AIR FRANCE | BRITISH AIRWAYS | AIR-INDIA | GULF AIR
KOREAN AIR | KLM | Lufthansa | Emirates | KUWAIT AIR
SINGAPORE AIRLINES | SriLankan Airlines


416-292-6200

மலிவு விலையில் விமானச் சீட்டுகள்
Colombo.............. $1,165.00
Madras.................. $1,290.00
Delhi...................... $1,185.00
Singapore............. $1,176.00
April 27th வரையுமே இந்தச் சலுகை

5200 Finch Ave. E, Suite 115,
Scarborough, ON

உதயன்

# இலங்கையின் சமாதானமுயற்சிகளை இந்தியாவும் அமெரிக்காவும் திசை மாற்றுகின்றனவா?



இன்று தெற்காசிய பிராந்தியத்தில் யுத்தம் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறது. யுத்தம் எப்போது வெடிக்கும்? எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்று எதிர்பார்த்து வல்லரசு நாடுகள் தங்களின் பிரஜைகளை அப்பிராந்தியத்திலிருந்து வெளியேறும்படி கேட்டுள்ளன. இப்பின்னணியில் இந்தியா தனது பாதுகாப்புக் குறித்தே திருகோணமலை எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு எடுத்திருப்பதாகக் கொழும்பில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுனா மகேந்திரன் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

திருகோணமலையும், தெற்காசியப் பிராந்தியத்தில் இன்னொரு எரிமலைக்குரிய அம்சங்களைக் கொண்டிருப்பதாக உலக நாடுகளின் பார்வையில் தெரிகிறது. இப்பின்னணியில் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத நடுப்பகுதியில் புதுடில்லி பயணத்தை மேற்கொள்ளவிருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்திய விஜயத்தின் போது கொழும்பும், புதுடில்லியும் எண்ணெய்க் குதம் தொடர்பான முக்கிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கை இன்னும் கைவிடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் தான் புதுடில்லி அரசின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன. இதற்கு ஓர் உதாரணமாகவே 1987 உடன்படிக்கையுடன் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களில் பிரஸ் தாபிக்கப்பட்ட திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கைச்சாத்திடப் படவிருக்கும் எண்ணெய்க் குத உடன் படிக்கை அமையவிருப்பதாகப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

புதுடில்லி விஜயத்தின் பின்னரே இலங்கையில் விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படும் அறிவிப்பு வெளியாகுமென்று அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவித்திருக்கிறார். உலகில் எந்த நாட்டுக்குச் சென்று விளக்கமளித்தாலும் பிராந்திய வல்லரசின் சம்மதம் இன்றி எதையும் செய்யமுடியாது என்ற யதார்த்தத்தை இலங்கை புரிந்து கொண்டுள்ளது என்று அவதானிகள் கருதுகின்றனர். எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்குக் கொடுப்பதன் மூலம் தடை நீக்க விவகாரத்திற்கு புதுடில்லியின் அங்கீகாரத்தை கொழும்பு அரசு பெறும் முயற்சி தான் மேற்கொள்ளப்படுகிறதா என்றும் கேட்கப்படுகின்றது.

இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு ஐந்து மாதங்களாகிவிட்டன. ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த அடுத்த சில தினங்களில் விடுதலைப்புலிகள் ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்த அறிவிப்பைச் செய்தனர். அதனைப் புதிய அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. எனினும், முறையான யுத்த நிறுத்தம் அரசும், விடுதலைப்புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட தினத்திலிருந்து (பெப்ரவரி 22) ஆரம்பமானது. கடந்த திங்கட்கிழமையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நூறு தினங்கள் சென்றுவிட்டன.

இந்த நூறு தினங்களில் வடக்கு, கிழக்கில் இயல்பு நிலை தோன்றியுள்ளதா? இரு தரப்பினருக்குமிடையே நம்பகத்தன்மை கட்டியெழுப்பப்பட்டுள்ளதா? இவையெல்லாம் பாராளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றின் மூலம் ஆட்சியாளருக்குப் புரியவைக்க வேண்டிய நிலை தமிழர் வட்டாரங்களுக்கு ஏற்பட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் அம்சங்களைப் புரிந்துகொள்ள மறுத்துச் செயற்படும் போக்குத்தான் அரச படையினர் மத்தியில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதியில் பொதுமக்கள் துன்புறுத்தப்படாதவிதத்தில் சோதனைச் சாவடிகள் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற நகரங்கள், பட்டினங்களில் அகற்றப்படக் கூடியதாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்படவேண்டும்.



புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அடுத்துவரும் 60 தினங்களுக்குள் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். அதாவது ஏப்ரல் 23 க்கு முன்பு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். இது நடைபெறவில்லை. பொது மக்களுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும் என்றும் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், கிழக்கில் அரச படையினர் பொது மக்களை மிரட்டும் மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக முறையிடப்படுகின்றன. ஆனால், என்ன இடம்பெறுகின்றன என்று பார்த்தால், யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை தாமதப்படுத்துவது அல்லது அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுப்பது ஆகியன மூலம் அரசாங்கமும் அரச படைகளும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தக்கூடியதாக இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்தும் இலக்குடன் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை (தொடர்ச்சி10ம் பக்கம் பார்க்க)


SHEPPARD -JANE DENTAL CLINIC




15 வருடங்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போதனா வைத்தியசாலைகளில் கடமையாற்றிய

டாக்டர் முத்துராஜா சத்தியபாலன்

DR. M. SATHIYABALAN

கனடா பல் மருத்துவ பீடத்தில் பல்வைத்திய துறையில் இரு வருட பயிற்சியை முடித்த பின் மீண்டும் கனடாவில் சேவையாற்றுகிறார்

சகல வயதினருக்கும் பற்களை நேராக்கி ஒழுங்கு படுத்தல்
Orthodontics - Braces / Removable Appliance

சிறுவர்களுக்கு பற்கள் கோணலாக, நெருக்கமாக முளைத்தலைத் தடுத்தல்
Paediatrics & Preventive Orthodontics

முரசு கரைவதை நிறுத்துவதற்கான சிகிற்சை
Gum Disease Treatment

பழுதடைந்த வலிதரும் பற்களை அகற்றாது பாதுகாத்தல்
Root Canal Treatment

நிரந்தரமான செயற்கைப் பற்கள் கட்டுதல்
Crown & Bridge

இயற்கையான வெள்ளை நிறத்தில் பல் அடைத்தல்
White Filling

பற்களை சீராக்கி அழகு படுத்தும் சிகிற்சை
Cosmetic Bonding


பற்களை வெண்மையாக்குதல்
Tooth whitening

சகல காப்புறுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்

Family benefit and Welfare உதவி பெறும் குடும்பத்தினருக்கு இலவச பற்சிகிற்சை

சனி, ஞாயிறு தினங்களிலும் திறக்கப்படும்

NORTH YORK
2715 Jane Street
(inside jane & sheppard mall)
TEL: 416-742-5111




தமிழில் தொடர்புகளுக்கு: 416-743-0498

# "வீ.வீ. ரியூரிறிங் சென்ரர்' மாணவர்களின் தற்போதைய கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கின்றது"

– ஹரி பிறவுண்- உபதலைவர் ரொறன்ரோ ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் சங்கத் துணைத் தலைவர்



ரொறன்ரோவில் இயங்கி வரும் பிரபல்யம் வாய்ந்த தனியார் கல்வி நிறுவனமான வீ.வீ. ரியூரறிங் சென்ரர் தன் பரிசளிப்பு விழா 2002ஐ வெகு விமரிசையாகக் கடந்த மே 17.2002 வெள்ளியன்று கனடாக் கந்தசுவாமி கோவில் கலியாண மண்டபத்தில் நடாத்தியது.

ரொறன்ரோ பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்தியக் கலாநிதி ப. ஞானேந்திரன் F.R.C.P. (கனடா) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்விழா பிற்பகல் 6.45 மணியளவில் செல்விகள் அஞ்சனா ஶ்ரீரங்கன், துர்காஷினி ஶ்ரீரங்கன் ஆகியோரின் கனேடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வணக்கம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகியது. அடுத்து மௌனாஞ்சலியும், அதனைத் தொடர்ந்து சதங்கை நர்த்தனாலய ஆசிரியர் திரு. வாசு சின்னராசாவின் மாணவியும், வீ.வீ. ரியூற்றரிங் சென்ரர் மாணவியுமான செல்வி தயானா தயானந்தன் தன் சகபாடிகளான செல்வி ரூபினி தெய்வேந்திரன், அஞ்சனா ஶ்ரீரங்கன், துர்காஷினி ஶ்ரீரங்கன் ஆகியோரின் வரவேற்பு நடனமளித்து சபையோரை மகிழ்வித்தார். குதூகலத்திலாழ்த்தினார்.

இங்குள்ள படங்களில் ஆசிரியை திருமதி ஷரன் தொம்லின்சன், கீதவாணி அதிபர் திரு. நடா ராஜ்குமார், 200, 2001 ஆண்டுகளில் வாட்டலூ பல்கலைக்கழகத்தின் Gayss Cibtestibrஅதி சிறப்புப் பெற்ற வினோத் தருமகுலசிங்கம் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் டாக்டர் பி. ஞானேந்திரன், 2001 3ம் வகுப்பிற்கான வாசிப்பு பரீட்சையில் அதிஉயர் நிலை பெற்ற மாணவி செல்வி நிரோஷினி ரகுநாதன் சார்பில் அவர் தாயார் கமலாதேவி ரகுநாதன் சுந்தரதாஸ் ஞாபகார்த்த விருதைப் பெறுகின்றார். 4ம் வகுப்பில் முதலிடம் பெற்ற ஆதவன் செந்திலாதன், வீ.வீ.ரியூற்றரிங் 2001 ஆண்டுக்கான மாணவன் விநோத் தருமகுலசிங்கம் திரு. பொ. கனகசபாபதி, ஆசிரியர் சங்கத் துணைத் தலைவர் கரன் பிரவுண், 2001 Gauss Contestor Gr.7 பெற்ற மாணவி செல்வி ரெனிக்கா மன்மதராசா, Canadian National Mathematics League 2001 Gr. 5 இல் 1ம் இடம் பெற்ற தினேஷ் ராஜ்குமார், மற்றும் செல்விகள் தயான தயானந்தன், ரூபினி தெய்வேந்திரன், பேராசிரியர் பாலசுந்தரம் ஆகியோரைக் காணலாம். (அடுத்த இதழில் விழா பற்றிய விளக்கமான விமர்சனம் காணலாம்)

# கடன்!

என்னோடு தனித்திருந்த இரவுகள்
தவிக்க விட்ட இரவுகள் எல்லாம் இப்போது
தவிக்கின்றன கோபத்தில்....
முக்கி முனகி நகர மறுத்த இரவுகள்
முண்டியடித்து நகர்கின்றன....
ஏனென்றால்......!
தழுவிடும் துணையொன்று என்னை
அணைத்திருப்பதால்.....

நிம்மதியற்ற நினைவுகளோடு
நித்திரையற்ற விழிகளோடு
நிதமும் நான் பேசிடும் வான் நிலவும்
நெற்றிக் கண் திறந்து என்னைச்
சுட்டெரிக்கப் பார்க்கிறது
ஏனென்றால்....!
நிலவொன்றின் மடிமீது நான்
நித்திரை கொள்வதால்.......

தாலாட்டுப் பாடி என்னைத் தூங்க வைக்க
தவமிருந்து நான் வரம் கேட்டும்
தயவேதும் காட்டாது தயங்கிய
தென்றல் இன்று
தப்பென்று என்மீது ஒரு பார்வை
ஏனென்றால்......!
கதவு தட்டும் ஓசையின்றி வந்த பந்தமொன்று
காதோரம் தாலாட்டுப் பாடுவதால்.....

கண்ணெடுத்தும் பார்க்காத நட்சத்திரங்கள்
நான் கண்ணெடுத்தும் பார்க்காத நட்சத்திரங்கள்
என்னைப் பார்த்துக் கண் சிமிட்ட
காதவழி நின்ற கனவுகளோ....
என்னோடு அடிக்கடி கை குலுக்குகின்றன
ஏனென்றால்.......!
கன்னல் தமிழில் காதல் மொழி பேசும்
அன்னமொன்று என் மார்பில் நீந்துவதால்.....

கடனென்றால் கண்டனக் குரல் கொடுக்கும்
என்னைப் பார்த்து கடன்பட்ட நெஞ்சனாய் கலங்கி
இலங்கேசுவரனுக்கு கழிவிரக்கம்
ஏனென்றால்......!
கேட்காமல் சுகங்கள் தந்துவிடும்
துணையொன்றால் பட்டுவிட்ட என் கடனை எண்ணி
இலங்கேசுவரனுக்கு என்மீது கழிவிரக்கம்.

ரமணி, ஜேர்மனி

# புலம் பெயர்வு - சிறுகதை

22 ம் பக்கத் தொடர்

இல்லாமலிருந்த கமலாவிற்கு அப்போது ஐந்து மாதம். அவர்கள் வாழ்க்கையிலே மிகவும் ரம்மியமான நாட்கள் அவை.

கொழும்பு எங்கும் கலவரம் வெடித்திருந்தது. அவருடைய வீட்டில் வாடகைக்கு இருந்த தமிழ் குடும்பம் எல்லோருமாக சற்று இருட்டும்வரை காத்திருந்து கையில் கிடைத்தவற்றோடு ஒரு கிலோ மீற்றருக்கப்பாலுள்ள சர்ச்சிற்கு அடைக்கலம் தேடி செல்கிறார்கள். "தெமள மரணவ" கோஷமெழுப்பிய படி காடையர் கோஷ்டி ஒன்று தாக்குகிறது. கொண்டு சென்ற நகைகள், பணம் எல்லாவற்றையும் அபகரித்துச் சென்றுவிடுகிறார் கள். 'சண்' இற்கும் பலமான காயம். அவரைத்தாக்க வேண்டாம் என்று கதறித் தடுக்க முயன்ற கமலாவையும் தள்ளி உதைத்து விடுகிறார்கள். அவர்களுடைய வீடு கூட எரித்து தரைமட்டமாக்கப்பட்டது.

உயிர் தப்பியது அதிஸ்டம் என்று மற்றவர்கள் கூறிக்கொள்வார்கள். ஆனால் அந்த உருவம் தெரியாத சின்ன உயிர் பறிக்கப்பட்டதை அவர்களால் என்றுமே ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அதற்குப் பின்பு அவர்களுக்கும் பிள்ளை இல்லாமலே போயிற்று.

சிலகாலம் அந்தச் சோகத்தை இருவரும் பகிர்ந்து ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லி வாழ்ந்தார்கள். பின்பு அந்தச் சோகத்தை மறப்பதற்காகத் தங்களைத் தயார்படுத்தி வாழ்ந்தார்கள். இங்கு கனடாவில் வசிப்பது அந்த சோக நினைவில் இருந்து சற்று விலகி இருந்தாலும் ரணமாகியிருந்த அடிமனத்திலிருந்து துக்கம் அவ்வப்போது கசியத்தான் செய்தது.

திடீரென்று நெஞ்சு அடைத்துக்கொண்டது போல உணர்ந்தார் 'சண்'. தேநீரை குடிக்க எடுக்கிறார். அது வெறும் குளிர் நீராகிவிட்டது. நேரத்தைப் பார்க்கிறார்.

அடுத்த சுற்று 'செக்கிங்' இற்காக வெளியே கிளம்புகிறார். இப்போது இந்தக் குளிர் அவ்வளவு பொருட்டாக அவருக்குத் தெரியவில்லை. ஒருவேளை சற்று நேரத்திற்கு முன்பாக நெஞ்சு விறைத்திருந்ததனாலோ என்னவோ அவருடைய நடையில்கூட ஒரு வேகம், ஒரு உறுதி. ஆம்! 'சண்முகநாதன்' இன்னுமொரு புலம் பெயர்விற்குத் தயாரில்லை.***


மூட்டைப்பூச்சி- எலி- கரப்பான்பூச்சி
100% Eliminatio..
GUARANTEED

FREE ESTIMATES
100% TERMINATION OR MONEY BACK
உங்கள் வீடுகளில்
மூட்டைப்பூச்சி, கரப்பான் பூச்சி,
மற்றும் எலிகளின் தொல்லையா?
PESTOKILL INC.
CALL 24HRS : 416-657-2731 CELL: 416-993-2381


## உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 10.06.2002 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24.06.2002 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 25.06.2002 தீர்த்தத் திருவிழாவும் 26.06.2002 பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெறும் என கனடாவாழ் உரும்பி ராய் மக்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் ஆலய பிரதம குருக்கள் "சிவாகமகிரியாமணி" சிவஸ்ரீ க.மு. ஐயாத்துரை குருக்கள் அறிவித்துள்ளார்.


$24.95
ROGERS
HI-SPEED
INTERNET
$100 REBATE OVER 5 MONTHS
Regular Price per month: ~~$44.95~~*
Less: Rebate per month: 20.00
Per month: $24.95* (For 5 Months)
*no contract *30-day money back Guarantee
Please Contact சுந்தர் to order!
Telephone (416) 564 6397
speednet@canada.com




DR. SUGANTHY SUTHAGAR
டாக்டர் (திருமதி) சுகந்தி சுதாகர்
FAMILY DENTIST
குடும்ப பல் வைத்தியர்

- NEW OFFICE WITH STATE-OF-THE-ART EQUIPMENT
  முற்றிலும் நவீன மயமாக்கப்பட்ட புதிய வைத்தியவசதிகள்
- LATEST STERILIZATION TECHNIQUES USED
  நவீன தொழில்நுட்பக்கருவிகளின் பாவனையுடன் சேவைகள்
- COSMETIC & GENERAL DENTISTRY, INCLUDING:
  பற்களைச் சீராக்குதல், அழகுபடுத்துதல், அத்துடன் எமது பல் வைத்திய சேவைகளாவன
  - PREVENTATIVE, ROOT CANALS, MERCURY FREE (WHITE) FILLINGS, BLEACHING, CROWNS, BRIDGES & DENTURES
    முரசு தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை, பற்களை வெண்மையுடன் பிரகாசித்தல், மேக்குறி முலாம் தவிர்க்கப்பட்ட வெள்ளைநிற அடைப்பு, பற்களின் வேர் அடைத்தல், பல் கட்டுதல்
- SEATION AVAILABLE FOR NERVOUS PATIENTS
  பதட்ட சுபாவமுள்ள நோயாளிகளுக்கு மயக்கியநிலையில் சிகிச்சை அளிக்கப்படும்.
- ORTHODONTICS (BRACES) FOR ADULTS & CHILDREN
  வயது வந்தவர்க்கும் சிறுவர்களுக்கும் பல் கிளிப் போடுதல்
- FREE INITIAL CONSULTATION
  இலவச ஆலோசனை வழங்குதல்
- FREE DENTAL KITS FOR ALL NEW PATIENTS
  புதிய நோயாளிகளுக்குப் பல் ஆரோக்கியம் சம்பந்தமான சிறுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

SHEPPARD AVE. E. / WARDEN AVE.
3410 SHEPPARD AVE. E.,
SUITE 311,
SCARBOROUGH, ON.
M1T 3K4
TEL: 416-299-7466

APPOINTMENTS ALSO AT
1078 WILSON AVE.
DOWNSVIEW PLAZA
TEL: 416-633-6443
WILSON AVE. / KEELE ST.

கடந்த வாரத் தொடர்ச்சி........



அத்தியாயம்: 5

கற்பனைச் சிறகுகளைப் பறக்க விட்டபடி அன்று வெளியான மாதாந்த கவிதை நூலுடன் மொட்டை மாடியில் அரசு அமர்ந்திருந் தான். அங்கு வந்த அஸ்வினி அரசின் கையில் கவிதைப் புத்தகம் இருப்பதைக் கண்டதும் கேட்டாள்.

"என்ன கவிஞரே! பலமான யோசனை? எந்தக் கவிதையைக் காப்பி அடிக்கலாம் என்றுதானே யோசிக்கிறீங்கள்?"

"என்ன அஸ்வினி சொன்னாய்?, வேறு ஒருவருடைய கவிதையைக் காப்பி அடிக்கிறதுக்கு நான் தருமி இல்லை, பரமசிவன்"

அரசு சொன்னான்.

"என்ன கவிஞரே! கோபம் வந்துவிட்டதோ?, ஸாரி ஸாரி நான் சும்மா தமாசுக்கு சொன்னனான்"

அஸ்வினி கெஞ்சினாள்.

"அதை நான் பெரிசாக எடுக்கவில்லை அசடு"

இப்பொழுதெல்லாம் அரசு அஸ்வினி யிடம் ஏற்பட்ட நெருக்கம் காரணமாக 'அசடு, அசடு' என்றே சொல்லி வருகின்றான். அதை அவள் சீரியசாக எடுக்கவில்லை.

"என்ன அரசு உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு போயிட்டு வந்ததிலி ருந்து ஒரு கவிதையும் வரவில்லை போல இருக்கே?, மலையேறினால் தான் கவிதை தோன்றும் என்றால் நான் ரெடி நீங்கள் எப்படியோ?"

"சும்மா கேலி செய்யாத அஸ்வினி"

"அப்ப யாரு உங்க கற்பனையைத் திருடியது?"

"ஆ என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்?"

"அப்ப யாரு உங்க கற்பனையைத் திருடியது என்கிறேன்" அவள் முதல் சொன்னதையே திரும்பச் சொன்னாள்.

"பொறு, பொறு அஸ்வினி ஒரு அழகான ஆங்கிலக் கவிதையொன்று வருகின்றது"

சிரித்தபடி அவளோடு பேசுவதை நிறுத்திக்கொண்டான். ஆனால் அவன் வாய் புதிதாகத் தோன்றிய கவிதையை அசைபோட்டது.

"தாங்ஸ் அஸ்வினி"

"எதற்கு?"

"நல்ல கவிதையொன்று தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததற்கு"

"பிளீஸ் சொல்லுங்கள் அந்த கவிதையை"

"உனக்குச் சொல்லாமலா?"

அவன் சொன்னான்.

"For thr last week, who kidnapped my imagination"

"உங்களைப்போல இந்தக் கவிதையும் அழகாகவும் அற்புதமாகவும் இருக்கிறது"

"இதுதானே வேண்டாம் என்கிறது"

"நான் பொய் சொல்லவில்லை, உண்மையைத்தான் சொல்லுறன்"

"ஓ! அப்படியா!"

"அது சரி யாரு உங்கள் கற்பனை யைத் திருடியது! ஆணா பெண்ணா?"

"பெண்தன்!"

"யாரந்தப் பொண்ணு?"

"இப்ப சொல்லமாட்டன்"

"எப்ப சொல்லுவீங்கள்"

"சமயம் வரும்போது"

"அந்தச் சமயம் எப்பொழுது வரும்?"

அஸ்வினி அறிவதில் விடாப்பிடியாக நின்றாள். ஆனால் அவன் அந்த பெண்ணின் பெயரைக் கூற கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

"அரசு ஒரு விசயம் சொல்லுகின்றன் கோவிக்க மாட்டிங்கதானே!"

## தொடர் நாவல்

# திசை மாறிய தென்றல்

தொடர்: 5 - அகில், U.K

"இல்லை சொல்லு"

"மலையேறினாத்தான் உங்களுக்கு கவிதை வரும் என்று நான் நினைச்சன், இப்பதான் தெரியுது உங்களுக்கு மொட்டைமாடி ஏறினால்கூட கவிதை வரும் என்று"

அவள் சொன்னது அரசிடம் இருந்து சிரிப்பை வரவழைக்க அச்சிரிப்பு அடங்க பல நிமிடங்கள் எடுத்தது. அப்பொழுதுதான் அரசு கவனித்தான். அஸ்வினியின் கையில் ஒரு புத்தகம் இருப்பதை.

"என்ன கையில இருக்கிற புத்தகம்"

அரசு கேட்டான்.

"ஆ! மறந்தே போயிட்டன். இது ஒரு கவிதைப் புத்தகம். நேற்று எனது நண்பி வீட்ட போனபோது அவர்கள் வீட்டு மேசையில் கிடந்தது. நண்பி யிடம் கேட்டு வாங்கி வந்தனான். இது லேட்டஸ்டாய் வந்த புத்தகமாம்" புத்தகத்தை அவனிடம் கொடுத்தபடி சொன்னாள்.

"அதுமட்டும் இல்லை; இந்த புத்தகத்துக்குள் நான் எழுதிய கவிதையும் இருக்கு பார்த்துச் சொல்லுங்க அது எப்படியிருக்கு என்று"

"என்ன நீயும் கவிதை எழுதியிருக்கிறாயா?" ஆச்சரியக்குறி முகத்தில் படர அரசு கேட்டான்.

"பூவோட சேர்ந்த நாரும் மணக்கும் என்பது தெரியாதா?" அவள் சொல்லிக்கொண்டு இருக்க அரசு கவிதைப் புத்தகத்தைப் பிரித்தான். உடனே அஸ்வினி தடுத்தாள்.

"இப்ப பார்க்காதீர்கள்; நான் கீழே போனபின் பாருங்கள்"

"ஏன் இருங்களன் இப்பொழுதே பார்த்துவிட்டு சொல்லுகின்றேன் அது எப்படியிருக்கிறது என்று"

"இல்லை நான் போகிறேன்" என்று அவள் போய்விட்டாள்.

அவள் போனபின் அவன் புத்தகத்தை விரித்து அந்தக் கவிதையைப் படித்தான்.

"அரசு, ஐ லவ் யு" இப்படிக்கு உங்கள் அஸ்வினி" கவிதை எழுதியிருக்கிறாள் என்று நினைத்து பார்த்தவனுக்கு அவள் இப்படி எழுதியிருந்தது ஆச்சரியமாக இருந்தது. மறுபுறம் அரசுக்கு சந்தோஷம். எதை அவளிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தானோ அதை அவளே சொல்லிவிட்டாள். அஸ்வினி கீழே போன சில நிமிடங்களின் பின் நண்பன் ரவி மேலே வந்தான். அவனைக் கண்டதும் அரசு அஸ்வினி கொடுத்த கடிதத்தை மடித்து பான்ட் பக்கெட்டுக்குள் வைத்தான்.

"என்ன மச்சான் ஒரே சிரிப்புமழையாக இருக்கு அதுதான் வந்தனான்" என்றான்.

"அது ஒன்றும் இல்லை மச்சான் அஸ்வினி சொன்னா, கவிதை எழுதத் தோன்றாவிட்டால் மலையேறச் சொல்லி" நடந்ததை சுருக்கமாக சொன்னான் அவள் கொடுத்த கடிதத்தைத் தவிர. "நல்ல தமாசடா" என்று ரவியும் சிரிக்க அவனுடன் சேர்ந்து அரசும் சிரிக்க அங்கு ஒரு சிரிப்பு மழை உருவானது. மழை ஓய்ந்தபின் இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். கீழே வந்ததும் அரசு குளிக்கப் போகிறேன் என்று சொல்லி விட்டு குளியல் அறைக்குள் ரவி சென்று விட்டான். அப்பொழுது கூடத்திலே அஸ்வினியைத் தவிர யாரும் இருக்கவில்லை. அங்கு போடப்பட்டு இருந்த மேசையில் இருந்து அவள் படித்துக் கொண்டிருந்தாள். அப்படிச் சொல்வது தப்பு. படிப்பதைப்போல பாவனை செய்துகொண்டிருந்தாள் என்று சொல்வதுதான் சரியாக இருக் கும். ஏனெனில் அவளது எண்ண மெல்லாம் இப்ப அரசுக்குக் கொடுத்த கடிதத்தில் அல்லவா இருந்தது.

அரசு உள்ளுக்குள் வர, களவெடுத்த கள்வனைப்போல அரசைப்பார்த்துச் சிரித்தாள். அரசின் கண்கள் நாலு பக்கமும் சுழன்றது. யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று உறுதி செய்ததும் அவளுக்கு மட்டுமே கேட்கக்கூடியதாக ரகசியக் குரலில் "ஐ லவ் யு" என்றான்.

அத்தியாயம்: 6

அன்று வழக்கம்போல அஸ்வினி கல்லூரியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். திடீரெண்டு ஒரு குரல். 'ஹலோ!' "ஹலோ!" என்னையா கூப்பிடுகின்றார்கள். தெரிந்தவர்கள் என்றால் பெயர் சொல்லி கூப்பிட்டிருப்பார்களே என நினைத்து திரும்பிப்பார்க்காது நடையின் வேகத்தைக் கூட்டினாள். அதே குரல் மீண்டும் மிக அருகில் கேட்கவே அதன்பின் நடையின் வேகத்தைக் குறைத்தாள்.

"உங்களைத்தான் கூப்பிட்டனான்"

அவள் நடப்பதை நிறுத்தி குரல் வந்த திசையில் முகத்தைத் திருப்பினாள். சுமார் இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் அங்கு நின்றான்.

"நீங்கள் சிலோனா?"

திடீரெண்டு அவன் இப்படிக் கேட்டதும் அவன்கூட சிலோனாக இருப்பானோ சிந்தனைக்கு அதிக நேரம் கொடுகாது 'ஓம்!' என்றாள்.

"நான் சிலோனாகத்தான் இருப்பன் என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?" அவனிடம் கேட்டாள்.

"உங்களுடைய முகம், நீங்கள் நடக்கும் விதம் இவைகளை வைத்துத்தான்"

"இப்படியும் சமாச்சாரம் இருக்கா?"

"என்னும் எவ்வளவோ சமாச்சாரம் இருக்கு" .......தொடரும்


கல்வி புகட்டுவதில் கடந்த பல ஆண்டுகளாக சாதனை புரியும்

## வீ வீ ரியூரறிங் சென்ரர்

கணினித் துறையில் (computer) காலடி பதிக்கிறது

## SuperNetSolution

இன் கூட்டு முயற்சியில்

**V V Tutoring Centre** இன்

Kennedy வளாகத்தில் (Kennedy & Eglinton)

ஜீன் 15, 2002 ல் வகுப்புகள் ஆரம்பமாகும்

* தரம் 3 முதல் பாடசாலை மாணவர்களுக்கான Computer Courses
* உயர் வகுப்பு மாணவர்களுக்கான
  1. Beginners & Intermediate Java
  2. Beginners & Intermediate C++
  3. Beginners & Intermediate Visual Basic
  4. Web Design & Web Tools
* வேலை தேடுபவர்களுக்கான Computer கற்கை நெறிகள்
* இன்னும் பல.....

தொடர்புகளுக்கு:

**V V Tutoring Centre**

(416) 701-1763 & (905) 471-9794

**SuperNetSolution**

(416)269-9851

info@supernetsolution.com

நம்பிக்கைக்குரிய கல்வி சேமிப்புத் திட்டம்

GLOBAL
EDUCATIONAL TRUST PLAN


**Al Daudlin**
President Agency
Bus: 416-298-7377
Ext. 125


**K. Sree Rajan**
Enrollment Officer
Bus: 416-289-8860
Cell: 416-918-5634


**Praba Jeganathan**
Enrollment Officer
Res: 416-759-3841
Cell: 416-569-3841

**நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் செல்வங்களில் கல்வியே அழியாச் செல்வம்**

**இதோ குளோபல் கல்வி நம்பிக்கைத்திட்டம் உங்களுக்கு இலகுவான கல்விச் சேமிப்புத்திட்டத்தை வழிகாட்டுகிறது**

**இத்திட்டத்தில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நம்பிக்கையுடன் சேர்ந்து பலன் பெறுகிறார்கள்**

*அரசாங்க அங்கீகாரம் பெற்ற பதிவு செய்யப்பட்ட கல்வி சேமிப்புத்திட்டம். இதனால் பெற்றோர்களும் உறவினர்களும் அவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நன்மையடைய வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்.*

*மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச மானியப்பணம் $400 இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருடமும் பெற்றுக் கொள்ளலாம். ஆகக் கூடிய தொகையாக ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் $7,200 பெறலாம்*

*இந்த இலாப நோக்கமற்ற நிறுவனத்தில் வைப்பிடும் நிதி வரிச் சலுகைகளுடன் கூடிய அரச உத்தரவாதமுள்ள நிதி வைப்புகளில் சேமித்து வைக்கப்படுகிறது.*

*உலகின் எங்கும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை இந்த நிறுவனம் அளிக்கின்றது. உங்கள் பிள்ளைகள் உயர்கல்வி பெற முடியாத சந்தர்ப்பங்களிலும் உங்கள் திட்டத்தின்படி கட்டிய பணத்தை அதற்குரிய வட்டி வீதத்துடன் திரும்பப் பெறக்கூடியதான திட்டம்.*

கனேடிய அரசாங்க பிரதம மந்திரி, நிதிமந்திரி இன்னும் பல பிரமுகர்களின் பாராட்டுதலைப் பெற்ற நிறுவனம் உங்கள் இலவச ஆலோசனைகளுக்கு இவர்களை அழையுங்கள்!


**Sam Thiruvarudchelvam**
Agency Director
Bus: 416-298-7377
Cell: 647-272-2913


**Naren Sambasivam**
Associate Agency Manager
Res: 416-287-6997
Cell: 416-706-4858


**Saba Rajeswaran**
Enrollment Officer
Res: 416-750-9022
Bus: 416-757-0333

**2370 Midland Ave., Ste.#A9, Scarborough, Ontario M1S 5C6**
**Tel: 416-298-7377 Ext. 119**




கரு கந்தையா

ROYAL LEPAGE

*For all your Real Estate Needs.........*



வீடு

Karu Kandiah
416-284-4751
416-616-7278


சென்ற வாரத் தொடர்ச்சி....

## கிடைக்கும் வரி மீட்பு (Tax Credit)

நீங்கள் எவ்வளவு தொகையும் இச்மேிப்பில் இட வசதியிருந்தாலும் உங்களுக்குக் கிடைக்கும் வரிமீட்பு முதல் $2000க்கே கணக்கிடப்படும். அதன் 25% அதாவது $500 தனிநபருக்குக் கிடைக்கக் கூடிய அதிக அதிகூடிய Tax Credit ஆகும். வருமானம் கூட வரிமீட்பின் அளவு குறைந்து கொண்டு வரும். இனி இவர் வருமானம் $20000 அல்லது அதற்கு கீழிருந்தால் $500 வரி மீட்புக் கிடைக்கும். வருமானம் 20,000க்கு மேல் செல்லும்போது, ஒவ்வொரு ஆயிரம் மேலதிக வருமானம் வரிமீட்பில் $25 வீதம் குறைக்கும்.

- அதாவது **தனிநபருக்கு**

| வருமானம் | OHOSP சேமிப்பு | வரிமீட்பு |
|---|---|---|
| $ 20,000 | $ 2,000 | $ 500 |
| $ 25,000 | $ 2,000 | $ 375 |
| $ 30,000 | $ 2,000 | $ 250 |
| $ 35,000 | $ 2,000 | $ 125 |
| $ 40,000 ம் அல்லது மேல் | $ 2,000 | $ 0 |

- **குடும்பமாயின்**

| வருமானம் | OHOSP சேமிப்பு | வரிமீட்பு |
|---|---|---|
| $ 40,000 | $ 4,000 | $1,000 |
| $ 50,000 | $ 4,000 | $ 750 |
| $ 60,000 | $ 4,000 | $ 500 |
| $ 70,000 | $ 4,000 | $ 250 |
| $ 80,000 ம் அல்லது மேல் | $ 4,000 | $ 0 |

ஆகவே தனி நபராயின் வருமானம் $ 40,000 மேல் செல்லும் போதும், குடும்பமாயின் வருமானம் $ 80,000 ஐத் தாண்டும் போதும் இச்சேமிப்பினால் இவர்களுக்கு வரிமீட்பு (Tax Credit) இல்லாமல் போய்விடுகிறது.

### இன்னுமொரு விடயம்

இவர்கள் $ 2,000 சேமிப்பிலிடுவதற்குப் பதிலாக $ 1,000 தான் இட்டால் இவருக்கு கிடைக்க வேண்டிய வரிமீட்பில் அரைவாசி தான் கிடைக்கும் என்பதையும் அறிக. ஆகவே முடிந்த அளவு முயற்சி பண்ணி தனி நபராயின் $ 2,000ம் குடும்பமாயின் $ 2000 + 2000 = 4000ம் சேமிப்பிலிடுவது நல்லது. 3 பேர் சேர்ந்து வாங்கும் நிலை ஏற்பட்டால் 3 பேருமே இதைச் செய்தல் நல்லது.முதலில் இச்சேமிப்பை ஆரம்பிக்காதவர்கள் வீடு பார்க்கத் தொடங்கிய உடனேயே இந்தச் சேமிப்பை ஆரம்பித்து விட்டு வீட்டுக்கு Offer கொடுத்ததும் அதை எடுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யலாம். அதற்கும் பிந்தியவர்கள் Offer கொடுத்ததும் உடனடியாகத் தானும் இக்கணக்கை ஆரம்பித்துப் பயனடையலாம்.

முக்கிய குறிப்பு:

இந்தப் பணத்தை வெளியில் எடுக்க 3 வாரங்கள் வரை தேவை என்பதால் Closing Dateக்கு 3 வாரங்களுக்கு முன்னரே அதை வங்கிக்கு அறிவிக்க வேண்டும். இது முக்கியமான விடயம். நீங்கள் வங்கிக்கு அறிவிக்காமல் அந்தப் பணம் உங்களுக்கு Closing Date அன்று கிடைத்துவிடும் என எண்ணி இருந்துவிட வேண்டாம்.

### வீடு வாங்காதிருந்தால் இந்தப் பணத்தை திரும்ப எடுக்கமுடியாதா?

இது பலரும் கேட்கும் கேள்வி பணம் திரும்பப் பெறுவதில் பிரச்சனை இல்லை. நீங்கள் இந்த சேமிப்புக் கணக்கை நிறுத்துவதாயின் OHOSP Termination form ஐ வங்கியில் பெற்று நிரப்பிக் கொடுக்க வேண்டும். அந்த வருடம் ஏதும் பணம் போட்டிருந்தால் அதற்கு Tax Credit கிடைக்காது. அதைவிட சேமிப்பிலுள்ள பணத்தின் 75% உங்களுக்கு நேரடியாகத் தருவார்கள். 25% நிதி இலாகா (Ministry of Finance)க்கு சென்று விடும். அவர்கள் உங்களுக்கு தந்த Tax Credit ம் அதற்கான வட்டியும் மீளப் பெற்றுக் கொண்டு மீதி இருந்தால் உங்களுக்கு தரப்படும். நீங்கள் கட்டவேண்டியிருந்தால் உங்களிடம் அறவிடப்படும்.

**பற்றுச்சீட்டு**

சேமிப்பில் இடும் வங்கியிலிருந்து TIC OHOSP பற்றுச்சீட்டு உங்களுக்கு கிடைக்கும். இதை உங்கள் வருமானவரிப் பத்திரம் நிரப்பி அனுப்பும் தருணத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.

இடும் பணத்துக்கு வரிமீட்பும் அந்தந்த வருடத்திற்கு பெற்றுவரலாம். இச்சேமிப்புக்கணக்கில் வருடாவருடம் சேமிப்புகளை இட்டு வரலாம். ஆனால் 5 வருடங்களின் பின் அந்தச் சலுகை உங்களுக்கு இல்லாது போய்விடும். 7வது வருட முடிவில் வீடு வாங்கினீர்களோ இல்லையோ இச்சேமிப்புக் கணக்கு மூடி ஆகவேண்டும்..

**தொடரும்.....**

# அடியவர்கள் இதயத்தில் சித்திரத்தேர்ப் பெருவிழா

ரஞ்ஜிகன்



தமிழ் ஈழம் எனும் மிக அழகான பூஞ்சோலையில் பூத்த நறுமண மலர்கள் காய்த்து கனியாகி கால வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு பற்பல நாடுகளில் வேரூன்றி வளர்ந்து கலாச்சார பாரம்பரியத்தை மறவாது வாழ்ந்து வருவதுடன் தம்மைப் படைத்து காக்கும் இறைவனை கணநேரமும் மறவாது போற்றியும் வருகின்றனர்.

அங்ஙனமாக பல்கலாச்சார நாடாகத் திகழ்ந்து வந்தவரை வாழ்வித்து வரும் கனடா நாட்டில் உள்ள இந்து அடியவர்கள் ஒருசேர தமது துயர துன்பங்களை ஆற்றவும் மனம் புத்துணர்ச்சி பெறவும் ஆலயம் ஒன்றினை பல்லாண்டுகளுக்கு முன் 'செல்வமலை' எனும் மாநகரில் நிறுவி மகிழ்ந்தனர். அதில் மூல மூர்த்தியாக ஓம்கார வடிவினனாகத் திகழும் விநாயகனை பிரதிஷ்டை செய்து "நீ நாம் கேட்கும் வரங்கள் அனைத்தையும் சித்தி பெறச் செய்வாய்" என அடியவர்கள் விநாயகனைப் பணிந்து வணங்கிவர சித்தி விநாயகர் எனும் திருநாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர். அத்துடன் பரிவார மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்து வணங்கி வரலானார்கள்.

இங்ஙனம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்த திருக்கோயில் கனடா நாட்டில் அமைந்த இந்துக் கோயில்களில் பெரிய கோயில் எனும் சிறப்பிடத்தைப் பெற்று மகா உற்சவங்களையும் நடாத்தி வந்தது. சென்ற வருட கோடை காலத்தில் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. அதன்பின் பல ஆயிரக்கணக்கான அடியவர்கள் மனம் குளிர மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 48 நாட்கள் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்று தனது அருள் சக்தியை ஆலயம் பெருக்கிக் கொண்டது.

அருள் சக்தி பெருகியதால் ஆலய நிர்வாகத்தினரும் திருத்தொண்டர்களும் அடியவர்களும் தமக்கு அருட் செல்வத்தையும் பொருள் செல்வத்தையும் தருகின்ற வரசித்தி விநாயகனுக்கு தமது அளப்பெரிய அன்பை சித்திரத்தேர் எனும் வடிவில் அவர் தம் கமல பாதங்களுக்குச் சென்ற வெள்ளிக்கிழமை 24ஆம் திகதி வைகாசி மாதம் 2002ஆம் ஆண்டு அர்ப்பணித்தனர்.

இனிவரும் காலங்களில் அடியவர்கள் தமது உள்ளத்தில் மீட்டும் வண்ணம் சித்திரத் தேர்ப் பெருவிழா மகிழ்வினை வாசித்து மகிழ்வீர்களாக!

விநாயகனை சித்திரத் தேரில் காணப்போக இருப்பதோடு அல்லாமல் "அவன் அருளாலே அவன்தாள் வணங்க" எமக்கும் அருள் கிட்டி உள்ளது என நினைக்கையில் உள்ளமானது புளகாங்கிதம் அடைந்தது. பல நாட்களாக தாயைக் காணாது தவித்து ஏங்கும் பசுக்கன்று தனது அம்மாவை காண ஒரே குறிக்கோளுடன் ஓடிச் செல்வதுபோல் அதிகாலையிலேயே அவன் தரிசனம் காணச் சென்றோம்.

மிகத் தூரத்திலே கண்களில் தெரிந்த வெண்நிறமான கோபுரம் எமது உள்ளமும் வெண்மையாக என்றும் திகழ வேண்டும் என அறிவுறுத்துவது போன்று காட்சி அளித்தது. ஆலயத்தை மேலும் அண்மிக்கையில் நடை வேகமாகசெல்ல முன்வீதியில் பெருவிழாவின் நாயகனான விநாயகன் எழுத்தருளி அடியவர்களின் ஆணவம், கன்மம், மாயையை அழித்து பேரருளை தர மிக முக்கிய காரணமானதும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேரழகு உடையதுமான சித்திரத் தேரினைக் கண்டோம்; ஆனந்தம் அடைந்தோம்.

பின்னர் ஆலய கீழ் மண்டபத்திற்குச் சென்று பாதணியை வைத்து விட்டு கால் கழுவி வாய் அலம்பி 'செல்வமலை இளவரசன்' வரசித்தி விநாயகனைப் பணிந்து "ஓம் கணபதயே நமக" எனும் மூலமந்திரத்தை மனதார உச்சரித்து வணங்கினோம்.

அந்நேரம் தொடக்கம் சிறுதுளி பெருவெள்ளமாக அடியவர்கள் ஆலயத்திற்கு வர ஆரம்பித்தனர். ஆலயத்தில் தெய்வீகப் பணிபுரியும் அந்தணர்களும் சமூகமளிக்கத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தத்தமது தெய்வ சந்நிதியில் குனிந்து வணங்கி தத்தமது பணியை ஆரம்பித்தனர். நாம் பரிவார மூர்த்திகளான துர்க்கை, நவக்கிரகம், சிவன், திரிபுரசுந்தரி, சுப்ரமணியன், பெருமாள், அனுமான், லக்சுமி, ஆண்டாள், வள்ளி, தெய்வானையை வணங்கியதோடல்லாமல் மகா உற்சவ காலங்களில் இறைவன் எழுந்து அருளும் கொடிமரம், யாகசாலைப் பிரதான கும்பம், வசந்த மண்டப உற்சவ மூர்த்தியையும் முறையாகத் தரிசித்தோம்.

இங்ஙனமாக நேரம் காலை 6:45 ஆகியது. மகா உற்சவ காலத்தை ஆரம்பிக்க 'பதி' எனும் கொடி மரத்தில் 'பாசம்' எனும் தெற்பைக் கயிற்றால் 'பசு' எனும் வெண்ணிற துகிலை ஏற்றி வைத்தவரும் தமிழ் ஈழத்தில் பாடல் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குருக்கள் பட்டர் ஐயாவின் புத்திரனும் எமது சொந்த ஊராகிய உரும்பிராயைச் சேர்ந்த ஐயா பிரம்மஸ்ரீ கேதீஸ்வரநாதக் குருக்கள் 'நவனம்' எனப்படும் ஒன்பது கும்ப பூசையை ஆரம்பித்தார். அவருக்கு அணித்தாக ஈழத்திலே 'பொன்கொடு தீவு' என சிறப்பாகக் கூறப்படும் புங்குடுதீவு அடியவர்கள் குழுமி இருந்து தேர்த்திருவிழா உபயத்தினை தெற்பை அணிந்து சங்கற்பம் செய்தனர்.

ஐயா அவர்கள் புண்யாவாசனம் முடித்ததும் பெரிய கோயிலில் மிகநீண்ட நெடுங்காலமாக இறைவனுக்கு சேவையாற்றுபவரும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் அடியவர்களுடன் அன்பாகப் பண்பாக பழகுபவருமான சிவஸ்ரீ கல்யாண குருக்கள், மூல மூர்த்தியான முழுமுதற் கடவுளுக்கு அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார். முதலில் மஞ்சள்மா (முக வசீகரம்) தொடர்ந்து பஞ்சாமிர்தம் (சகல சம்பத்து), தேன் (குரல்வளம்), பால் (ஆயுள் விருத்தி), தயிர் (நோய் நீக்கம்) எனச் செய்தார். ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் மிக அருள் உள்ளவையா எனக் கண்டறிய பால் அபிஷேகம் செய்து பார்த்தால் உண்மை விளங்கும் எனக் கூறுவர். அது போன்று பெருவிழா நாயகனும் பேரருளை மழை எனப் பொழிவார் எனத் தெரிந்ததுடன் மழையும் தூற ஆரம்பித்தது.

தொடரும்............


தமிழில் உரையாடி சர்வதேச தரம் மிக்க புதிய, பாவித்த



TOYOTA

வாகனங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

Mr. Pillai

416-292-2241 Ext. 239

Cell: 416-565-9080

brimell toyota 30 YEARS

4600 SHEPPARD AVENUE EAST, SCARBOROUGH, ON, M1S 3V5

Visit us on the web www.brimelltoyota.com

“உதயன் 2002” சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற சிறுகதை

ஆக்கம்: எஸ். ஜெகநாதன்

# புலம் பெயர்வு



அது ஒருகுளிர்காலத்து நவம்பர் மாதத் தொடக்கம். வேகமான காற்றுடன் கூடிய வெப்பநிலை பூஜ்ஜத்திற்கு கீழே 13 பாகை என்றும் அறிவித்திருந்தார்கள். போன கிழமைகூட சுமாரான வெப்பநிலையாகத்தான் இருந்தது. திடீரென்று காலநிலையில் மாற்றம். ஓ இது கனடாவாயிற்றே! வானம் மிகத் தெளிவாக இருந்தது. சூரியன் உதித்து இன்னும் ஒரு மணிநேரம்கூட ஆகவில்லை. இது ஒரு ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை. இன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் ஒருவிதமான வெறுமையை காணக்கூடியதாக இருக்கிறது.

தனது முதல் சுற்றின் கடைசி ‘செக் பொயின்ற்’ ஐ முடித்துவிட்டு காவல் அறையை நோக்கி வேகமாக நடக்க முனைகிறார் ‘சண்’. இந்த முனையிலிருந்து காவல் அறை குறைந்தது இருநூறு மீட்டர் தூரமாவது இருக்கலாம். முறையாக குளிர்காலத்து உடை அணிந்துதான் இருக்கிறார். கை இரண்டும் ‘ஜக்கட் பொக்கற்றுக்குள் புதைத்தபடி முகம் மட்டும் மூட முடியவில்லை. மூக்கு, கன்னம் எல்லாம் விறைத்து விட்டது. காற்று வீசும் திசைக்கு எதிராக நடக்கவேண்டி இருக்கிறது. அவ்வப்போது ‘ஜக்கட்டின் கூட்’ வேறு கிளம்பிக் கொண்டிருந்தது. அதனால் பக்கவாட்டாக நடந்து வீசும் காற்றுக்கு முகம் குடுக்காமல் நடக்கலானார்.

மேலே வானத்திலே சற்று மண்ணிறமான பறவைகள். ஓ! இவைதான் கனடா வாத்துக்களோ...! கூட்டம் கூட்டமாக கிட்டத்தட்ட ஆங்கில எழுத்து ‘V” வடிவமைத்து தெற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. அவைகூட ஏதோ அவைகளுக்குப் பின்னால் பயங்கர ஆபத்து வந்து கொண்டிருப்பதைப் போல மிக அவசரம் அவசரமாகப் பறப்பதுபோல் தெரிகிறது. அத்துடன் அந்த பறவைகள் எழுப்பிய ஒலிகூட ஒருவித அவலக்குரல் போன்று அல்லது ஏதாவது செய்தி ஒன்றை மற்றப்பறவைகளுக்குத் தெரியப்படுத்தும் ஒருவித பரிபாஷையோ என்னவோ அல்லது அவைகளது உல்லாசமான பயணத்தின் சந்தோஷ சங்கீதமாகவோ இருக்கலாம். காவல் அறையிலிருந்து சில மீட்டர் தூரத்தில் வந்து கொண்டிருந்த ‘சண்’ மேல் நோக்கிப் பார்க்கிறார். அவருக்கு இது வெறும் அலறலாகத் தான் பட்டது. ஆம் இவை எங்கே போகின்றன. இலை குளிர் காலத்து கனடாவில் வாழப்பிடிக்காமல் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள வெப்பமான சூழல் உள்ள தூர இடங்களுக்குப் பறந்து கொண்டு இல்லை புலம் பெயர்ந்து கொண்டிருக்கின்றன. ‘சண்’ கூட இதுபற்றி வாசித்து அறிந்திருக்கிறார். இதில் வினோதமானது என்னவென்றால் இத்தனை ஆயிரம் மைல்கள் பறந்துபோன பறவைக் கூட்டம் மறுபடியும் கனேடிய கோடை காலத்திற்கு முன்பாக புலம் பெயர்ந்து திரும்பி வருவதுதான். இவை நாட்டுப் பற்றுள்ள கனேடிய பறவைகள் போலும்.

‘சண்’ இற்கு மூக்கில் இருந்து நீர் வடிகிறது. சிந்தவேண்டும் போலிருக்கிறது. ஆனாலும் முடியவில்லை. மனதிற்குள் எண்ணிக் கொள்கிறார். நவம்பரிலிருந்து ஏப்ரல்வரை ஆறுமாதம். குறைந்தது ஐந்து மாதம் வரை இந்தப் பாழாய்ப்போன குளிரைத் தாங்கிக்கொள்ள வேண்டியதுதான். இப்போது மூன்றோ நாலோ கூட்டத்திலிருந்து விடுபட்ட பறவைகள் போலும். அதே அவலக்குரலுடன் திசைமாறி பறந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறார்.

‘ஜக்கட்’ இலிருந்து திறப்புக் கோர்வையை எடுத்து அவசர அவசரமாக கதவை திறக்க முயற்சிக் கிறார். கையுறையுடன் திறப்பை சரியாகப் பிடிக்க முடியவில்லை. ஒரு கையுறையை கழட்டி மற்றக்கையில் பிடித்தபடி வெறும் கையால் ஒருவாறு கதவை திறந்து கொண்டு உள்சென்று கதவை அடித்துச் சாத்துகிறார். மற்றக் கையுறையையும் கழற்றி எறிந்துவிட்டு கையை பிசைந்து ஒன்றோடு ஒன்று உரசி சூடேற்றுகிறார். ‘ஜக்கட்’ஐ கழற்றி கதிரைமேல் போட்டுவிட்டு இந்தக் குளிர் காலத்தையும் இந்த நாட்டையும் திட்டி முணுமுணுத்தவாறு (இந்த முணு முணுப்பு ஒவ்வொரு குளிர் காலத்தி லும் அவ்வப்போது நடப்பதுண்டு. கிட்டத்தட்ட 14 வருடங்களாக) சூடேற்றும் கருவியை நோக்கிச் செல்கிறார். இப்போதெல்லாம் சண்ணிற்கு குளிரைத் தாங்கிக் கொள் வது சிரமமாகத்தான் இருக்கிறது. வயதும் அறுபத்தைந்து ஆகிறதல்லவா. ஆனாலும் இந்த பாதுகாப்பு உத்தி:யோகத்தர் தொழில் இந்த நாட்டைப் பொறுத்தவரை ஒரு பாதுகாப்பான கௌரவமான தொழிலாகத்தான் நினைத்துத் தன்னைத்தானே சாசுவதப் படுத்திக்கொள்வார்.

‘சண்’ணிற்கு சூடாக தேநீர் குடித்தால் நல்லாய் இருக்கும்போல் தோன்றியது. அவர் ஒன்றும் தேநீர் பிரியனல்ல. அவ்வப்போது குடிக்கவேண்டும் என்று போலிருக்கும்போது மட்டும் குடிப்பது வழக்கம்.

“சண்முகநாதன் மாத்தயா, தே எக்க பொமுத” (சண்முகநாதன் ஐயா தேநீர் குடிப்போமா) பியோன் ஹேமபால அவ்வப்போது வந்து கேட்டுக்கொள்வான். வேலை நெருக்கடியில் அவனது நச்சரிப்பு தாங்க முடியாமலே ‘ஆம்’ என்று சொல்வார். சில வேளைகளில் ஐந்தோ பத்தோ கடன் கேட்பதற்காகவும் அவன் தேநீரை ஞாபகப்படுத்துவதுண்டு.

சண்முகநாதன் ஆளணி உத்தியோகத்தராக கடமையாற்றிய அலுவலகம் அது. மீன்பிடி இலாகா அமைச்சு; விசாலமான அலுவலகம்; கிட்டத்தட்ட பதினெட்டுப்பேர்; பெரும்பாலும் சிங்களப் பெண்கள், பியோன் மற்றும் கையெழுத்திற்காக மட்டும் காத்திருக்கும் ஒரு மேலதிகாரி. அந்த அலுவலகத்தி’ல் எல்லாமே சண்முகநாதன்தான். வெறும் சிபாரிசுடன் மட்டும் வேலைக்குச் சேர்ந்த அந்தச் சிங்களப் பெண்கள் விடும் பிழைகளை சினந்து கொள்ளாமல் பார்த்து திருத்திக்கொள்வார்.

“ஹரிம ஹொந்த மாத்தயா” (அருமையான மனுசன்) “ரத்தரன் மாத்தயா” (தங்கமான மனுசன்) இவை எல்லாம் அடிக்கடி இவருக்குக் கிடைக்கும் நற்சான்றிதழ்களும் பாராட்டுகளும். இவர் காதுபடக்கூட பலதடவை கேட்டிருக்கிறார்.

கேத்தல் கொதித்து விசில் அடித்த சத்தம் கேட்டுத் திடுக்கிட்டவர் ‘கப்’இல் தேயிலை ‘பக்கற்றை’ போட்டு குனிந்து கவனமாக சுடுதண்ணீரை ஊத்துகிறார். கழுத்தில் கட்டி இருந்த ‘ரை’ தேநீர் ‘கப்’ இற்குள் தோய்ந்துவிடும் போலிருந்தது. ஒருவரும் இல்லை என்று தெரிந்திருந்தும் ஒருமுறை சுற்று முற்றும் பார்த்துவிட்டு ‘ரை’ஐ மடித்து உருட்டி சேட் பொக்கற்றுக்குள் செருகிவிடுகிறார். தனக்குள்ளே சிரித்துக் கொள்கிறார்.

முதல் முறையாக ‘ரை’ கட்டியபடி இந்த வேலைக்கு கிளம்பிய போது “பார்த்தீரே கமலா! கொழும்பிலை பார்த்த உத்தியோகத்திற்கு ‘ரை’ கட்டிக்கொண்டு போயிருக்கலாம். இங்கே இந்த ‘செக்குரிட்டி’ வேலைக்கு இதைக் கட்ட வேண்டியிருக்கு”

“ஏன் பார்க்க நல்லாத்தானே இருக்கு” இவரது மனைவிக்கு உள்ளூர சந்தோஷமும்தான். கொஞ்சம் சீனியைப் போட்டு கலக்கிக்குடிக்கிறார். சரியான சூடாக இருக்கிறது. தேநீர் ‘கப்’ஐ மேசைமேல் வைத்துவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விடுகிறார். “இந்தக் குளிர் நாட்டை விட்டு திரும்பவும் ஊரிலே போயிருந்தாலென்ன? அடுத்த வருஷம் கனடா பென்சனும் கிடைத்துவிடும். எங்களுக்கென்ன பிள்ளையா? குட்டியா?! ஆக மிஞ்சி இன்னுமொரு ஐந்தோ பத்தோ வருஷம் வாழ்தோமில்லை” இப்படித்தான் சிலவேளைகளில் சஞ்சலப்பட்டுக் கொள்வார். மீண்டுமொருமுறை பெருமூச்சு விடுகிறார்.

என்னமோ தெரியாது இன்று பழைய ஞாபகங்கள் அடிக்கடி வந்து போகின்றன.

அந்தக் கொடிய ஆடி மாத ஒருநாள் சம்பவம் அவர் நெஞ்சிலே மிக ஆழமாகப் பதிந்திருந்தது; இல்லை காயப்படுத்தியிருந்தது என்று சொல்லலாம். பல வருடங்களாகப் பிள்ளை

................தொடர்ச்சி 18 ம் பக்கம்

Century 21
Affiliated Realty Inc.
80 Corporate Dr., Suite 208
Toronto, ON, M1H 3G5
416-290-1200





Santhi Chandran
18 YEARS OF EXPERIENCE

BUSS: 416-290-1200
HOME: 416-286-8071

HOUSE FOR SALE

LESS THAN 5% DOWN

மிகக் குறைந்த முதலீட்டுடன் வீடு வாங்க, விற்க கனடாவில் இத்துறையில் 18 வருடங்கள் அனுபவம் வாந்த

சாந்தி சந்திரனை

அழையுங்கள்

BUSS: 416-290-1200
HOME: 416-286-8071

# உதயன் இராசி பலன்

**07.06.2002 - 13.06.2002**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்**

மனதில் இனம் புரியாத அச்சம் குடிகொண்டுள்ளதை உணர முடியும். செய் தொழிலில் கெட்ட பெயரோடு நஸ்டமும், அவமானமும், சேர்ந்து மனவேதனைகளை சுடர் விடச் செய்யும். உயரதிகாரிகள் உதவி புரிபவர்களாக மாட்டார்கள். பெண்களால் பண விரயம் ஏற்படும். பெற்றோர்களது உடனலம் பாதிப்புறலாம்.

**இடபம்: கார்த்திகை2ம், 3ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ம் , 2ம் பாதங்கள்**

தீயவர்களின் நட்பினால் தீய காரியங்களில் ஈடுபடத் தூண்டும். இதனால் கெட்ட பெயர் அவமானம் போன்றவை ற்படலாம். மன அமைதி அகன்று காணப்படும். செய்தொழிலில் இடையூறுகள் உண்டாகும். மேலதிகதிகாரிகளது ஆதரவிராது. குடும்பத்தில் ஒரு புதிய ஜீவனின் வரவை எதிர் நோக்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3ம், 4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம், 3ம், பாதங்கள்**

செய் தொழிலில் இடையூறுகள் ற்படலாம். கெட்டபெயர் கேட்க வேண்டி வரும். கடன் தொல்லைகளால் கஸ்டங்கள் நிலவம். அவமானப்பட வேண்டிவரும். நோயின் தொல்லை அதிகரித்தக் காணப்படும். குடும்பத்திலொருவர் மிகவும் நோய் வாய்ப்படலாம். மேலதிகாரிகளது அனுதாபம் இருக்கும் குடும்ப உறவு சீராக இராது.

**கடகம்: புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்**

வாகனம் வாங்குவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் காணப்படும். செய்தொழிலின் மூலம் அதிக நன்மைகளை எதிர்பார்க்க முடியும். வாழ்க்கையில் இது ஒரு திருப்பு முனையாக அமையலாம். மேலதிகாரிகள் ஆதரவு காட்டுவதுடன் பதவியுயர்வு, வேலை மாற்றம் முதலியவற்றிற்கும் உதவிபுரிபவர்களாக இருப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.**

பொருள் வரவு காணப்படும். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். புதிய மனை புதிய ஆபரணங்கள் புத்தாடைகள் ஆகியன வாங்குவதற்கான வழிவகை தோன்றும். காதல் விவகாரங்களில் ஈடுபாடு கொண்டொருக்கு இவ்வாரம் நற்பலனைக் கொண்டு வரும். லாட்ரியில் பணம் போட்டவர்கள் அனுகூல பலனடையலாம். சுப காரியம் நடக்கும்.

**கன்னி: உத்திரம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதங்கள்**

செய்தொழில் மிகவம் மந்த நிலையில் காணப்படும். ஆதரவின்மை சம்பவிக்கும். மேலதிகாரிகளின் உதவியோ ஆதரவோ காணப்படமாட்டாது. கவலையம், அமைதிக் குறைவும் வீண் அலைச்சலும் இருக்கக் காணலாம். நண்பர்களிடம் அபிப்பிராய பேதம் ஏற்படலாம். கள்வர் பயம் ஏமாற்றங்களுக்குள்ளாதல், பொருள் இழப்புநேரிடுவதொடு விற்பனையில் நஷ்டம் வரும்.

**துலாம்: சித்திரை 3ம், 4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதங்கள்**

குழந்தைப் பேறு கிட்டும். முன்னர் தடைப்பட்டுக் காணப்பட்ட காரியங்கள் இடையூறுகளின்றிக் கைகூடலாம். இதில் நல்ல ஆதாயத்தையும் எதிர்பார்க்கலாம். தேசப் பிரயாணம், மேற்கொள்ள வெண்டி வரலாம். பிரயாணத்தால் பல நன்மைகள் ஏற்படக் கூடியதாக அமையும். உறவினர் நண்பர்கள் ஆதரவு உண்டு. பந்தயத்தில வெற்றி பெறலாம்.

**விருச்சிகம்: விசாகம்4ம் பாதம், அனுஷம், கேட்டை**

முன்னொன்றும் காணாத மனத்துணிவு ஏற்படும். எந்தக் காரியத்தையும், துணிவுடன் செய்தால் நன்மையடையலாம். காதலில் வெற்றி கிட்டும். லாட்டரி, பந்தயம் போன்ற சூதாட்டத்தில் வெற்றிக்கு வழி காணப்படும். முன் கொபத்தினால் நெருக்கமான நண்பர்களைஇழக்கம் நிலை வரலாம். தீய எண்ணத்தால் அவமானம் ஏற்படும். எதிலும் எச்சரிக்கை வேண்டும்.

**தனுஸ்: மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்**

எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி ஏற்பட வழியுண்டு. செய்தொழிலில் அதிக நன்மை ஏற்பட வழி பிறக்கும். மெலதிகாரிகளது ஆதரவும் உதவியும், வளர்ச்சிக்கு இட்டுச் செல்லக் கூடியதாக அமையம். பெண்களால் பொருள் வரவு காணப்படும். வீடு, வாசல் சொத்து சுகம் கிட்ட வழி சமைக்கும். விருந்துகள் நடாத்தவும், அனுபவிக்கவும் சந்தர்ப்பம் ஏற்படும்.

**மகரம்: உத்திராடம் 2ம், 3ம், 4ம் பாதங்கள், திருவோணம் , அவிட்டம் 1ம், 2ம் பாதங்கள்**

மனைவி மக்கள் மூலமாக தொல்லைகளை எதிர்நோக்க முடியும். வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். உறவினர்களால் விரோதம் ஏற்படும். இடம் விட்டு இடம் மாற வேண்டி இருக்கும். வெளியூருக்கு போக வெண்டி வரலாம். செய்தொழிலில் சிறிது தடங்கலும், ஆதரவின்மையம் இருக்கம். பிற மாதர் சேர்க்கை ஏற்படலாம்.

**கும்பம்: அவிட்டம் 3ம், 4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம், பாதங்கள்**

தன தான்ய விருத்தியேற்படும். நண்பர்களதும் உறவினர்களதும் உதவியும், ஆதரவும் இருக்கம். பொரளாதார வளம் பெருகும். மேலதிகாரிகளது அனுசரணையும், அதரவும் இருக்கும். பதவியுயர்வுகள் கிடைக்கும்.. செய்தொழிலில் சொத்து சுகம் கிடைக்கும்.

**மீனம்: பூரட்டாதி4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வரவைப் பொல் செலவம் அதிகரித்துக் காணப்படும். நண்பர்கள் உறவினர்களால் பதவியுயர்வும் காணப்படும்.குடும்பத்தில் சுப காரியங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படும். செய்தொழிலில் முன்னேற்றம் குன்றிக் காணப்படும். வீண் அலைச்சலும் வெளியூர்ப் பிரயாணங்களால் பொரளிழப்பும், பண விரயமும் ஏற்படும்.

**Do you need a LOAN or MORTGAGE?**

உங்களுக்கு கடன் வசதி Mortgage வசதி செய்து தர வேண்டுமா?

**Mortgage**

(Residential & Commercial)

**Loans**

(Business, Personal, Credit Cards, Line of Credit, Taxi, Taxi plate, Car, Truck etc.)

*Note: No brokerage fees from qualified buyers and interest rate discount up to 1% or 3% cash back and more...*

TARLOCHAN AUJLA (Ph.D)

**ALPHA FINANCIAL SERVICES**

**PHONE: 416-750-1496 CELL: 416-885-1490**

2390 Eglinton Avenue East, Suite 238, Scarborough, ON

THE MORTGAGE ALLIANCE COMPANY OF CANADA

Canada's MORTGAGE Authority

**THE MORTGAGE ALLIANCE COMPANY OF CANADA**



S.K. Bales
(Mortgage Specialist)
(MAC Academy Graduate)

வீடு வாங்கும் போது அல்லது விற்கும் போது உங்களுக்குத் தேவையான அடமானக் கடனை (Mortgage) குறைந்த வட்டி வீதத்தில் ஒழுங்கு செய்வதற்கான கனேடிய அரசாங்க அனுமதியைப் பெற்ற முதல் தமிழ் வீடு விற்பனைப் பிரதிநிதி

- நீங்கள் வீடு பார்த்துக்கொண்டு இருக்கும்போதே உங்களுக்குத் தேவையான அடமானக் கடனை குறைந்த வட்டி வீதத்தில் ஒழுங்கு செய்து (Pre-approval) வைத்திருக்கப்படும்
- நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறினால் (Bad Credit/Bankruptcy) வீடு வாங்க முடியவில்லையா?
உங்கள் கிரடிற்றை (Credit) மறுசீரமைக்க தேவையான இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள்!

**எஸ். கே. பாலேஸ் (வீட்டு அடமான கடனைப் பெற உதவும் நிபுனர்)**

அலுவலகம்: 1-877-366-3487 (24 hr paging) இல்லம்: 416-265-3920 கைத்தொலைபேசி:416-801-3219

(முக்கிய குறிப்பு அன்றாட வங்கி வட்டி வீதத்தை எனது வட்டி வீதத்துடன் ஒப்பிட்டு அறிய எனது web page செல்லுங்கள் www.tmacc.com/skbales

**Century 21**

Affiliate Realty Inc.
Member Broker



S.K. Bales
(Sales Representative)
(Double Degree Holder)

விரும்பிய இடத்தில் உங்கள் வசதிக்கேற்ப குறைந்த விலையில் வீடு தேவையா?

புத்தம் புதிய வீட்டை உங்கள் எண்ணம் போல் நேரடியாக வீடு கட்டுபவரிடம் (Builder) ஆலோசித்து மிகக் குறைந்த வட்டி வீதத்தில் அடமானக் கடன் (Mortgage) வசதிகளையும் இலவச ஆலோசனைகளையும் ஒழுங்கு செய்து தர வேண்டுமா?

உடனே அழையுங்கள் உங்கள் நன்பன்

**எஸ். கே. பாலேஸ் (வீடு விற்பனைப் பிரதிநிதி)**

அலுவலகம்: (416) 290-1200(24 hr paging) இல்லம்: 416-265-3920
கைத்தொலைபேசி:416-801-3219

## அருள்மிகு ஸ்ரீ நல்லூர்க்கந்தசுவாமிகோவில்

***20.Nugget Ave #1 (McCowan/Sheppard)***

**2ம் ஆண்டு கும்பாபிசேகத்தினத்திருவிழா**

காலம் 20.06.2002 வியாழக்கிழமை

ஆனி சுவாதி நட்சத்திர தினமான வியாழக்கிழமை 20-06-02 மாலை 06-00 மணிக்கு நல்லூர்க்கந்தப்பெருமானுக்கு சங்காபிசேகம் (108சங்குகள்) ஆரம்பமாகி வேல்பெருமானுக்கு அடியார்களினால் பால் குடபிசேகம் நடைபெற்று (கஷ்டங்கள்.நோய்கள் நீங்க சிறப்பானதினம்)

மாலை 8.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் வேல் பெருமானுக்கு விசேடஅலங்காரத்துடன் விசேடபூசை நடைபெற்று சுவாமி உள் விதி வலம் வந்து அருள்பிரசாதம் வழங்கப்படும். முருகன் அடியார்கள் அனைவரும் வருகை தந்துநல்லூர்கந்தப்பெருமானின்பால்குடாபிசேகம்,பூசை திருவிழாக்களைக் கண்டு தரிசித்து முருகன் திருவருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்கள் என பணிவன்போடு அழைக்கின்றோம். பால்குடம் எடுக்கவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவும்.

**வள்ளி திருமண மண்டபம் வாடகைக்கு உண்டு**

திருமணமண்டபத்தில் திருமணம்,பூம்புனிதநீராட்டுவிழா பிறந்தநாள் ,கூட்டங்கள்,திவசம் போன்ற வைபவங்களுக்கு மிகுறைந்த செலவில் நிறைவான சேவைபெற தொடர்புகளுக்கு (416) 293 9004


ஜாதகப்பலன்பார்த்தல்,விவாகப்பொருத்தம்,குறிப்புஎழுதுதல்,தோஷபரிகாரம் செய்தல்,வீடுகுடிபுகுதல்,ருதுசாந்திதிருமணம்போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்ளத்தொடர்பு கொள்க. (416) 293-9004 சகல விததுன்பங்களையும், கஷ்டகளையும், தீர்க்கவல்ல பூஜிக்கப்பட்ட யந்திரங்கள் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்:- நல்லூர்கந்தசுவாமி கோவில்.

"உதயன்" வாசகர்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்ற **"ஒரு சிறீலங்கா நாயின் கதை", "மிஸ் ஆச்சி"** ஆகிய நகைச்சுவைத் தொடர்களைத் தொடர்ந்து உங்கள் அபிமான நகைச்சுவை எழுத்தாளர் **"டொன்மில்ஸ்" சிவப்பிரகாசம்** எழுதும் **"பெரியப்பாவின் ஆவி"** என்னும் நகைச்சுவைத் தொடர் உதயன் வார இதழில் தொடர்ந்து வெளிவர உள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். - பிரதம ஆசிரியர்

# பெரியப்பாவின் ஆவி!

## - டொன்மில்ஸ் சிவப்பிரகாசம்



**எ**னது அன்புள்ள வாசகர்களே!

நான்தான் உங்கடை பெரியப்பா. சில மாதங்களுக்கு முன்பு "மிஸ் ஆச்சி" தொடரில் வந்த அதே பெரியப்பாதான்!

இப்போ உங்களால் என்னைப் பார்க்க முடியாது, பேசமுடியாது. ஏன் என்று உங்களுக்குத் தெரியும்தானே! நான் இப்போ மானிட உடலைவிட்டு ஆவி உலகத்திலை இருக்கிறன். ஆனால் என்னால் உங்களைப்பார்க்க முடிகிறது; நீங்கள் கதைப்பதைக் கேட்க முடிகிறது. சிலசமயங்களில் நான் உங்கள் கனவில் வருவேன். அப்போது என்னோடு நீங்கள் கதைக்கலாம். உங்கள் நினைவில் வருவேன். ஆகா....ஆகா.....ஆவி உலகம் எவ்வளவு சந்தோசமான உலகம்! சீ....சீ.....வீணாக இவ்வளவு காலமும் மானிட உடம்பில் இருந்து எத்தனை துன்பங்களை அனுபவித்து விட்டேன்! இதை எல்லாம் உங்களுக்குச் சொல்லி விளங்காது; அனுபவித்தால்தான் தெரியும். எங்களுக்குள் போட்டி இல்லை; பொறாமை இல்லை. தினம் தினம் நல்ல உடுப்புகள் போடவேண்டும் என்று இல்லை. ஏன்? எங்களுக்கு உடுப்புகளே கிடையாது. நல்ல புதுவீடு, கார் இவைகளும் கிடையாது. எல்லா மரங்களும் எமது வீடுகள். நாம் எங்கும் நினைத்தவுடன் காற்றில் நீச்சல் அடிச்சபடியே செல்வோம். மானிடனாக இருந்தபோது சினிமாக்களில் பார்த்திருக்கின்றேன் ஆவி என்றால் எப்படி என்று. ஆனால் இப்போது அனுபவிக்கிறேன். இன்பம்......இன்பம்......

சரி....சரி....அதை விடுங்கோ. அண்டைக்கு கடைசியாக கனடா நாட்டிலை என்ரை உயிர் மானிட உடலை விட்டு பிரிந்த அன்று நடந்த நிகழ்ச்சிகளை சிலசமயம் நான் நினைவு கூர்வதுண்டு. அதை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகின்றேன். பொறுங்கோ பொறுங்கோ என்னோடை வந்த எங்கடை சரவணமுத்தரும் வாறார். சரவணமுத்து........சரவணமுத்து... ஏன் பதுங்கி பதுங்கி வாறாய்? நாங்கள் இப்ப ஆவி உலகத்திலை இருக்கிறம் எண்டதை மறந்திட்டியோ? எங்களை இஞ்சை ஒரு பிள்ளை ஒண்டும் சொல்ல ஏலாது. பயப்படாமல் வா.....வா.... .சரவணமுத்து. தேவையில்லாமல் தமிழன்ரை உடம்புக்கை புகுந்து எல்லாத்துக்கும் பயந்து பயந்து சிங்களவனுக்குப் பயந்து பிறகு தமிழ் இயக்கங்களுக்குப் பயந்து கனடாவுக்கு வெளிக்கிட்டு ஏஜென்சி காறனுக்குப் பயந்து கனடாவிலை வாழ்க்கையைத் தொடங்கி அந்த நாட்டிலை பெற்ற மகனுக்குப் பயந்து மருமகளுக்குப் பயந்து பேரப்பிள்ளைகளுக்குப் பயந்து அந்தப் பழக்கம் ஆவியாகியும் விட இல்லையே சரவணமுத்து. அதுசரி சரவணமுத்து எங்களோடை இருந்த வெள்ளைக் காறியின்ரை ஆவி இங்க சுத்தி சுத்திக்கொண்டு நிண்டாள். எங்கை அவளைக் காணம் என்ற பெரியப்பாவைத் தொடர்ந்து சரவணமுத்தர் "அது பெரியப்பா இப்ப பின்னேரம் காரிலை அடிபட்ட ஒரு வெள்ளையனை கொண்டு வந்தவங்கள். கொஞ்சநேரம் அவனின்ரை ஆவியோடை கதைக்சுக் கொண்டு நிண்டாள். பிறகு இரண்டு பேருமாக சேர்ந்து ஏதோ டேற்றிங் எண்டு போட்டினம்" என்றவரைப் பார்த்த பெரியப்பா "செத்தும் கெட்டான் சீதாக்காலி" என்றபடி சரி....சரி....வா சரவணமுத்து ஒன்பது மணியாகி விட்டுது எங்கடை உடம்புகளை ஐசுப்பெட்டியிலை இருந்து எடுத்து வெளிய வைக்கப் போறாங்கள். எங்களுக்கு அஞ்சலி செலுத்த சனம் வரப்போகுது. வா....வா.... போய்ப் பார்ப்பம் என்றபடி சரவணமுத்தரையும் கையில் பிடித்தபடி வந்தார் பெரியப்பா.

எட எங்கடை சனங்கள்! அங்கை பார் சரவணமுத்து. எவ்வளவு அமைதியா இருக்கினம். பொறு.... பொறு....எங்கடை தில்லையர் திருவாசகம் படிக்கிறார். என்ரை மருமகள்காறி வந்து நிக்கிறாள். ஏதோ சொல்லி....சொல்லி அழுகிறாள் வேறை. நான் நினைச்சன் வரமாட்டாள் எண்டு ஆனால் வந்திட்டாள். வா....வா... என்ன சொல்லி அழுகிறாள் எண்டு கேப்பம்.

"ஐயோ என்ரை மாமா எங்களைத் தனியா அனாதையா விட்டுப்போட்டுப் போட்டியளே மாமா. நீங்கள் இல்லாத எங்கடை வீ:டு நாதி இல்லாமல் நாங்கள் தவிக்கிறோம் மாமா என்ரை மாமா....."

சரவணமுத்து கேட்டியே....கேட்டியே... எப்பிடி நடிக்கிறாள் எண்டு? நாதி இல்லாமல் தவிக்கேல்லை நாய் இல்லாமல் தவிக்கிறாள். வீட்டிலை இவளும் புருசனும் வேலை வேலை எண்டு ஓட நான் பிள்ளையளுக்குப் பின்னாலை காவலுக்கு நாய்மாதிரி ஓட இப்ப அந்த நாய் வீட்டுக்குக் காவல் இல்லாமல் தவிக்கிறாள். இந்த குளிருக்காலை எவ்வளவு நாட்கள் நடையா நடந்து வந்தாலும் ஒரு தேத்தண்ணி போட்டுத் தந்திருப்பாளே! இப்ப....எனக்கு வாற கோபத்துக்கு என்று போனவரைத் தடுத்த சரவணமுத்தர் பெரியப்பா இப்ப நீங்கள் வலுவற்ற ஆவி எண்டதை மறந்து போனியளே! பதட்டப் படாதேங்கோ; அது எல்லாம் மானிடராக இருக்கிற போதுதான். இப்ப சரிவராது என்று சரவணமுத்தர் சொன்னதும் சமாதானம் அடைந்தார் பெரியப்பா.

சரி வா சரவணமுத்து என்ரை பெரிய மகன் ஜேர்மனியிலை இருந்து வந்திட்டான் போல. எட! எந்தப் பெரிய மலர் வளையத்தோடை வாறான். நான் கனடாவிலை இருந்து ஜேர்மனிக்கு வாறன் எண்டு சொல்லி'க் கேட்க கேட்க மௌனமாய் இருந்து பெண் சாதியின்ரை சீலைக்கை மறைஞ்சு இருந்தவன் இப்ப ஏன் மலர் வளையத்தோடை வாறான். பொறு....பொறு சரவணமுத்து சின்னப்பு என்னமோ முணுமுணுக்கிறார் கேட்பம். "ஆ.....ஆ....இவன் எல்லோ பிள்ளை உண்மையிலை பெரியப்பா குடுத்து வைச்சவர். செத்த உடனை மகன் காறன் ஜேர்மனியிலை இருந்து உடனை வந்திட்டான் ஆகா...ஆகா.." இதை பார்த்தபடி பெரியப்பா வா சரவணமுத்து வெளியாலை போய் பார்ப்பம்.

வா...வா....இதிலை நிக்கிறவங்கள் செத்த வீடுகளை சாட்டிக் கொண்டு இதிலை நிற்பாங்கள் உள்ளுக்கும் போக மாட்டாங்கள் இருக்கவும் மாட்டாங்கள். இதிலை நிண்டு கொண்டு பிசினஸ் கதை கதைப்பாங்கள். அங்கைபார் சரவணமுத்து சிவசம்புவின்ரை மகன் விநாயகமூர்த்தி வீட்டு ஏஜண்ட் பக்கத்திலை நிற்கிற நாகநாதனுக்கு மகுடி ஊதி ஊதி அவனை வளைச்சு வீட்டுக்கை சுருட்டி அமர்த்தப்பார்க்கிறான். என்ரை செத்தவீடு எத்தனை பேருக்கு பிசினஸ் இடமாகப் பயன்படுகிது. சுறுக்கர் சுந்தரத்தின்ரை பெடியன் வாறான். சீட்டுக்கு ஆள் சேர்க்கிறான் கண்டியே!

ஓ....ஓ....ஆனந்தன் வாறான். பாவம் இந்த பெடியன். தமிழன்ரை செத்தவீடுகளிலை இவனை சேச்சிலை மட்டும் காணலாம். ஏன் வாறான்? ஆர் செத்தது எண்டு கேள்வி இல்லை. ஆருக்கும் வருவான் ஏன் அரசியல்வாதியோ? எனக்கேட்பாய் சரவணமுத்து. சீ.....சீ....அது எல்லாம் இல்லை. இவனுக்கு துக்க நேரங்களிலை பியர் குடிக்கவேணுமாம். அதுதான் ஊரிலை கள்ளு இஞ்சை பியர் குடிச்சு குடிச்சுக்கொண்டு பிரேதம் எடுக்கும்வரை நிற்பான். பிறகு பிரேதம் எரிச்சதுக்குப் பிறகு "ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" எண்டு பாடிக்கொண்டே போவான்.

அதுசரி சரவணமுத்து உன்ரை உடம்பு வைச்சிருக்கிற இடத்திலை ஏன் ஆட்களைக் காணம். கொஞ்ச தலையள்தான் தெரியுது மிச்சம் எல்லாம் பூ வளையங்களாகக் கிடக்கு என்றவரை தொடர்ந்து சரவணமுத்தர் அது பெரியப்பா நான் கனடாவிலை இருந்த நாள்வரைக்கும் வேலை வேலை எண்டு ஓடித்திரிஞ்சன். நல்லது கெட்டதுகளுக்குப் பொல்லை அனுப்பின கதையா என்ரை மகனை அனுப்பி அனுப்பி விட்டன். அதின்ரை பிரதிபலிப்புதான் இப்ப எல்லாம் பூ வளையங்களா அனுப்பி விட்டிருக்கிறாங்கள் போல. அந்த பழக்கம் இப்ப என்ரை மகனிலையும் தொற்றிப் போட்டுது. அவனையும் காணன். வேலை முடிஞ்சுதான் வருவான். அப்பர் எங்கை ஓடியே போகப்போறார். சேச்சிலை பக்குவமா இருப்பார்தானே எண்டு காலையிலை அவன் தன்ரை மனிசிக்காறிக்கு வீட்டிலை சொல்லிக் கொண்டிருந்தான்.

சரி... சரி வா சரவணமுத்து. இப்ப மூன்று நாளா எங்கடை உடம்புகள் கிடந்து நாறுது. எப்ப எரிப்பாங்களோ தெரியாது. எரிச்சாத்தானே நாங்கள் எட்டுச் செலவைப் பார்த்துப் போட்டு ஊருக்கு ஆலடிக்கு அல்லது அரசமரத்துக்குப் போக வேணும். வா...வா...என்றபடி சரவணமுத்தரைப் பின் தொடர்ந்தார் பெரியப்பா. தொடரும்...........


## வாகன விபத்தா? வழுக்கி விழுதலா?

### நிவாரணம் பெறுவதற்கு நாடுங்கள்

TRAFFIC TKT MORTGAGE CAR ACCIDENT

**K.R.S. AUTO ACCIDENT BENEFIT AND ALLIED SERVICES**

**விபத்துக்குள்ளானால்**

* சட்ட அமுல்பிரகாரம் $100,000 வரை நட்ட ஈடாகப் பெற சாத்தியமுண்டு.
* விபத்து தங்களால் ஏற்பட்டதாகவோ அல்லது பிறரினால் ஏற்பட்டதாகவோ இருந்தாலும் நலன்புரி உரிமையை கோரலாம்.
* விபத்திற்கு தாங்கள் காரணமாக இல்லாவிடில் காப்புறுதி நிறுவத்தினால் அளிக்கப்படும் நலன்புரிச்சலுகை தங்களின் வாகன காப்புறுதிக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாது.
* காப்புறுதி உரிமை சகல உரிமைகளையும் (Comprehensive) அல்லது மூன்றாம் நபர் உரிமை (Third Party) உரிமையைப் பாதுகாப்பதாக இருந்தாலும் உங்களுக்கு காப்புறுதி நலன்புரி கோருவதற்கு உரிமையுண்டு.

**எமது மேலதிக சேவைகள்**

* அடமானக் கடன் மற்றும் கடன்கள்
* வங்குறோத்து நிலைமை
* மொழிபெயர்ப்பு
* வாகன ஓட்டுதல் குற்றச்சாட்டு

பூரணமாகச் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு வாகன விபத்து சட்ட வல்லுனர்களின் ஆலோசனை இலவசமாக வழங்கப்படும்.

2190 Warden Avenue, Suite #202 Scarborough, Ont.
(Warden & Sheppard)
Tel.: (416) 494-3857 Fax: (416) 494-3956

# வாழ்க்கையின் உயர்வை நோக்கி.........

யோகாச்சார்யா வி.என். பரராஜசிங்கம் (416) 266-3413 e.mail:yogacharya@hotmail.com



வாழ்க்கையைப் பற்றி எழுதிக்கொண்டு வருகிறீர்கள். ஆனால் "எமக்கு வாழ்க்கை என்றால் என்னவென்று புரியவில்லை" எனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். ஆராய்ந்து பார்த்தால் "சம்பவங்களின் தொடர்ச்சியே வாழ்க்கை" என்றும் "தேவைகள் எழுவதும் அதைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கும் முயற்சியும்" என்றும் குறிப்பிடலாம். தாயகத்தில் வாழ்க்கை எங்களை உருட்டியது. புலம்பெயர் நாடுகளில் வாழ்க்கையை நாங்கள் உருட்டவேண்டியுள்ளது. எந்தச் சூழ்நிலையானாலும் நாடானாலும் வாழ்க்கை தரும் மகிழ்ச்சி, நிறைவு எவருக்கும் ஒன்றாகத் தானிருக்கும். இந்த வாழ்க்கையை போராட்டங்களாக நிறைவாகப் பார்த்தவர்கள் அனுபவித்த அனுபவங்கள்தாம் நமது கலாசாரப் பாதையைச் செப்பனிட்டது. அவர்கள் நம் முன்னோர்கள். அந்த வாழ்வியல் உண்மைகள் சமய இலங்கியங்களாக கதைகளோடு புராணங்களாக சாத்திரங்களாக எமது பண்பாட்டை எடுத்துச் சொல்லுகின்றன. எமக்கேற்பட்ட பிரச்சனைகள் அவர்களுக்கும் ஏற்பட்டதுதான். அதை அவர்கள் எவ்வாறு அணுகினார்கள்? நாம் எவ்வாறு அணுகுகிறோம்?

வீதி ஒழுங்குப் படங்கள் (Road Map) இருப்பதுபோல்; வாழ்க்கையை உயர்த்த, வெற்றிபெற, பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்ற, நமக்கு நம் பண்பாட்டு விழுமியங்களை அறிய சமய இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படுகின்ற வேதம், வேதாந்தம், திருமுறைகள், புராணங்கள் உதவுகின்றன. 'பழைய பத்தாம் பசலித்தனம்' என்று நிராகரித்த போன தலைமுறைக்கு இன்றைய தலைமுறை அறிவியல் பார்வையில் அவைகளிலுள்ள நவீன டெக்னிக்குகள், உத்திகள், உபாயங்களை விளக்குகின்றன. தமிழரின் எழுதப்படாத சட்டம் அறத்தின் அடிப்படையில் அமைந்தது. "அரசியல் என்ற சமுதாய சேவையில் பிழைவிட்டோரிற்கு அறம் கூற்றுவனாகும்" என்றார் இளங்கோ அடிகள். "தர்மத்தை நீ காப்பாற்றினால், தர்மம் உன்னைக் காப்பாற்றும்" என்றான் கீதையில் கண்ணன். ஒரு சமுதாயம் எதை முக்கியப்படுத்துகிறதோ அது அவர்களின் நாகரீகத்தைக் கூறும். ஆகவே எமது பண்பாட்டிற்கு அடிப்படை அறவழி. அறவழியில் நாம் செல்லுகின்றோமா? என்பதே நம் முன்னுள்ள கேள்வி! அடிபட்டு, அவதிப்பட்டு வந்த எம்மை ஆறுதலளித்து அரவணைத்து ஐந்து வருடத்திலேயே தனது நாட்டவராக்கி எம்மைப் பார்த்துக் கொள்ளும் இந்தக் கனடிய மண்ணுக்கு - இந்தக் கனடியத் தாய்க்கு - நாம் எத்தனைபேர் விசுவாசமாக இருக்கிறோம்? என்பது அனைவரது நெஞ்சங்களிலும் அடிக்கடி எழவேண்டிய கேள்வி. பொது இடங்களில் ஒழுக்கம்மீறி நடந்து எமக்கு அவமானம் தரும் இளசுகள், சமூக நலக்கொடுப்பனவு ஏமாற்றங்கள், கடன் அட்டைக் குழறுபடிகள், கோஷ்டிப் பூசல்கள், வணிகப் போட்டிக் குழம்பல்கள், தனித்தாய் வாழ்க்கைக் கோரங்கள், எட்டாம் கட்டளைப் பிரகடனங்கள் என்பன நம் சமூகத்தில் நன்றித்தன்மை ஒன்று என்று கனடா நாட்டுக்கு காட்டுகிறோமா? எதையும் பூசி மெழுகியே வந்து விட்டோம். சுயவிமரிசனம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மிக அவசியம்.

நாம் பழகிக்கொண்ட பழக்கங்களின் தூண்டுதல்களுக்குச் செவிமடுத்து அவைகளைத் திருப்திப்படுத்துவதே நம் வாழ்க்கையின் இயற்கையான தேவையாகத் தோன்றுகிறது. இப்படி நாம் பூர்த்தி செய்து கொண்ட தேவைகள் எதுவுமே முற்றாகப் பூர்த்தியாக்கப்படவில்லை. பழகிக்கொண்ட எந்தப் பழக்கங்களும் நிறைவானதுமல்ல. இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன? எந்தத் தேவைகள் பிறரைப்பார்த்துத் தனதாக்கிக் கொள்ளப்பட்டனவோ அவை ஒருபோதும் மனத்திற்கு சுதந்திரத்தையும் கவர்ச்சியையும் தருவதில்லை. பழக்கத்தோடு நிறுத்திக் கொள்வது மிருகம்! பழக்கத்தின் அவசியத்தை உணர்வது மனிதன்! ஒரு தனிமனிதன் தன் தேவையை அறியாது பழக்கங்களை வளர்த்துக் கொள்வது மிருகத்தனம் இல்லையா? இங்கு எமது சமூகத்தின் பெரும்பாலான செயல்கள், பழக்கங்களை உருவாக்குவதாக இருக்கின்றனவேயொழிய பழக்கங்களின் அவசியத்தை உணர்த்துவதாக இல்லை. ஓடுகின்ற வெள்ளத்தோடு நாமும் சேர்ந்து ஓடுவதற்கு ஒரு புத்துணர்ச்சியோ புதிய சக்தியோ தேவையில்லை. பழக்கங்களின் உற்பத்தி இடம் சமுதாயமாக இருப்பதால் சமுதாய மாறுதல்களை உன்னிப்புடன் கவனிக்க வேண்டியுள்ளது.

இங்கு வாழும் பெற்றோர்களுக்கு தங்களின் பிள்ளைகளின் நடைமுறைகளைப் பார்த்துக் கலாசார அதிர்ச்சி ஏற்படுகிறது. எண்ணெயில் நீராய்த் தவிக்கின்ற பெற்றோர்களை அறிவேன். அயல் நாட்டு வாழ்க்கை அவர்களுக்கு அலுத்து விட்டது. "எங்கே வாழ்க்கை தொடங்கும்? அது எங்கே எவ்விதம் முடியும்? இதுதான் பாதை, இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது. பாதையெல்லாம் மாறிவரும், பயணம் முடிந்து விடும். **மாறுவதைப் புரிந்து கொண்டால் மயக்கம் தெளிந்துவிடும்"** என்ற சினிமாப்பாடல் வரிகள் இன்றைய நமது அனைவரினதும் நிலையை விளக்குவதாக அமைகிறது.

பிள்ளைகளைப் பெறுவதும் அவர்களுக்கே வாழ்க்கை முழுவதையும் செலவழித்ததுதான் எமது வாழ்க்கையாக அமைந்துவிட்டது. அதையாவது சரியாகச் செய்கிறோமா? என்பதும் கேள்விக்குரிய விடயம். நாம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக - எடுத்துக் காட்டாக நடப்பதில்லை. நம்மில் சொல்வது ஒன்று - செய்வது இன்னொன்று என்பதை அவதானிக்கும் பிள்ளைகள் தாங்களே முரண் பாடுகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்களை முறையாகப் பெற்றோர் வளர்க்கிறார்களா? சலுகைகள் கொடுக்கும்போது கடமையையும் கற்றுத் தரவேண்டும். பணத்தால் மட்டும் பிள்ளைகளின் தேவையைப் பூர்த்திசெய்து பழக்காமல் தங்களது நேரத்தையும் பிள்ளைகளுக்காகச் செலவழிக்க வேண்டும். எத்தனை பெற்றோர் இதை உணர்கிறார்கள்? இலக்கில்லாமல் வளர்க்கப்படும் குழந்தைகள் சுயநலவாதியாக வீட்டிற்கும் சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கும் அசுரர்களாக ஆகிவிடுவதும் உண்டு. அவர்களுக்குப் பள்ளிப்பாடம் மட்டுமல்லாமல் உடலை வலுவாக்கும் உடற்பயிற்சி, யோகக்கலைகள் மனதை வலுப்படுத்தும். நன்நடத்தையை மேம்படுத்தும் தியானம், ஆன்மீக விளக்கும் பயிற்சிகளும் அவசியம். அப்போதுதான் வாழ்க்கையில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் இழக்காமலிருந்து எதையும் சாதிக்கலாம். உள்ளமே ஒரு புன்னகையாக ஆத்மாவே ஒரு பார்வையாக மலரும்! விந்தைகளுக்காக நம் மனம் தேடிக் கொண்டிருக்கிறது. நாம் வாழ்வதோ மாபெரும் விந்தைப் பிரவாகத்தில்!



........தொடர்வேன்

*உதயனில் தொடராக வெளிவந்த இந்தக் கட்டுரைகள் **"வாழ்க்கையை உயர்த்தும் உன்னத எண்ணங்கள்"** என்ற பெயரில் புத்தகமாக அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு ரக்சிடோ சங்கமம் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. வாசகர்கள் அனைவரையும் அழைக்கிறேன்.*


Century 21

Affiliate Realty Inc.
80 Corporate Dr., Suite 208
Toronto, ON, M1H 3G5
416-290-1200



Thiravie Murugesu (B.A Ceylon)
11 வருடங்கள் இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றியவர்



நீங்கள் பசி நோக்காது கண் துஞ்சாது சேர்த்த பணம்
காலவெள்ளத்தில் கரைந்திடாமல்
உங்களுக்கென ஒரு வீடு வேண்டாமா?

வீடு வாங்க, விற்க அடமானம் சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு பெற

அழையுங்கள்
திரவி. முருகேசு

416-290-1200
416-298-8643 Res.

# யமலோக நீதிமன்றம்



பல்கலைச் செல்வன்
முஹம்மது ஹன்ஸீர்



## "யமலோக நீதிமன்றம்" தொடர் நாடகம் -18

*கதை வசனம்: பல்கலைச் செல்வன் முஹம்மது ஹன்ஸீர்*

**"உதயன்" ஏழாவது ஆண்டு நிறைவை ஒட்டிய விஷேட வெளியீடு**

கடந்த வாரத் தொடர்ச்சி.....

**சித்திர புத்திரன்** நீங்கள் டீ. எஸ். சேனநாயக்காவுக்குப் பின் பிரதமர் பதவியை ஏற்றீர்கள்.

**டட்லி சேனநாயக்கா:** ஆமாம் முதன் முதலாக டீ. எஸ். சேனநாயக்கா அவர்களின்பின் பிரதமராகி அதன் பிறகும் பலமுறை பிரதமராகக் கடமை பார்த்துள்ளேன்.

**சித்திர புத்திரன்:** அதனை விபரமாகக் கூறுங்கள்.

**டட்லி சேனநாயக்கா:** எனது தந்தைக்கு அன்று ஏற்பட்ட கதிதான் என் நினைவுக்கு வருகின்றது. நினைக்கவே பரிதாபமாக இருக்கின்றது.

**சித்திர புத்திரன்:** அப்படியா! கூறுங்கள் பார்க்கலாம்.

**டல்லி சேனநாயக்கா:** எனது தந்தை டீ.எஸ். சேனநாயக்கா பிரதமராக இருக்கும் காலத்திலும் கூட அவருக்கு இருந்த குதிரைச்சவாரியின்மீது ஆசை குறையவில்லை. அன்று 1952 மார்ச் மாதம் இருபத்தி ஓராம் திகதி காலி முக மைதானத்திலே குதிரையோடும் பொழுது குதிரையிலிருந்து வீசப்பட்டு விழுந்து காயங்களுக்குள்ளாகி அடுத்தநாள் யமலோகம் வந்துவிட்டார். இதை நினைக்கும் பொழுதெல்லாம் பூலோகத்திலே நான் பெருந் துக்கத் துடன்தான் இருந்தோன். அப்பொழுது அவருக்கு வயது அறுபத்து எட்டு.

**சித்திர புத்திரன்:** அதுசரி பிரதமர் பதவிக்கு என்ன நடந்தது?

**டட்லி சேனநாயக்கா:** அன்றைய மகா தோசிபதியாக இருந்த சோல்பரிப் பிரபு 1952ல் என்னைப் பிரதமராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளச் சொன்னார். நான் அந்த ஆண்டில் பிரதமரானாலும் 1953ஆம் ஆண்டு எனக்கு ஏற்பட்ட வயிற்றுவலி காரணமாகப் பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்தேன்.

எனக்குப் பின் சேர். ஜோன் கொத்தலாவல 1956வரை பிரதமராக இருந்தார். 1956ல் நடைபெற்ற பொதுத் தெர்தலில் சேர். ஜோன் கொத்தலாவல தோற்கடிக்கப்பட்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கா பிரதமரானார். அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 1959 செப்டம்பர் 26ஆம் திகதி யமலோகம் வந்தார். பின் டபிள்யூ. தஹநாயக்கா பிரதமரானார். அதனைத் தொடர்ந்து 1960ல் நடைபெற்ற முதலாவது தேர்தலில் நான் பிரதமரானேன். எனினும் சிம்மாசனப் பிரசங்கத்தில் தோற்கடிக்கப்பட்டேன்.

அவ்வருடம் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலிலே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானார். பின் 1965ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலே நான் பிரதம மந்திரியாகி 1970ல் நடைபெற்ற தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டேன். அதன் பிறகு பிரதமராகவில்லை.

**சித்திர புத்திரன்:** அதாவது மூன்றுமுறை இலங்கையிலே நீர் பிரதமராக இருந்திருக்கின்றீர்!

**டட்லி சேனநாயக்கா:** ஆமாம்

**சித்திர புத்திரன்:** நீர் முதலாவது பிரதமரானதும் உமது ஆட்சிக் கொள்கையை எவ்வாறு அமைத்துக் கொண்டீர்?

**டட்லி சேனநாயக்கா:** எனது தந்தை டீ. எஸ். சேனநாயக்கா அவர்களது கொள்கையிலேயே நானும் இருந்தேன்.

**சித்திர புத்திரன்:** உமது தந்தை டீ. எஸ். சேனநாயக்கா தமிழ் இனத்திற்குச் செய்துள்ள கொடுமையான துரோகங்கள் உமக்குத் தெரியுமா?

**டட்லி சேனநாயக்கா:** கொடுமையா? துரோகமா? அப்படி ஒன்றும் செய்யவில்லையே!

**சித்திர புத்திரன்:** செய்யவில்லையா? டட்லி சேனநாயக்கா அவர்களே நன்கு யோசித்துப் பார்த்துச் சொல்லும். 1948 ஆகஸ்ட் மாதம் குடியகழ்வுச் சட்டத்தைக் கொண்டுவந்து பத்து இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களது குடி உரிமையையும் இல்லாமலாக்கி வாக்குரிமைகளையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி நட்டாற்றில் விட்டது துரோகமா? இல்லையா?

**டட்லி சேனநாயக்கா:** துரோகம் போன்றுதான் இப்பொழுது விளங்குகின்றது.

**சித்திர புத்திரன்:** துரோகம்போன்று இப்பொழுதுதானா தோன்றுகின்றது? சரி அடுத்த கேள்விக்கு வருகின்றேன். தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களது பலத்தைக் குறைத்தது துரோகமா? இல்லையா?

**டட்லி சேனநாயக்கா:** இப்பொழுதுதான் தரோகம்போன்று தோன்றுகின்றது.

**சித்திர புத்திரன்:** இப்பொழுதாவது துரோகம் போன்று தோன்றுகிறதே! கிழக்கு மாகாணத்தில் கரும்புச் செய்கை போன்று வெவ்வேறு காரணங்களைக் காட்டி தமிழ் பேசும் மக்களது காணிகளை அபகரித்துக் கொண்டது துரோகமா? இல்லையா?

**டட்லி சேனநாயக்கா:** துரோகம் போன்றுதான் தோன்றுகின்றது.

**சித்திர புத்திரன்:** துரோகம் போன்றுதான் தோன்றகின்றது எனக் கூறுகின்றீர். அவ்வாறாயின் அதே கொள்கையைத்தானா உமது அரசாங்கமும் மேற்கொண்டது?

**டட்லி சேனநாயக்கா:** என் தந்தை சிங்கள மக்களின் நன்மைக்காகவேதான் செய்தார். நான் எனது தந்தை செய்து முடித்ததைவிட முடிக்காத வேலைகளைத்தான் செய்தேன்.

**சித்திர புத்திரன்:** அவ்வாறு செய்து முடித்ததுதான் என்ன?

**டட்லி சேனநாயக்கா:** விசேடமாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் எனக்கு ஏற்பட்ட வயிற்றுவலி காரணமாக நான் பிரதமர் பதவியிலிருந்து வெளியேறினேன்.

**சித்திர புத்திரன்:** 1960ல் மீண்டும் பிரதமரானீர்.

**டட்லி சேனநாயக்கா:** ஆமாம்.

**சித்திர புத்திரன்:** அதன் முதல் சிம்மாசனப் பிரசங்கத்திலேயே தோற்கடிக்கப்பட்டீர்.

**டட்லி சேனநாயக்கா:** ஆமாம்

**சித்திர புத்திரன்:** அதன்பின் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைத் தோற்கடித்து 1965முதல் 1970வரை பிரதம மந்தி'ரியாகப் பதவி வகித்தீர்!

**டட்லி சேனநாயக்கா:** ஆமாம்

**சித்திர புத்திரன்:** 1965 முதல் 1970 வரை பிரதமராகப் பதவி வகித்த காலத்திலே தமிழ் மக்களுக்கு ஏதேனும் விஷேட சேவை செய்திருக்கின்றீரா?

**டட்லி சேனநாயக்கா:** ஆம் செய்திருக்கின்றேன்.

**சித்திர புத்திரன்:** செய்திருக்கின்றீரா? கூறும் பார்க்கலாம்.

**டட்லி சேனநாயக்கா:** தமிழ் மக்களுக்காக ஒரு மந்திரிப் பதவியைக் கொடுத்திருக்கின்றேன்; வகுப்புக் கலவரங்கள் வரவிடாது தடுத்தி'ருக்கின்றேன்.

**சித்திர புத்திரன்:** என்ன மந்திரிப் பதவியைக் கொடுத்தீர்கள்?

**டட்லி சேனநாயக்கா:** திருச்செல்வம் அவர்களுக்குத் தலத்தாபன மந்திரிப் பதவியைக் கொடுத்தேன்.

**சித்திர புத்திரன்:** அக்காலத்திலே உமது கட்சி அரசாங்கம் அமைப்பதற்குப் போதிய பெரும்பான்மை இருந்ததா?

**டட்லி சேனநாயக்கா:** இல்லை

**சித்திர புத்திரன்:** போதிய பெரும்பான்மை இல்லாமையினால் தமிழரசுக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தீர் அப்படித்தானே!


தொடரும்............




பேன்சி பூக்கடை



**கனடாவின் முதல் தமிழ் மக்களின் பூக்கடை**






- பொதுவாக தமிழ் மக்களின் சேவையே மனதில் பெரிதாகக் கொண்டு அவர்களுடைய திருமணம் மற்றும் மங்களகரமான நாட்களுக்கு
- பூக்கள், மாலைகள், மணவறை விஷேசமாக பூ மணவறை முதலியன வற்றை அழகாகவும், மலிந்த விலையில் குறித்த நேரத்தில் செய்து தரமுடியும்
- மரணச்சடங்குகளுக்கு Wreath, Casket Spray அனைத்தும் அழகாகவும், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

முதன் முதலாக கனடா நாட்டில் நம் சொந்த ஊரில் உள்ளதைப்போன்று அழகான பூமணவறையைச் செய்து கொடுத்து அன்பர்களின் உள்ளத்தில் 14 வருடங்களாக இடம் பிடித்திருக்கும் முதல் பூக்கடை பேன்சி பூக்கடை என்பது சகலருக்கும் தெரிந்ததே

**திருமணம் மற்றும் மங்களகரமான தேவைகளுக்கு ஏற்ற பூ மணவறை, பூமாலை, பூக்கள் வாங்கும் போது உங்கள் கொள்வனவில் 10 வீதத்தை நாம் உங்களுக்கு விரும்பிய கோவில்களுக்கு காசாகவோ அல்லது பூவாகவோ உங்கள் விருப்பப்படி உங்கள் பெயரில் நன்கொடையாக வழங்குவோம்**

1668 Victoria Park Avenue, North York, ON
Tel: 416-288-1419

2119 Eggert Road, Amherst, NewYork, USA
Tel: 1-716-838-0844

# Cisco Training

CISCO SYSTEMS

We Produced **4 CCIEs' IN 4 MONTHS**

| | |
|---|---|
| CCNA | $399. |
| CCNP - Module | $599. |
| CISCO PIX Security | $699. |
| CISCO VPN Security | $699. |
| CISCO MPLS | $699. |
| CCIE Theory | $799. |
| VOICE OVER IP | $799. |
| MCSE 2000 | $2100 |
| UNIX - SOLARIS | $499. |
| CHECK POINT | $499. |
| MCSE 2000- PROFESSIONAL | $399. |
| MCSE 2000- SERVER | $399. |
| SQL ADMINSTRATION | $399. |
| A+ CERTIFICATION | $499. |

**FREE CCNA or MCP FOR EI RECIPIENTS**

The courses are designed by:

*Visit Our Lab.....*

- ISDN lines, ADSL Line & Frame Relay Circuit
- 60 Cisco Routers- 7500, 4500, 4000, 3600, & 2500
- Catalyst 5500, 5000, 3920 & 1900 Switches



**A. HARITH K.**
MS Certified Trainer
B.Sc. Eng., MIBM, CNE, MCSE, MCT, CCNP, CCDP,
Cisco Security Specialist,
CCIE #8661

## WinNET SYSTEMS

HI-TECH TRAINING & CONSULTING

MISSISSAUGA
905-949-TEST

TORONTO
1200 Eglinton Ave. East, Suite 100, Toronto,
(Don Mills & Eglinton)

SCARBOROUGH
416-299-TEST

**Tel: 416-447-TEST (8378)**

1-877 3-WINNET www.winnetsystems.com email:teachme@winnetsystems.com

Since 1965 USC EDUCATION SAVINGS PLANS
36 ஆண்டுகள் / அரச அங்கீகாரம் / இலாப நோக்கமற்றது
அரசின் GRANT $400.00 இலவசம்
இலவச ஆலோசனைகளிற்கு அழையுங்கள்!
தயாபரன் ஆறுமுகம்
Cell: 416-889-3088 , 905-426-6624

Century 21
வீடு விற்க, வாங்க, குறைந்த வட்டியில் Mortgage செய்து கொள்ள அழையுங்கள்
ரஜீவ் கோணேஸ்வரன்
4544 SHEPPARD AVE. EAST, SCARBOROUGH

S.K.T. JEWELLERS AND TEXTILES LTD.
நகரில் எங்குமே காணமுடியாத நவீன டிசைன் நகைகள் ஆயிரக்கணக்கான தெரிவுகளில்....
மங்கையர், ஆடவர் சிறுவர், சிறுமியருக்கான சகல ஆடை வகைகளும்
WARDEN & LAWRENCE
Tel: 416-615-0197

நோர்விச் யூனியன்
• நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்
Call: T. K. THEVARAJAH
Tel : (905) 471-9061 Fax: (905) 471-2202
NORWICH UNION

வெள்ளிக்கிழமைகளில்
பத்திரிகை விநியோகம்
செய்வதற்கு
ஆட்கள் தேவை.
Tel: 416-433-5465

UTHAYAN WEB:
www.uthayan.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

(416) 752-1524 (416) 752-6703

Dr. Raveendran. S.
BDS, MS, FDSRCS (Eng.)
பல் வைத்தியர்
அழகான ஆரோக்கியமான புன்னகைக்கு
MISSISSAUGA
102 - 3025 Hurontario St.
905-270-7844
SCARBOROUGH
303 - 3852 Finch Ave. E.
416- 292-7004

KUGANANTHY RAVINDRAN
B.D.S.M, M.S., F.D.S.R.C.S. (ENG)
குகாநந்தி ரவிந்திரன்
குடும்ப பல்வைத்தியர்
1371 Neilon Road, #212., Scarborough
416-281-7555

உதயம்: 320 Chief Editor: R. N. Logendralingam 07. 06. 2002 FRIDAY

LAW OFFICES
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public
ஸ்காபரோ அலுவலகம்
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, ON M1H 3B7
Tel: 416-265-3456
மிசிசாகா அலுவலகம்
Tel: 905-306-1100

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய $35.00 மட்டுமே

வீடு வாங்கவும், விற்கவும் இலவச ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்
Nel Ketha B.Sc. (Ag)
Sales Representative
Office 416-491-4002
Direct: 416-677-4707
N.B.: MORTGAGE குறைந்த வட்டி வீதத்தில் செய்து கொடுக்கப்படும்.
CROSSROADS REALTY INC. REALTOR
Nobody sells more real estate than Remax!

Personal Loan Line of Credit
Credit Card
மற்றும் கடன் சம்பந்தமான தேவைகளுக்கு அழையுங்கள்
ரவி 416-562-3815

முற்பக்கத்தொடர்ச்சி

நாளை சனிக்கிழமை நண்பகல் வரை அங்கு பொதுமக்கள், தலைவர் சிவாவுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது . பின்னர் பொதுமக்கள் அஞ்சலிக்காக கரவெட்டியில் உள்ள சிவாவின் இல்லத்திலும் பூதவுடல் வைக்கப்படும். மறுநாள் ஞாயிறு காலை சமயக்கிரியைகள் முடிவடைந்த பின்னர் கரவெட்டி அத்துளு நீர்த்திட்டப் பகுதியில் உள்ள திறந்த வெளியில் முற்பகல் 11 மணிக்கு அஞ்சலி உரைகள் இடம்பெறும். அதன் பின்னர் சோனப்பு மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம் பெறும். இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுவதற்காக அமரரின் மனைவி, மகள் ஆகியோர் இந்தியாவிலிருந்து நேற்று கொழும்பு சென்றடைந்தனர். அவரது மகன் லண்டனில் இருந்து கொழும்புக்கு இன்று வெள்ளிக்கிழமை செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும், உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.ஜனார்த்தனனும் நேற்று வியாழக்கிழமை இந்தியாவிலிருந்து கொழும்பு சென்றனர்.

இதே வேளை மூத்த அரசியல் தலைவர் எம். சிவசிதம்பரத்தின் பூதவுடலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் நேற்று வியாழக்கிழமை மாலை அஞ்சலி செலுத்தினர். திம்பிரிகஸ்யாயவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அமரரின் புகழுடலுக்கு பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், டிரோன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க, கருஜெயசூரிய, மஹிந்த ராஜபக்ஷ, ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் சகிதம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

எதிர்க்கட்சியினர் சார்பில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான உறுப்பினர்களும், இடதுசாரித் தலைவர்களான ராஜா கொலுரே, அத்தாவுட செனவிரத்ன ஆகியோரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கட்சி ஆலோசகர் விக்கினேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட பொறுப்பாளர் ஜெகன் ஆகியோர் சகிதம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

பெரும் எண்ணிக்கையான அரசியல்வாதிகளும் ராஜதந்திரிகளும் பொதுமக்களும் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

## இசைக்கு ஏது எல்லை - 4

நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை
சென்ரானியல் கல்லூரி
கலையரங்கில் (75 அஸ்ரோன்பீ
**Warden & Eglinton**) மாலை
6:30 மணி அனுமதி 10 டொலர்,
இசைபயிலும் மாணவர்களுக்கு
5 டொலர்
ரிக்கட்டுகளுக்கு: செல்வசேகரா
நகைமாளிகை- 416-285-7269,
சுபீனா 416-638-9554,
ஞானம்ஸ் 416-750-8118

Email:sv_productions@hotmail.com
The Art of Videography
Weddings Entertainment 3-D ANIMATION Broadcast Quality NON-LINER EDITING
T.V Production Multi-Camera JIB ARm (32 Feet crane)
OFFICE: 416-299-9030
CELL : 416-200-9080
2250 Midland Ave. Unit 25
Scarborough, ON
SV Production

TOP QUALITY DIAPERS
PREMIUM BABY DIAPERS
DIRECT IMPORT FROM USA
MEDIUM SMALL LARGE EX.LARGE SIZE 6 ADULTS DIAPERS
BABY WIPES 3/$8.99
OPEN 8 DAYS A WEEK
FREE DELIVERY
416-499-8517 • 416-399-4497



## தவறுக்காக வருந்துகிறோம்.

கடந்த வார "உதயன்" பத்திரிகையில் சந்திராஸ் உணவகம் நடத்திய வைபவம் தொடர்பாக வெளிவந்த செய்தியொன்றில் மேலே காணப்படும் படத்திற்கு அடியில் காணப்பட்ட குறிப்பில் சந்திராஸ் உணவக ஊழியர் கௌரவிக்கப் பட்டதாக தவறாக குறிப்பிடப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து சந்திராஸ் உணவக அதிபர் எமக்கு மேற்படி தவறை சுட்டிக்காட்டி படத்தில் நடா ராஜ்குமாரிடம் இருந்து பரிசைப்பெறுபவர் அதிஷ்டக் குலுக்கலில் இரண்டாவது பரிசு பெற்ற திருமதி எஸ். அரியமலர் என்பதை திருத்தி பிரசுரிக்குமாறு கூறினார்.

அதற்காக நாம் மேற்படி படத்தை மீளவும் பிரசுரித்து தவறுக்காக எமது மனவருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

–உதயன் நிர்வாகம்–

செந்தியின்
நிர்வாகத்தில்
ஓர் அச்சுக்கூடம்
உங்கள் அச்சுத் தேவைகளுக்கு
ஆதவன் அச்சகம்
ஸ்காபரோ
(கென்னடி எக்லிங்ரன் சந்திப்புக்கருகில்)
(416) 615-4646

NKS
Custom made
• Vertical Blinds
• Venetian Blinds
• Draperies
• Curtains
• Shutters
FREE
Estimates & Installation
Call: Ketha
Tel: 416-321-6420
Tel: 905-944-0218
210 SILVER STAR BLVD., #825, SCARBOROUGH ON M1V 5J9

வீடு வாங்க விற்க இலவச ஆலோசனைக்கு
செல்வா செல்வதுரை
(10 Years experience with satisfied clients)
Tel: 905-275-9400
President Gold Award Winner www.selvahome.com
ROYAL LePAGE